Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 01, இதழ் : 45 சார்வரி வருடம், ஆவணி மாதம் 05ஆம் திகதி வெள்ளிக்கிழமை (21.08.2020) ஹிஜ்ரி - 1442, முஹர்ரம் பிறை-01, 0115886187 பக்கங்கள் 12 விலை ரூ.20

## நாடாளுமன்றத்தில் தீ!

ஜனாதிபதி உரையாற்றிக் கொண்டிருந்த சமயம் நாடாளுமன்ற கட்டிடத் தொகுதியில் நேற்று தீ விபத்துச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது. தளபாட களஞ்சிய அறையொன்றில் புகைபிடித்த ஒருவரால் வீசப்பட்ட சிகரெட் ஒன்றின் மூலம் இந்தத் தீ ஏற்பட்டுள்ளது. தீ பரவாமல் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டாலும் அது தொடர்பில், நாடாளுமன்ற படைக்கல சேவிதர் விசாரணை நடத்தி வருவதாக சொல்லப்பட்டது

## நக்கல்நமசிவாயம்






# புதிய அரசியலமைப்பே உடனடித் தேவை!

### அரசின் கொள்கை விளக்கவுரையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ திட்டவட்டம்

- ★ முதலாவது பணியாக 19ஆவது அரசியலமைப்புத் திருத்தம் இரத்து
- ★ தேர்தல் முறைமையில் மாற்றம்
- ★ அரச தொழில் வழங்கலில் வறிய குடும்பங்களுக்கு முன்னுரிமை
- ★ வீண்விரயம் – ஊழலுக்கெதிராக கடும் நடவடிக்கை
- ★ மக்களின் காணிகளுக்கு உரிய உறுதிகள் வழங்கப்படும்

02


படப்பிடிப்பு : பிரதீப் தம்பரகே



நாடாளுமன்றத்தில் நேற்று கைகூப்பியபடி தியான நிலையில் இருந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன...

படப்பிடிப்பு : பிரதீப் தம்பரகே

## சபாநாயகராக தெரிவானார் மஹிந்த யாப்பா!



படப்பிடிப்பு : லலித் பெரேரா

- ★ பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய
- ★ குழுக்களின் பிரதித் தலைவராக அங்கஜன் ராமநாதன்
- ★ எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ

03



## படகில் நாடாளுமன்றம் வந்த மதுர எம்.பி.

9ஆவது நாடாளுமன்றத்தின் கன்னி அமர்வு நேற்று நடைபெற்ற நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் படகு வழியாக நாடாளுமன்றத்திற்கு வந்தார்.

கோட்டை மாநகர சபையின் முன்னாள் மேயர் மதுர விதானகே, தியவன்னா ஏரியை படகில் கடந்து நாடாளுமன்றத்திற்கு வந்தார்.

03

படப்பிடிப்பு : டி.கே. அபேரத்ன

## தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரியுங்கள்

### முதல் உரையிலேயே முழங்கிய விக்கி!



நாடாளுமன்ற உறுப்பினராக தனது கன்னி உரையை ஆற்றிய முன்னாள் வடமாகாண முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன், தமிழர் உரிமைகளை அங்கீகரிக்கும்படி அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தார்.

வடக்கு மற்றும் கிழக்கில் வாழும் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு என்றும் அவர் வலியுறுத்தினார்.

ஒவ்வொரு செயலுக்கும் அதன் எதிர்வினை இருக்கும் என்றும் விக்னேஸ்வரன் குறிப்பிட்டார்.

03

## நாடாளுமன்ற உணவகத்தில் கோட்டாவுடன் நீண்ட நேரம் உரையாடிய ஹாபிஸ் நஸீர் எம்.பி.



புதிய நாடாளுமன்றத்தின் ஜனாதிபதியின் கொள்கை விளக்கவுரை நேற்று நடைபெற்ற பின்னர் நாடாளுமன்ற உணவகத்தில் நடந்த தேநீர் உபசரிப்பு நிகழ்வின்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹாபீஸ் நஸீர் நீண்ட நேரம் உரையாடியதை காண முடிந்தது.

முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபீஸுடன் அரசியல் நிலைவரங்கள் குறித்து கருத்துப் பரிமாற்றம் செய்த ஜனாதிபதி கோட்டாபய, அரசின் நல்ல திட்டங்களுக்கு ஆதரவைத் தருமாறு கேட்டாரென எமது நாடாளுமன்ற செய்தியாளர் தெரிவித்தார்.

ஏற்கனவே கிழக்கு மாகாண முதலமைச்சராக பணிபுரிந்த சமயம் அப்போதைய மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியின் அரசுக்கு தேவையான ஒத்துழைப்பினை வழங்கிச் செயற்பட்டதை நினைவுகூர்ந்த ஹாபீஸ் எம்.பி., மட்டக்களப்பு மக்களின் முக்கிய பிரச்சினைகள் குறித்து பேச நேரம் தருமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தாரெனவும் அறியமுடிந்தது.



## ஜனநாயக வழிக்குத் திரும்பிய என்னை நல்லாட்சி பழிவாங்கியது

### சபையில் பிள்ளையான் தெரிவிப்பு!

விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினராக இருந்த போதும், ஜனநாயக வழியை ஏற்றுக்கொண்டு அரசியல் செய்து வருவதாக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் தலைவர் சிவனேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

சிறுவர் போராளியாக விடுதலைப் புலிகளில் இணைந்து பின்னர் அவர்கள் தவறான வழியில் சென்றதால் வெளியேறி ஜனநாயக வழியில் நுழைந்தபோதும் நல்லாட்சி அரசு தன்னை...

03

அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.



# உடனடித்தேவை...

- நமது நாடாளுமன்ற செய்தியாளர் -

***ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் கன்னியமர்வில் அரசின் கொள்கை விளக்கவுரையாற்றிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ,தமது அரசின் திட்டங்களை விளக்கினார். அவரின் முழுமையான உரை பின்வருமாறு;***

ஒகஸ்ட் மாதம் 5ஆம் திகதி இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தல் இலங்கை தேர்தல் வரலாற்றில் புரட்சியொன்றை ஏற்படுத்திய ஒரு முக்கிய தேர்தலாகும். ஸ்திரமான ஆட்சியொன்றை ஏற்படுத்துவதற்காக 2/3 அதிகாரத்தைப் பெற்றுத் தருமாறு நாம் மக்களிடம் கேட்டிருந்தோம்.

வரலாற்றில் முதற் தடவையாக விகிதாசார முறைமையின் கீழ் இடம்பெற்ற தேர்தல் ஒன்றில் 2/3 வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மக்கள் ஆணையை ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்கும் அதன் நட்பு அணிகளுக்கும் பெற்றுத்தந்த நாட்டுப் பற்றுடைய மக்களுக்கு நான் முதலில் எனது நன்றியை தெரிவிக்கிறேன்.

சர்வஜன வாக்குப்பலம் நாம் அனைவரும் மதித்துப் பாதுகாக்கவேண்டிய ஜனநாயக உரிமையாகும். எனவே, இந்தத் தேர்தலில் தமது பெறுமதியான வாக்கை பயன்படுத்திய அனைத்து இலங்கை வாக்காளர்களுக்கும் நான் இச்சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவிக்கிறேன்.

கடந்த வருடம் நொவம்பர் மாதம் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் 69 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் மிகப்பெரும் மக்கள் ஆணையை வழங்கியது என்மீது வைத்துள்ள நம்பிக்கையின் காரணமாகவாகும். அந்த நம்பிக்கையை காப்பாற்றுவேன் என நான் வழங்கிய உறுதிமொழியை இதுவரையிலான எனது செயற்பாடுகளின் மூலம் நிரூபித்திருக்கிறேன்.

ஜனாதிபதித் தேர்தல் முதல் நாடாளுமன்றத் தேர்தல் வரையான காலம் எமக்கு மிகவும் சவால்மிக்க ஒரு காலப்பகுதியாக இருந்தது. வீழ்ச்சியடைந்திருந்த ஒரு பொருளாதாரத்தையே நாம் பொறுப்பேற்றோம். நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாத காரணத்தினால் நாம் சிறுபான்மையான ஒரு அரசாங்கத்துடனேயே செயற்படவேண்டியிருந்தது. இதற்கு மேலதிகமாக எமக்கு இக்காலப்பகுதியில் முழு உலகையும் ஆட்கொண்டிருந்த கொவிட் - 19 நோய்த் தொற்றுக்கு முகங்கொடுக்கவேண்டியதாயிற்று. கொவிட் - 19 நோய்த்தொற்றுக்கு மத்தியில் உலகின் முக்கிய நாடுகள் கூட முடங்கியிருந்த நிலையில், அந்தச் சவாலுக்கு வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்கு எமக்கு இயலுமானது. நோய்த் தொற்று நிலைமை பரவுவதை கட்டுப்படுத்துவதற்காக நாம் மேற்கொண்ட நடவடிக்கைகள் வெளிநாடுகளினதும் பாராட்டைப் பெற்றன.

இந்த ஒன்பது மாதக் காலப் பகுதியில் பல்வேறு தடைகளுக்கு மத்தியில் நாம் நாட்டை நிர்வகித்த முறைபற்றி நாட்டு மக்கள் தெளிவுடன் உள்ளார்கள் என்பதை ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்கு கிடைத்துள்ள மிகப்பெரும் மக்கள் ஆணை எடுத்துக்காட்டுகிறது. அரசியல் கலாசாரத்தில் ஏற்பட்டுவரும் மாற்றத்திற்கு மக்கள் மதிப்பளித்து வ ருகின்றனர்.

மக்கள் பிரதிநிதிகளாக பெரும்பான்மை மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு நாம் எப்போதும் மதிப்பளிக்கிறோம். மக்களின் இறைமையை பாதுகாப்பதற்கு அப்போதுதான் முடியுமாக இருக்கும்.

எமது நாட்டு அரசியலமைப்பின் பிரகாரம் எனது பதவிக்காலப் பகுதியில் நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாப்பதாகவும், பௌத்த சாசனத்தை பாதுகாத்து வளப்படுத்துவதாகவும் நான் உறுதியளித்திருக்கின்றேன். அதற்கேற்ப அரச நிர்வாகத்துக்காக ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நான் முன்னணி பௌத்த பிக்குகளைக்கொண்ட ஆலோசனை சபையொன்றை அமைத்துள்ளேன். அதேபோன்று தொல்பொருள் பெறுமதிவாய்ந்த இடங்களை பாதுகாப்பதற்கும் எமது பௌத்த மரபுரிமைகளை பாதுகாப்பதற்கும் நான் விசேட செயலணியொன்றை அமைத்துள்ளேன்.

பௌத்த சமயத்திற்கான முன்னுரிமையை உறுதிசெய்யும் அதேநேரம், இந்த நாட்டின் எந்தவொரு பிரஜையும் தாம் விரும்பும் சமயத்தை பின்பற்றுவதற்கான சுதந்திரம் மிகச் சிறப்பாக பாதுகாக்கப்பட்டுள்ளது என்பதுவும் மக்களுக்கு தற்போது தெளிவாகியுள்ளது. எமது பாரம்பரிய மரபுரிமைகளையும் கலாசாரத்தையும் பாதுகாப்பதற்கும் கிராமிய கலைகளை பாதுகாத்து மேம்படுத்துவதற்கும் அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது.

2019ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலின் காரணமாக நாம் அரசாங்கத்தை பொறுப்பேற்கும்போது மக்கள் மத்தியில் நாட்டின் பாதுகாப்பு பற்றிய நம்பிக்கை பெருமளவு வீழ்ச்சியடைந்திருந்தது. எமது அரசாங்கத்தின் முக்கிய கொள்கை, நாட்டின் பாதுகாப்பாகும் என்பதை உறுதிசெய்து பாதுகாப்பு மற்றும் புலனாய்வுத்துறையை மறுசீரமைத்து மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அச்சத்தைப் போக்கி நாட்டின் பாதுகாப்பை மீண்டும் உறுதிப்படுத்துவதற்கு நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். எந்தவொரு பிரஜைக்கும் தனதும் தனது குடும்பத்தினதும் பாதுகாப்புப் பற்றி எவ்வித அச்சமுமின்றி சுதந்திரமாக வாழக்கூடிய சூழலொன்றை நாம் மீண்டும் ஏற்படுத்தியிருக்கிறோம்.

நான் உறுதியளித்தவாறு பொதுவான மக்கள் வாழ்க்கைக்கு தடையாகவுள்ள பாதாள உலக செயற்பாடுகள், போதைப்பொருள் பிரச்சினை போன்ற சமூக சீரழிவுகளிலிருந்து மக்களை மீட்பதற்காக முறையான வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டிருப்பது மக்களின் நம்பிக்கை மேம்படுத்துவதற்கு காரணமாகியுள்ளது.

நாம் உறுதியளித்தவாறு ஒழுக்கமான, பண்பாடான, சட்டத்தை மதிக்கும் சமூகமொன்றை கட்டியெழுப்பி வருகின்றோம். இந்த நாட்டின் அரசியல் கலாசாரத்தில் தெளிவானதொரு மாற்றத்தை செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். நான் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட பின்னர் அரச நிறுவனங்களுக்கு தலைவர்களை நியமிப்பதற்காக அதுவரையில் இருந்துவந்த சம்பிரதாயங்களை மாற்றி நிபுணர் குழுவொன்றினூடாக தகைமைகளை கண்டறிந்து நியமனங்களை மேற்கொள்ளும் முறையான பொறிமுறையொன்று அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. குடும்பத்தினர், நண்பர்கள், தனக்கு வேண்டியவர்களை நியமிக்காது தொழில் வல்லுனர்கள், தொழில் முயற்சியாளர்கள், கல்வியியலாளர்களைக்கொண்ட அனுபவம் வாய்ந்த குழுவொன்று நியமிக்கப்பட்டது. இந்தக் கொள்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்.

அதேபோன்று நாம் உற்பத்தி பொருளாதாரமொன்றை கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு தமது உற்பத்திகளுக்காக அதிக விலையை பெற்றுக்கொடுத்துள்ளோம். ஏற்றுமதி பயிர்களை மீள் ஏற்றுமதி நடவடிக்கைக்காக இறக்குமதி செய்வதை நிறுத்தியும், இந்த நாட்டில் பயிரிட முடியுமானவற்றை இறக்குமதிசெய்வதை முழுமையாக நிறுத்தியும் சுதேச விவசாயிகளை பாதுகாப்பதற்கு நாம் நடவடிக்கை எடுத்தோம். விவசாயிகளுக்குத் தேவையான உரத்தை இலவசமாக வழங்கினோம். நாடளாவிய ரீதியில் கைவிடப்பட்டிருந்த விவசாயக் காணிகளில் மீண்டும் பயிரிடுவதற்கு மக்களை ஊக்குவித்தோம். இவை அனைத்தினூடாகவும் நாம் இந்த நாட்டின் விவசாயத்துறைக்கு புத்தெழுச்சியை ஏற்படுத்தியிருக்கிறோம்.

நாம் அதிகாரத்திற்கு வந்ததன் பின்னர் சுதேச தொழில் முயற்சியாளர்களை இலக்காகக்கொண்டு வரிச் சலுகையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தோம். வியாபாரத்துறையை வலுவூட்டுவதற்காக வட்டி விகிதத்தைக் குறைத்தோம். உள்நாட்டு வர்த்தகர்கள், தொழிற்றுறையாளர்களை பாதுகாப்பதற்காக போட்டித்தன்மை வாய்ந்த இறக்குமதிகளை மட்டுப்படுத்தினோம்.

இந்தத் தேர்தலில் மக்கள் உற்சாகமாக எமக்கு ஆதரவு வழங்கியிருப்பது இந்த வகையில் எங்களைப்பற்றி அவர்கள் மத்தியில் கட்டியெழுப்பப்பட்டுள்ள நம்பிக்கையே காரணம் என்பது தெளிவானதாகும். நாம் அந்த நம்பிக்கையை உறுதிப்படுத்தும் வகையில் மக்களுக்கு தொடர்ந்தும் சேவை செய்வோம். மக்கள் வழங்கிய ஆணையை மிகச் சரியாக புரிந்துகொள்வது இங்கு முக்கியமானதாகும். என்மீதும் பிரதமர் உள்ளிட்ட புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள மக்கள் பிரதிநிதிகள் மீதும் மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை நாம் மதிக்கிறோம். மக்கள் இவ்வளவு பெரிய மக்கள் ஆணையை அரசாங்கத்திற்கு வழங்கியிருப்பது எதனை எதிர்பார்த்து என்பது பற்றி நாம் அறிவோம். எக்காரணத்தினாலும் அந்த எதிர்பார்ப்புகள் வீண்போவதற்கு நாம் இடமளிக்கமாட்டோம்.

மக்கள் வாக்குகளினால் தெரிவுசெய்யப்படும் மக்கள் பிரதிநிதியொருவரின் அடிப்படை பொறுப்பு மக்கள் சேவையாகுமென்பதை எப்போதும் நினைவில் வைத்திருக்கவேண்டும். இந்த அனைத்துப் பதவிகளும் பொறுப்புகளேயன்றி வரப்பிரசாதங்கள் அல்ல என்பதை நினைவில் வைத்து மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு அர்ப்பணிப்புடன் உள்ளோம்.

நான் இந்தத் தேர்தலில் எமது அணியை பிரதிநிதித்துவப்படுத்திய அனைத்து வேட்பாளர்களுக்கும் ஆதரவு வழங்குவதற்காக நாடளாவிய ரீதியில் சுற்றுப்பயணம் செய்தேன். அரசியல் கூட்டங்களுக்குப் பதிலாக இந்த சுற்றுப்பயணங்களின்போது நான் மக்களிடம் சென்று நேரடியாக அவர்களது பிரச்சினைகளை கேட்டறிந்தேன். மக்கள் முன்வைத்த கோரிக்கைகளில் மிகப் பெரும்பாலானவை பொதுத் தேவைகளேயன்றி தனிப்பட்ட தேவைகள் அல்ல. சுதந்திரம் பெற்று 72 வருடங்களின் பின்னரும் மக்களின் பெரும்பாலான சாதாரணமான தேவைகளுக்கும் தீர்வுகள் கிடைக்கப்பெறவில்லை.

பல ஆண்டுகளாக தாம் வாழ்ந்துவரும் காணிகளுக்கு உரிய உறுதிகள் கிடைக்கப்பெறாத மக்கள் உள்ளனர். நாம் அவர்களுக்கு உரிய முறைமைகளின்படி உறுதிகளை வழங்குவோம். உரிய மாற்றீடுகளின்றி பல பரம்பரைகளாக வாழ்ந்து வந்த, தாம் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்த நிலங்களிலிருந்து எவரையும் வெளியேற்றமாட்டோம்.

யானைகள் - மனிதர்கள் மோதல் இன்று பெரும் பிரச்சினையாக உள்ளது. இதற்குத் தீர்வொன்றை கண்டறிவதற்கு தற்போது நிபுணர் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. இதற்காக தனியானதொரு இராஜாங்க அமைச்சு ஏற்படுத்தப்பட்டிருப்பது நிலையான தீர்வொன்று தேவை எனும் காரணத்தினாலாகும்.

நாடளாவிய ரீதியில் நம்பமுடியாதளவு அதிக சதவீதமான மக்கள் குடிநீரின்றி கஷ்டப்படுகின்றனர். நாம் இந்த மனிதாபிமான பிரச்சினையை உடனடியாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்போம். ஒரு தேசிய கொள்கையாக அடுத்துவரும் சில ஆண்டுகளில் அனைத்து பிரதேசங்களுக்கும் குடிநீரை பெற்றுக்கொள்ள நாம் ஒரு விசேட நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பிப்போம்.

பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு கல்வி பெறுவதற்கான பொருத்தமான பாடசாலைகளை பெற்றுத்தருமாறு கோருகின்றார்கள். போதுமானளவு தேசிய பாடசாலைகள் இல்லாத குறை எல்லா இடங்களிலும் உள்ளது. பெரும்பாலான பாடசாலைகளில் பெருமளவு குறைபாடுகள் உள்ளன. ஆசிரியர் பற்றாக்குறை, போதுமானளவு விஞ்ஞான ஆய்வுகூடங்கள், வாசிகசாலைகள், விளையாட்டு வசதிகள் இல்லாமை பற்றி அடிக்கடி கூறக் கேட்கிறோம். பொருளாதாரத்துக்கு வினைத்திறனான பங்களிப்பை வழங்குவதற்காக விஞ்ஞான, தொழில்நுட்பப் பாடங்களை கற்குமாறு நாம் பிள்ளைகளிடம் கூறினாலும் அதற்கான அடிப்படை வசதிகள் பெரும்பலான பாடசாலைகளில் இல்லை.

இந்த நாட்டின் அனைத்து பிள்ளைகளுக்கும் தாம் விரும்பும் எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்கு தேவையான கல்வியை பெற்றுக்கொள்வதற்கும் அவர்களின் திறன்களை விருத்திசெய்வதற்கு உதவுவதற்கும் அரசாங்கம் மேற்கொண்டுவரும் செலவுகள் எதிர்காலத்திற்காக செய்யப்படும் முதலீடாகும். புதிய பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ள அமைச்சுகளின் ஊடாக நாம் இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கு முன்னுரிமை அளிப்போம்.

கிராமிய வைத்தியசாலைகளில் வளங்களும் வசதிகளும் மிகக் குறைவாக உள்ளன. வைத்தியர்கள், தாதிகள் மற்றும் ஏனைய வைத்தியசாலை ஊழியர்களுக்குப் பெரும் பற்றாக்குறை நிலவுகின்றது. சில பிரதேசங்களில் நோயாளிகளுக்கு சிகிச்சைபெற்றுக்கொள்வதற்காக அதிகதூரம் பயணம் செய்யவேண்டியுள்ளது. இலவச சுகாதார சேவைகளை மக்களுக்கு வழங்கும்போது ஏற்படும் இந்த நிலைமைகளை நாம் இல்லாமல் செய்வோம். ஆயுர்வேத மருத்துவத்தையும் சுதேச வைத்தியத்துறையையும் முன்னேற்றுவதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம்.

அதிக அந்நியச் செலாவணியை செலவுசெய்து மருந்துகளை இறக்குமதிசெய்வதற்குப் பதிலாக பல மருந்துகளை எமது நாட்டிலேயே உற்பத்திசெய்யும் நடவடிக்கையை நாம் ஆரம்பித்துள்ளோம். மருந்து இறக்குமதியின்போது இடம்பெறுகின்ற பெரும் ஊழல் செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும் நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். இதன் காரணத்தினால்தான் மருந்து உற்பத்திக்கு தனியான இராஜாங்க அமைச்சொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த நாட்டின் மக்களில் அதிகளவானவர்கள் இன்றும் சுயதொழில்களை செய்வதன் மூலமே வாழ்ந்துவருகின்றனர். பெரும்பாலானவர்கள் விவசாயிகளாக உள்ளனர். அவர்கள் கேட்பதெல்லாம் உரியகாலத்திற்கு நீரையும் உரத்தையும் பெற்றுத்தருமாறு மட்டுமேயாகும். இந்தக் கோரிக்கைகளை நாம் நிறைவேற்றவேண்டும். அந்தவகையில் நாடளாவிய ரீதியில் குளங்களை புனரமைப்பதுடன், நீர்ப்பாசன அபிவிருத்திக்கு விரிவான நிகழ்ச்சித்திட்டமொன்றை நாம் முன்னெடுப்போம்.

வேலைவாய்ப்பின்மை இன்று இளைஞர் தலைமுறை முகங்கொடுக்கும் ஒரு பாரிய சமூகப் பிரச்சினையாகும். இதற்காக நாம் குறுகியகால, நீண்டகால பல தீர்வுகள் குறித்து கலந்துரையாடியுள்ளோம்.

நாம் தற்போது நாட்டில் வாழும் வறிய குடும்பங்களை இலக்காகக்கொண்டு ஒரு இலட்சம் தொழில்களை வழங்குவதற்கு நிகழ்ச்சித்திட்டமொன்றை ஆரம்பித்துள்ளோம். அதனோடு இணைந்ததாக 50,000 பட்டதாரிகளுக்கு தொழில் வழங்குவதற்கும் அவர்களிடமிருந்து வினைத்திறனான சேவையை பெற்றுக்கொள்வதற்காக முறையான பயிற்சியொன்றை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

அரச தொழில்களை வழங்கும்போது நாட்டில் மிகவும் வறிய குடும்பங்களுக்கு முன்னுரிமை அளிப்பதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம். அதேபோன்று தொழில்வாய்ப்புகளை வழங்கும்போது அனைத்து மாகாணங்களுக்கும் சம வாய்ப்புகள் கிடைக்கும் வகையில் அது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

அரச நியமனமொன்றை பெற்றுக்கொள்ளும் ஒவ்வொருவரும் நாட்டுக்கு வினைத்திறனான சேவையை வழங்கவேண்டும். எனவே, எந்தவொரு அமைச்சுக்கும் அல்லது நிறுவனத்திற்கும் தேவையற்ற வகையில் ஆட்சேர்ப்புகள் செய்யப்பட மாட்டாது.

தத்தமது துறைகளில் தனியார்துறையின் ஒத்துழைப்புடன் நாட்டுக்கு தொழில்வாய்ப்புகளை உருவாக்குவதில் ஆர்வம் காட்டுமாறு அனைத்து அமைச்சர்களிடமும் இராஜாங்க அமைச்சர்களிடமும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அனைத்து அமைச்சுகள், இராஜாங்க அமைச்சுகளில் அந்தந்த துறைகளில் தனியார் துறையின் ஒத்துழைப்புடன் தொழில்வாய்ப்புகளை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோன்று குறித்த துறைகளில் சுயதொழில் மேம்பாட்டுக்கும் தொழில்முயற்சிகளை வலுவூட்டுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். எமது பொறுப்பும் கடமையுமாக இருக்க வேண்டியது தொழில்களை உருவாக்குவதேயன்றி தொழில்களை வழங்குவதல்ல.

உள்நாட்டு மற்றும் பூகோள சவால்களை வெற்றிகொள்ளும் பொருளாதார புத்தெழுச்சியை ஏற்படுத்தவேண்டுமானால் நாம் புதிதாக சிந்திக்க வேண்டும். இம்முறை இந்த நோக்கத்தை அடிப்படையாகக்கொண்டுதான் அமைச்சுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

உண்மையான பொருளாதார புத்தெழுச்சியை ஏற்படுத்துவதற்காக மக்கள்மைய பொருளாதாரமொன்றின் தேவையை நாம் கண்டறிந்துள்ளோம். அமைச்சுகளை ஒதுக்கும்போதும் அவற்றுக்கான விடய தானங்களை தீர்மானிக்கும்போதும் நாட்டின் பெரும்பான்மையான மக்கள் மீது தாக்கம் செலுத்தும் விவசாயம். பெருந்தோட்டத்துறை, மீன்பிடிக் கைத்தொழில் அதேபோன்று பாரம்பரிய கைத்தொழில்கள், சுயதொழில் வாய்ப்புகளை மேம்படுத்துவது சம்பந்தமாக கருத்திற்கொள்ளப்பட்டுள்ளது.

தேசிய பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதைப் போன்று ஏற்றுமதி வருமானத்தை அதிகரிப்பதும் எமது அடிப்படை இலக்குகளாகும். தற்போது எமது ஏற்றுமதி பெருந்தோட்டப் பயிர்களான தேயிலை, தென்னை, இறப்பர் போன்றவற்றிலிருந்து கிடைக்கும் வருமானம் திருப்திகரமான நிலையில் இல்லை.

தேயிலை பயிர்ச்செய்கையை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கும் அதேநேரம், சிறிய மற்றும் நடுத்தர தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கும் அரசாங்கம் உதவிகளைச்செய்யும். மூடப்பட்டுள்ள தேயிலைச் தொழிற்சாலைகளின் காரணமாக அவர்கள் அதிக அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர். அவற்றை மீளவும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுப்பதுடன், முறைகேடுகளை ஒழித்து உயர் தரங்களுடன் கூடிய தேயிலை ஏற்றுமதியை ஊக்குவிப்போம். Ceylon Tea வர்த்தக சின்னத்திற்குள்ள அங்கீகாரத்தைப் பலப்படுத்துவோம்.

தென்னையை புதிதாக பயிரிடுவதற்கு ஊக்குவிப்புகளை வழங்குவோம். இறப்பருக்கு உரிய விலையை பெற்றுக்கொடுப்பதற்காக இந்நாட்டில் தயாரிக்கப்படும் இறப்பர் பாவனை, இறப்பர் சார்ந்த கைத்தொழில்களை ஊக்குவிப்போம். செம்பனை பயிர்ச்செய்கையை நாம் முற்றாக நிறுத்துவோம்.

மிளகு, கறுவா போன்ற ஏற்றுமதி பயிர் உற்பத்தியை நாம் ஊக்குவிப்போம். விவசாய உற்பத்திகளுக்கு பெறுமதிசேர்த்து ஏற்றுமதி செய்வதனூடாக விவசாயிகளுக்கு ஸ்திரமான விலையை பெற்றுக்கொடுப்பதுடன், பெருமளவு அந்நியச் செலாவணியை ஈட்டுவதற்கும் நாம் நடவடிக்கை எடுப்போம்.

அமைச்சுகளுக்கு பொறுப்புகளை வழங்கும்போது நகர மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கும் மக்களின் வீட்டுப்பிரச்சினைக்கு தீர்வை வழங்குவதற்கும் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

நாட்டின் அபிவிருத்திக்கு நேரடியாக பங்களிக்கக்கூடிய பல்வேறு துறைகளை இனங்கண்டு அவற்றுக்குப் பொறுப்பான இராஜாங்க அமைச்சர்களை நியமிக்கவும் அவர்களுக்கான விடயதானங்களை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மனிதவள அபிவிருத்தியை நாம் முன்னுரிமைக்குரியதாக இனங்கண்டிருப்பதால் அமைச்சுகளை ஒதுக்கும்போது கல்வித்துறையை ஒரு அமைச்சின்கீழ் கொண்டுவந்து அதில் வேறுபட்ட பொறுப்புகளுக்காக நான்கு இராஜாங்க அமைச்சர்களை நியமித்துள்ளோம். முன்பள்ளிப் பாடசலைகள், கல்வி மறுசீரமைப்பு, திறன் விருத்தி, அறநெறிப் பாடசாலைகள், பிக்குகளுக்கான கல்வி ஆகிய துறைகளுக்கு தனியான இராஜாங்க அமைச்சுகள் ஏற்படுத்தப்பட்டிருப்பது அவற்றிலுள்ள முக்கியத்துவத்தின் காரணமாகவே ஆகும்.

எமது எதிர்கால இலக்குகளை அடைந்துகொள்ள வேண்டுமாயின், தொழில்நுட்ப கல்விக்கு விசேட கவனம் செலுத்தவேண்டும். 6ஆம் வகுப்பு முதல் 13ஆம் வகுப்பு வரை கல்வி மறுசீரமைப்பில் நாம் இது குறித்து விசேட கவனம் செலுத்தவேண்டும்.

உயர்தரத்தில் சித்தியடைந்த அனைத்து மாணவர்களுக்கும் பல்கலைக்கழக கல்வியை பெற்றுக்கொள்வதற்கு பல்கலைக்கழகங்களின் கொள்ளளவை அதிகரிப்பதுடன், திறந்த பல்கலைக்கழக முறைமையை முன்னேற்றுவதற்கும் தொலைக்கல்வியை முன்னேற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். பாடத்துறைகளை மறுசீரமைத்து இந்த பட்டப்படிப்புகள் பொருளாதாரத்திற்கு நேரடியாகப் பங்களிப்பு வழங்கக்கூடிய துறைகளாக உறுதிசெய்யப்படும்.

மின்சாரத்தின் விலை நாட்டின் பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளில் தாக்கம் செலுத்தும் ஒரு முக்கிய காரணியாகும். எனவே, மீள் பிறப்பாக்க, சக்திவள உற்பத்தி மார்க்கங்களை மேம்படுத்துவதற்காக தனியானதொரு இராஜாங்க அமைச்சு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பெறுமதி சேர்ப்பதற்காக புதிய தொழில்நுட்ப பாவனைக்கும் புத்தாக்கத்தை ஊக்குவிப்பதற்கும் ஆக்கத்திறன்வாய்ந்த வகையில் புதிய சந்தை வாய்ப்புகளை கண்டறிவதற்கும் வர்த்தகர்களுக்கு உதவுவதற்கும் குறித்த அமைச்சுகள் கவனம் செலுத்தவேண்டும்.

எமது நாடு இயற்கை வளம் நிறைந்த ஒரு வளமான நாடு என்றபோதிலும் பெறுமதி சேர்க்கும் கைத்தொழில்கள் இன்னும் சர்வதேச மட்டத்திற்கு முன்னேறவில்லை. இரத்தினக்கற்கள், கனிய மணல் போன்ற இயற்கை வளங்களை ஏற்றுமதி செய்யும்போது பெறுமதிசேர்த்து நாட்டுக்கு அதிகளவு அந்நியச் செலாவணியை ஈட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

எமது பாரம்பரிய கைத்தொழில்களான பத்திக், சுதேச ஆடைகள், பித்தளை, பிரம்புகள், மட்பாண்டங்கள், மரப்பாண்டங்கள், இரத்தின கற்கள், ஆபரணங்கள் கைத்தொழிலை உரிய வகையில் முன்னேற்றுவதற்கும் சுயதொழில்களை ஊக்குவிப்பதற்கும் புதிய தொழில்களை உருவாக்குவதற்கும் வர்த்தகத்துறையை கட்டியெழுப்பி பெருமளவு வெளிநாட்டு வருமானத்தை நாட்டுக்கு பெற்றுக்கொள்ளவும் சந்தர்ப்பம் ஏற்படுத்தப்படும்.

நாட்டு மக்களில் 1/3 பகுதியினர் விவசாயம், பெருந்தோட்டத்துறை, மீன்பிடிக் கைத்தொழில் ஆகியவற்றை ஜீவனோபாயமாக கொண்டுள்ளனர். நாம் இந்த மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தவேண்டும். இந்த கைத்தொழில்துறையை முன்னேற்றுவதற்காக சம்பிரதாய முறைமைகளை விஞ்சிய தொழில்நுட்பத்தை அடிப்படையாகக்கொண்ட புதிய அணுகுமுறைகளின் தேவை உள்ளது. விவசாயத்துறை, பெருந்தோட்டத்துறை மற்றும் மீன்பிடி, கடற்றொழில்துறையுடன் சம்பந்தப்பட்ட பல்வேறு துறைகளை நேரடியாக இலக்காகக் கொண்டு அமைச்சுகள் ஒதுக்கப்பட்டிருப்பது இதற்குத் தேவையான உரிய கவனத்தை வழங்குவதற்கேயாகும்.

உயர்தரம் வாய்ந்த விதைகளை உள்நாட்டில் உற்பத்திசெய்து, அவற்றை விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுப்பதுடன், விவசாய உற்பத்திகளுக்கு சிறந்த பொதியிடல் மற்றும் போக்குவரத்து முறைமைகளை அறிமுகப்படுத்தி வீண்விரயத்தைக் குறைப்பதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம். பசும்பால் உற்பத்தி மற்றும் முட்டை உற்பத்தியையும் நாம் முன்னேற்றுவோம்.

நச்சுத்தன்மையற்ற உணவை உற்பத்திசெய்யும் நோக்குடன் அடுத்த தசாப்தத்திற்குள் இலங்கையின் விவசாயத்துறையை முழுமையாக சேதன பசளைப் பாவனைக்கு மாற்றும் வகையில் உள்நாட்டில் சேதன பசளை உற்பத்தியை மேம்படுத்துவதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம்.

மீன்பிடித் கைத்தொழிலில் பாரிய முன்னேற்றத்தை கொண்டுவர நாம் எதிர்பார்க்கின்றோம். கடலினால் சூழப்பட்டுள்ள எமது நாட்டுக்கு மீன் இறக்குமதியை நாம் நிறுத்தவேண்டும். மீன்பிடி கைத்தொழிலை மேம்படுத்துவதற்கு தேவையான புதிய தொழில்நுட்பத்தையும் இயந்திரங்களையும் பெற்றுக்கொடுப்பதற்கு முறையான நிகழ்ச்சித்திட்டமொன்றை நாம் அறிமுகப்படுத்துவோம். ஆழ்கடலில் மீன்பிடிக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள பலநாள் படகுகளுக்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்காக அனைத்து மீன்பிடித் துறைமுகங்களையும் நவீனமயப்படுத்துவதுடன், தேவைக்கேற்ப புதிய துறைமுகங்களை நிர்மாணிக்கவும் நடவடிக்கை எடுப்போம்.

சட்டவிரோதமான சர்வதேச பலநாள் படகுகளின் மூலம் இலங்கை கடற்பகுதியில் மேற்கொள்ளப்படும் சுரண்டலை நிறுத்துவோம். நன்னீர் மீன்வளர்ப்பு கைத்தொழிலை முன்னேற்றுவதற்கும் புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவது எமது திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

அனைத்து அமைச்சுகளுக்கும் இராஜாங்க அமைச்சுகளுக்கும் தமது விடயதானங்கள் மற்றும் பொறுப்புகள் தெளிவாக வேறுபடுத்தி வழங்கப்பட்டுள்ளன. அமைச்சர்களால் குறித்த துறைகளின் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதுடன், இராஜாங்க அமைச்சுகளினால் செயற்பாடுகள், வினைத்திறன், கண்காணிப்பை மேற்கொள்வது எதிர்பார்க்கப்படுகின்றது. அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகளை தமது அமைச்சுகளுக்கு நேரடியாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாலும் நிதிப் பொறுப்பு தம்மிடமுள்ள காரணத்தினாலும் இராஜாங்க அமைச்சர்களுக்கு தடையின்றி தமது பொறுப்புகளை நிறைவேற்ற முடியும்.

அரச சேவையின் மூலம் தாம் எதிர்பார்க்கும் சேவை வினைத்திறனாகவும் உரிய வகையிலும் கிடைப்பதில்லை என பொதுமக்களிடம் குற்றச்சாட்டு உள்ளது. எனவே, உங்களின் கீழ் உள்ள அனைத்து அமைச்சுகள், திணைக்களங்கள், நிறுவனங்களினால் மக்களுக்கு வழங்கப்படும் சேவைகளை வினைத்திறனாகவும் உடனடியாகவும் பெற்றுக்கொடுக்குமாறு நான் அமைச்சர்களிடமும் இராஜாங்க அமைச்சர்களிடமும் கேட்டுக்கொள்கின்றேன். மக்களுக்கு அல்லது அரசாங்கத்திற்கு எவ்வித பெறுமானத்தையும் கொண்டுவராத சில நிறுவன செயற்பாடுகளினால் ஏற்படுவது காலவிரயம் மட்டுமே என நான் கடந்த காலத்தில் பல்வேறு அரச நிறுவனங்களுக்குச் சென்றவேளையில் கண்டுகொண்டேன். மக்களுக்கு சேவைகளை வழங்கும்போது பின்பற்றும் பாரம்பரிய முறைமைகளுக்குப் பதிலாக நிறுவன செயற்பாடுகளை வினைத்திறனாக மேற்கொண்டு மக்களுக்கு இலகுவாகவும் விரைவாகவும் சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக புதிய முறைமைகளை நீங்கள் அறிமுகப்படுத்த வேண்டும். இதற்காக முடியுமானளவு புதிய தொழிநுட்ப தீர்வுகளை கண்டறிய வேண்டும்.

சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்தில் வீண்விரயத்தையும் ஊழலையும் ஒழிப்பதாக நாம் மக்களுக்கு உறுதியளித்திருந்தோம். இது எம் அனைவரினதும் முக்கிய பொறுப்பாகும்.

தொடர்ச்சி 03ஆம் பக்கம்...

அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **கோட்டிபதி கப்ருக** 611 ஆவது வாரம் 2020 ஆகஸ்ட் 14ஆம் திகதி ஆங்கில எழுத்து D 30 40 42 66 | **சனிதா வாசனா** 3351 ஆவது வாரம் 2020 ஆகஸ்ட் 15ஆம் திகதி ஆங்கில எழுத்து L 13 39 48 75 | **அத கோட்டிபதி** 1011 ஆவது வாரம் 2020 ஆகஸ்ட் 15ஆம் திகதி ஆங்கில எழுத்து J 33 48 52 53 | **சுப்பர் போல்** 1192 ஆவது வாரம் 2020 ஓகஸ்ட் 15ஆம் திகதி ஆங்கில எழுத்து L 22 32 67 77 | **கோட்டிபதி கப்ருக** 612 ஆவது வாரம் 2020 ஆகஸ்ட் 16ஆம் திகதி ஆங்கில எழுத்து X 27 31 53 75 | **சுப்பர் போல்** 1193 ஆவது வாரம் 2020 ஆகஸ்ட் 16ஆம் திகதி ஆங்கில எழுத்து B 40 55 73 74 | **அத கோட்டிபதி** 1012 ஆவது வாரம் 2020 ஆகஸ்ட் 16ஆம் திகதி ஆங்கில எழுத்து R 02 29 39 43 |
| **சனிதா வாசனா** 3352 ஆவது வாரம் 2020 ஆகஸ்ட் 17ஆம் திகதி ஆங்கில எழுத்து V 11 23 33 51 | **சுப்பர் போல்** 1194 ஆவது வாரம் 2020 ஓகஸ்ட் 17ஆம் திகதி ஆங்கில எழுத்து A 27 44 57 74 | **அத கோட்டிபதி** 1013 ஆவது வாரம் 2020 ஆகஸ்ட் 17ஆம் திகதி ஆங்கில எழுத்து K 12 36 71 74 | **கோட்டிபதி கப்ருக** 613 ஆவது வாரம் 2020 ஆகஸ்ட் 18ஆம் திகதி ஆங்கில எழுத்து A 09 12 14 43 | **அத கோட்டிபதி** 1014 ஆவது வாரம் 2020 ஆகஸ்ட் 18ஆம் திகதி ஆங்கில எழுத்து S 24 40 47 59 | **சனிதா வாசனா** 3353ஆவது வாரம் 2020 ஓகஸ்ட் 19ஆம் திகதி ஆங்கில எழுத்து T 38 58 61 62 | **அத கோட்டிபதி** 1015 ஆவது வாரம் 2020 ஆகஸ்ட் 19ஆம் திகதி ஆங்கில எழுத்து E 04 09 12 75 |

## 02 ஆம் பக்கத் தொடர்ச்சி..

அனைத்து அமைச்சுகள், நிறுவனங்களில் வீண்விரயத்தையும் ஊழலையும் முழுமையாக ஒழிக்க நடவடிக்கை எடுப்போம். வீண்விரயம், ஊழலுடன் சம்பந்தப்படுபவர்களுக்கு அவர்களது தராதரங்களை பொருட்படுத்தாது சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நான் பின்னிற்கமாட்டேன்.

அரசாங்கம், அமைச்சு மற்றும் அரச துறையின் ஊடாக மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் இலக்குகளை அடைந்துகொள்வதன் முன்னேற்ற நிலைமைகள் தொடர்ச்சியாக மீளாய்வுசெய்யப்படும். ஏதேனும் ஒரு அமைச்சு அந்த இலக்குகளை அடைவதில் பின்னிற்குமாயின், அரசாங்கத்தின் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான மாற்றங்களை செய்வதற்கு நான் ஒருபோதும் பின்னிற்கமாட்டேன்.

தற்கால அரசியல் கலாசாரத்தில் பெரும்பாலும் மக்கள் பிரதிநிதிகள் அதிகாரத்தைகப் பெற்றுக்கொண்டதன் பின்னர் மக்களிடம் செல்வதை விட்டுவிடுகின்றனர் என்பது அண்மைக்காலத்தில் நான் நாடளாவிய ரீதியில் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த வேளையில் மக்கள் முன்வைத்த மனக்குறைகளிலிருந்து தெரியவந்தது. மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடிக்கடி மக்களிடம் சென்று அவர்களது உண்மையான பிரச்சினைகளை கண்டறிந்து அவற்றுக்குத் தீர்வுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

ஒரு ஜனநாயக நாட்டின் வெற்றிக்கு அதன் அரசியலமைப்பே அடிப்படையாகும். 1978 முதல் 19 முறை திருத்தப்பட்டுள்ள எமது அரசியலமைப்பிலுள்ள உறுதியற்ற தன்மை, சிக்கல்கள் காரணமாக தற்காலத்தில் பல்வேறு பிரச்சினைகள் உருவாகியுள்ளன. அரசியலமைப்பில் மாற்றத்தை செய்வதற்காக நாம் கோரிய மக்கள் ஆணை எமக்கு கிடைக்கப்பெற்றுள்ள காரணத்தினால் எமது முதலாவது பணியாக நாம் மக்களுக்கு உறுதியளித்தவாறு, 19ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை நீக்க நடவடிக்கை எடுப்போம். அதன்பின்னர் அனைவருடனும் இணைந்து நாட்டுக்குத் தேவையானதும் பொருத்தமானதுமான புதிய அரசியலமைப்பொன்றை கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுப்போம். இதன்போது இந்நாட்டின் அனைத்து மக்கள் சம்பந்தமாகவும் ஒரே நாடு ஒரே சட்டம் என்ற எண்ணக்கருவுக்கு முதலிடம் வழங்குவோம்.

தெளிவான தீர்மானங்களை மேற்கொள்ள முடியாத, தீவிரவாதத்தின் அழுத்தங்களுக்கு தொடர்ச்சியாக அடிபணியும், நிலையற்ற நாடாளுமன்றம் ஒரு நாட்டுக்கு பொருத்தமானதல்ல. புதிய அரசியலமைப்பை அறிமுகப்படுத்தும்போது தற்போதைய தேர்தல் முறைமையில் மாற்றங்களை செய்யவேண்டியது அவசியமாகும். விகிதாசார தேர்தல் முறைமையிலுள்ள சாதகமான பண்புகளை பாதுகாக்கும் அதேநேரம் நாடாளுமன்றத்தின் ஸ்திரத்தன்மையையும் மக்களின் நேரடி பிரதிநிதித்துவத்தையும் உறுதிசெய்யும் வகையில் இந்த மாற்றங்கள் மேற்கொள்ளப்படும்.

எனது நாட்டை நான் நேசிக்கின்றேன். எனது நாடு குறித்து பெருமையடைகிறேன். எனக்கு எனது நாடு பற்றிய ஒரு தொலைநோக்குள்ளது. எமது நோக்கம் வினைத்திறன் மிக்க பிரஜை, மகிழ்ச்சியாக வாழும் குடும்பம், ஒழுக்கப்பண்பாடான சமூகத்தைக்கொண்ட சுபீட்சமான தேசத்தைக் கட்டியெழுப்புவதாகும். இதுவரை நாம் மேற்கொண்ட அனைத்து செயற்பாடுகளையும் போன்று, இதன்பின்னரும் செயற்படுவதற்காக எதிர்பார்க்கும் நடவடிக்கைகளை திட்டமிடுவதும் இந்த நோக்கங்களின் அடிப்படையிலேயாகும்.

நாம் வரலாற்றில் ஒரு முக்கியமான இடத்தை வந்தடைந்துள்ளோம். மக்கள் தற்போதைய அரசாங்கத்திற்கு பெரும் மக்கள் ஆணையை வழங்கியுள்ளனர். எந்தவொரு சக்திக்கும் அடிபணியாது இந்த நாட்டின் இறைமையையும் நாட்டு மக்களையும் பாதுகாத்து நாட்டை சுபீட்சத்தை நோக்கி கொண்டுசெல்வதற்கான பொறுப்பு எம்மிடம் வழங்கப்பட்டுள்ளது. நாட்டின் எதிர்கால தலைமுறைக்காக தற்கால தலைமுறை அந்தப் பொறுப்பை நிறைவேற்ற வேண்டும்.

இது எம் அனைவரினதும் தாய்நாடு. எனவே, இனம், மதம், கட்சி பேதமின்றி நாம் அனைவரும் நாட்டுக்காக ஒன்றுபடவேண்டிய சந்தர்ப்பம் வந்துள்ளது. மக்களுக்கு நாம் உறுதியளித்த சுபீட்சமான தேசத்தைக் கட்டியெழுப்புவதற்காக என்னுடன் ஒன்றிணையுமாறு நான் உங்கள் அனைவருக்கும் நட்புக் கரம் நீட்டி அழைப்பு விடுக்கின்றேன்.

உங்கள் அனைவருக்கும் மும்மணிகளின் ஆசிகள்!

**(நாடாளுமன்றம் மீண்டும் இன்று காலை 9.30மணிக்கு கூடவுள்ளமை குறிப்பிடத்தக்கது)**

தமிழன்
தமிழன்
தமிழன் தினசரி மற்றும் வாராந்த பத்திரிகையில் 6.2cm X 3cm அளவில் சிறுவிளம்பரங்களை பிரசுரித்திட 600 ரூபா மட்டுமே.
தொடர்புகளுக்கு:
077 693 0739, 076 139 3805

## சபாநாயகராக...

ஒன்பதாவது நாடாளுமன்ற சபாநாயகராக மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

அமைச்சர் தினேஷ் குணவர்தன சபாநாயகருக்கான பெயரை முன்மொழிய எதிர்க்கட்சி எம்.பி. ரஞ்சித் மத்துமபண்டார அதனை வழிமொழிந்தார். பின்னர் நாடாளுமன்ற செயலாளர் நாயகத்தின் முன்னிலையில் சபாநாயகர் மஹிந்த யாப்பா பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

நேற்றுக் காலை 9.30 மணிக்கு நாடாளுமன்றம் கூடியது. நாடாளுமன்ற நடவடிக்கைகளைத் தொடங்க முன்னர், நாடாளுமன்ற செயலாளர்நாயகம் தம்மிக தசநாயக்க புதிய நாடாளுமன்றத்தை கூட்டவென ஜனாதிபதி வெளியிட்ட பிரகடனத்தைப் படித்தார்.

**சஜித் எதிர்க்கட்சித் தலைவர்**

9ஆவது நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராக சஜித் பிரேமதாஸவை ஏற்றுக்கொள்வதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அறிவித்துள்ளார்

**குழுக்களின் பிரதித் தலைவரானார் அங்கஜன்**

பிரதி சபாநாயகராக ரஞ்சித் சியம்பலாபிட்டியவும், குழுக்களின் பிரதித் தலைவராக அங்கஜன் இராமநாதனும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

## படகில்...

கொழும்பில் போக்குவரத்து நெரிசலை குறைக்க பொதுமக்களை ஏரிப் பயணத்தில் கவனஞ்செலுத்த ஊக்குவிக்கவே இந்த முயற்சியை மேற்கொண்டதாக தெரிவித்தார்.

ஜனாதிபதியின் முயற்சியினால் தியவன்னா ஏரி புனரமைக்கப்பட்டதால் படகுப்பயணம் சுலபமாக்கப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## தமிழர்களின்...

அதை சிங்கள மொழியில் "கல கல தே பல பல வே" என்று குறிப்பிட்டுச் சொன்னார். புதிதாக நியமிக்கப்பட்ட சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு வாழ்த்துத் தெரிவித்து உரையாற்றிய சமயத்தில், விக்னேஸ்வரன் இந்தக் கருத்துகளை தெரிவித்தார்.

## ஜனநாயக...

பழிவாங்கியதாக குறிப்பிட்ட பிள்ளையான், அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான அனைத்து முயற்சிகளுக்கும் தனது கட்சி ஆதரவளிக்கும் - என்றார். நாட்டை அபிவிருத்தி செய்வதற்கான முயற்சிகளில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தை ஆதரிப்பதாக அவர் கூறினார். அண்மையில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டபோதிலும் நாடாளுமன்றத்தில் கலந்துகொள்வதற்கான தனது முயற்சிகளை சட்டமா அதிபர் தரப்பில் தடுக்கப்படுவதாக குறிப்பிட்ட அவர், ஒவ்வொரு நாடாளுமன்றக் கூட்டத் தொடரிலும் கலந்துகொள்ள நீதிமன்ற ஒப்புதல் தேவைப்படுவதாகவும் கூறினார்.

இதனால் இது குறித்து கவனஞ்செலுத்த வேண்டுமெனவும் அவர் சபாநாயகரிடம் கேட்டுக்கொண்டார்.

# பாடும்நிலா நலம்பெறவேண்டி பாரெங்கும் கூட்டுப்பிரார்த்தனை

**உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் - எம்.ஜி.எம். அறிக்கை**



பாடும்நிலா நலம்பெறவேண்டி உலகளாவிய ரீதியில் கோடிக்கணக்கான ரசிகர்கள் நேற்று மாலை 6 மணியளவில் கூட்டுப்பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில், எஸ்.பி.பி.யின் உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

கொரோனா தொற்றுக்குள்ளான எஸ்.பி.பி. (வயது 74) சென்னை, எம்.ஜி.எம். ஹெல்த் கேர் மருத்துவமனையில் சிகிச்சையிலுள்ளார். உயிர்காக்கும் மருத்துவ உபகரணங்களின் உதவியுடன், தீவிர சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது. இதயம், சிறுநீரகம் உள்ளிட்ட உறுப்புகள் அனைத்தும் சீராக இயங்குகின்றன. நுரையீரல் செயற்பாட்டை இயல்புநிலைக்குக் கொண்டுவர, உயிர்காக்கும் உபகரணங்கள் வழியாக, 'ஒட்சிசன்' அளிக்கப்பட்டு வருகிறது.

இதுகுறித்து மருத்துவமனை வட்டாரத்தில் தெரிவிக்கையில்,

"சிகிச்சைக்கு, அவரது உடல்நிலை நன்கு ஒத்துழைக்கிறது. 'என்டிபயோடிக்' கொடுக்கப்பட்டது. மெதுவாக, அவரது உடல்நிலை தேறிவருகிறது. எனினும், அவர் உயிர்காக்கும் உபகரணங்களின் உதவியுடன் சுவாசிப்பதால், 'க்ரிட்டிகல்' என்றே மருத்துவ ரீதியில் குறிப்பிடவேண்டியுள்ளது. தற்போதுள்ள நிலையில் தொடர் சிகிச்சை அளிக்கப்படும்போது, குணமடைவதற்கான வாய்ப்புகள் அதிகமுள்ளன" என்றனர்.

கூட்டுப் பிரார்த்தனை

எஸ்.பி.பி. நலம் பெறவேண்டி கூட்டுப் பிரார்த்தனை செய்யுமாறு திரையுலகினரை இயக்குனர் பாரதிராஜா கேட்டுக்கொண்டிருந்தார். இதற்கிணங்க கமல், ரஜினி, இளையராஜா மற்றும் ஏ.ஆர்.ரஹ்மான் உள்ளிட்ட திரையுலகினர் பலர் கூட்டுப் பிரார்த்தனையில் பங்கேற்றனர்.

# குழப்பத்தில் மாலி: இராணுவத்தை வழிநடத்துவது யார்?

ஆபிரிக்க நாடான மாலியில் இராணுவப்புரட்சி ஏற்பட்டதைத் தொடர்ந்து அந்நாட்டு ஜனாதிபதியின் வீட்டை இராணுவத்தினர் சுற்றிவளைத்துள்ளனர்.

அந்நாட்டின் ஜனாதிபதி இப்ராஹிம் கெய்டா பயங்கரவாதத்தை ஒடுக்கத் தவறியதாகவும், தேர்தலில் முறைகேடு செய்து வெற்றி பெற்றதாகவும் எழுந்த முறைபாட்டில் மக்கள் போராட்டம் நடத்தி வந்தனர்.

அங்கு இராணுவப்புரட்சி ஏற்பட்டு ஜனாதிபதி கெய்டா மற்றும் பிரதமர் பவ்பவ் சிஸ்சே ஆகியோர் துப்பாக்கிமுனையில் கைது செய்யப்பட்டதாக தகவல்கள் வெளியாகின.

இந்நிலையில், ஜனாதிபதி கெய்டாவின் வீட்டைச் சுற்றி இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர். இதனிடையே இராணுவத்தை யார் வழிநடத்துகின்றனர்? ஆட்சியில் அவர்களின் நோக்கம் என்ன என்பது குறித்து இன்னும் முடிவெடுக்கவில்லை என இராணுவச் செய்தித் தொடர்பாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

# ட்ரம்பின் அலட்சிய போக்காலேயே ஜனநாயகம் அச்சுறுத்தலைச் சந்தித்துள்ளது

## பராக் ஒபாமா குற்றச்சாட்டு

ஜனாதிபதி பதவியை ட்ரம்ப் தீவிரமாக எடுத்துக்கொள்ளாததால், அமெரிக்காவில் ஜனநாயகம் அச்சுறுத்தலைச் சந்தித்துள்ளது – என முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா விமர்சித்துள்ளார்.

எதிர்வரும் நவம்பர் 3ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. இதில், குடியரசுக் கட்சி சார்பில் தற்போதைய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பும், ஜனநாயகக் கட்சி சார்பில் ஜோ பிடனும் ஜனாதிபதி பதவிக்கும், இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கமலா ஹாரிஸ் துணை ஜனாதிபதி பதவிக்கும் போட்டியிடுகின்றனர்.

ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயக கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளரை அதிகாரபூர்வமாக தெரிவுசெய்யும் மாநாடு ஒன்லைன் மூலம் நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் அதிகாரபூர்வ வேட்பாளராக ஜோ பிடன் தெரிவுசெய்யப்பட்டார்.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கூட்டத்தில் ஜனநாயக கட்சியின் அதிகாரபூர்வ துணை ஜனாதிபதி வேட்பாளராக கமலா ஹாரிசை பரிந்துரை செய்து உரையாற்றுகையிலேயே முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:


கடந்த 2017ஆம் ஆண்டில் ட்ரம்பிடம் வெள்ளை மாளிகையை ஒப்படைத்தபோது, குடியரசுக் கட்சி உறுப்பினர்கள வேலையை தீவிரமாக எடுத்துக் கொள்வதில் கொஞ்சம் அக்கறை காட்டக்கூடும். அலுவலகத்தின் தேவையை உணரவும், பராமரிப்பில் இருந்த ஜனநாயகத்தின் மீது பயபக்தியுடன் செயற் படுவர் என எண்ணினேன். ஆனால், ட்ரம்ப் ஒருபோதும் அதைச் செய்யவில்லை. ஆனால், அமெரிக்கா மீது மோசமான தூண்டுதல்களை டிரம்ப் கட்டவிழ்த்து விட்டுவிட்டார். உலகெங்கிலும் நமக்குக் கிடைத்த பெருமை மோசமாக குறைந்துவிட்டது. நம்முடைய ஜனநாயக அமைப்புகள் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அச்சுறுத்தலை சந்தித்துள்ளது.

– இவ்வாறு அவர் பேசினார்.

திங்களன்று ஆரம்பிக்கப்பட்ட கூட்டத்தின் முதல்நாளில் பேசிய ஒபாமாவின் மனைவி மிச்செல் ஒபாமா, "அமெரிக்காவில் தேர்ந்தெடுக்கப்பட்ட தவறான ஜனாதிபதி ட்ரம்ப" என கடுமையாக சாடியிருந்தார். அதேபோன்று முன்னாள் ஜனாதிபதிகள் ஜிம்மி கார்ட்டர் மற்றும் பில் கிளிண்டன் ஆகியோர், "நாட்டின் நெருக்கடிகளை நிவர்த்திசெய்யத் தேவையான திறமைக்கு பதிலாக ட்ரம்பின் அரசு குழப்பத்தில் மூழ்கியுள்ளது" என விமர்சனம் செய்திருந்தனர்.



# காட்டுத்தீயால் தகிக்கும் கலிபோர்னியா: வீடுகளைவிட்டு மக்கள் வெளியேற உத்தரவு!



அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் பரவிவரும் காட்டுத்தீயால் ஆயிரக்கணக்கானோர் வீடுகளைவிட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தின் வடக்குப் பகுதியை தகிக்க வைத்துக்கொண்டிருக்கும் காட்டுத் தீ பெருமளவு சேதத்தை ஏற்படுத்திவருகிறது. 100 இடங்களில் பற்றி எரியும் தீயை அணைக்க முடியாமல் தீயணைப்பு வீரர்கள் திணறி வருகிறார்கள். இதுவரை 3 இலட்சம் ஏக்கர் பரப்பை தீ கபளீகரம் செய்துள்ளது.

தற்போது 85 ஏக்கர் அளவில் எரிந்துவரும் தீயை அணைக்க ஏற்கனவே 7 ஆயிரம் பேர் போராடி வருகிறார்கள். தற்போது நிலைமை கைமீறி போக குடியிருப்புகளை தீ அச்சுறுத்தி வருவதால் மேலும் 125 தீயணைப்பு வாகனங்களும், 1000 வீரர்களும் வேண்டும் என்று நாட்டின் ஏனைய மாகாணங்களிடம் கலிபோர்னியா உதவி கேட்டுள்ளது. ஒரு இலட்சம் பேர் வசிக்கும் வாகவில்லே பகுதியை காட்டுத் தீ சுற்றிவளைத்துள்ளது. தொடர்ந்து, 50 வீடுகள் தீயில் எரிந்து சேதமடைந்த நிலையில், 2,000 வீடுகள் தீயில் சிக்கும் நிலையிலுள்ளன. அதனால் பொதுமக்கள் வீடுகளைவிட்டு வெளியேற அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர். சண்டாகுருஸ், சான்மாடியோ பகுதிகளிலிருந்து சுமார் 22 ஆயிரம் பேர் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர்.

# லிபிய படகு விபத்துக்குள்ளானதில் 5 குழந்தைகள் உட்பட 45 பேர் பலி



லிபியாவிலிருந்து மத்தியதரைக் கடல் வழியே புலம்பெயர முயன்றவர்களின் படகு விபத்துக்குள்ளானதில் 5 குழந்தைகள் உட்பட 45 பேர் உயிரிழந்துள்ளனர் என ஐ.நா. தெரிவித்துள்ளது.

செனகல், மாலி, சாட் மற்றும் கானா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்தோர், கடல் வழியே இத்தாலிக்கு புலம்பெயர முயன்றபோது ஸ்வாரா கடற்கரை அருகே அவர்கள் சென்ற படகு என்ஜின் வெடித்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் படகில் பயணித்த 5 குழந்தைகள் உட்பட 45 பேர் உயிரிழந்துள்ளனர். தப்பிப் பிழைத்த 37 பேர் மீனவர்களால் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர் என இடம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு மற்றும் ஐ.நா. அகதிகள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900 / 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilannews@yahoo.com

2020 ஓகஸ்ட் 21ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# 45 வருடங்கள் ஒன்றுமே செய்யாத அரசுகள்!

அரசால் அறிவிக்கப்பட்ட பட்டதாரிகள் வேலை வாய்ப்பு நியமனப்பட்டியலில் பெயர்கள் இல்லாத தொழிலற்ற பட்டதாரிகள், ஜனாதிபதி செயலகத்துக்கு அருகிலுள்ள ஆர்ப்பாட்டப் பகுதியில் போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றனர்...

அந்த வழியில் செல்லும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது வாகனத்தை நிறுத்தி அவர்களுடன் உரையாடுகிறார்... வேலைவாய்ப்பை அரசு வழங்கும். ஏன் வெயிலில் நின்று இந்தப் போராட்டங்களை செய்கிறீர்கள்? என்ன வயது உங்களுக்கு? என்று ஜனாதிபதி கேட்கிறார். எனக்கு 45 வயது என்று அவர் சொல்ல, இவ்வளவு காலம் என்ன செய்தீர்கள்? என்று ஜனாதிபதி கேட்கிறார். யாருமே எங்களை கவனிக்கவில்லை. 8 வருடங்களாக இப்படி இருக்கிறோம். கடந்தகால அரசுகள் எங்களை கவனிக்கவில்லை என்று போராட்டத்தில் ஈடுபட்டவர் சொல்கிறார். பத்தாயிரம் பேருக்காக அமைச்சரவைப் பத்திரம் புதிதாக போடப்பட்டுள்ளது. நீங்கள் வெயிலில் நிற்காமல் வீடுகளுக்குச் செல்லுங்கள் என்று கூறிவிட்டு ஜனாதிபதி நகர்கிறார்.

இந்த நிகழ்வை சாதாரண ஒரு நிகழ்வாக கருதிவிட முடியாது. 45 வயதென்பது ஒருவரின் வாழ்க்கை ஆயுளின் சராசரி பாதிக்காலம். அந்த பாதிக் காலமும் படிப்பிலும், தொழில் தேடுவதிலும் செலவழிந்து போயிருக்குமாயின் இனி அவர்கள் எப்போது தொழில்பெற்று எக்காலத்தில் அவர்களது வாழ்வை கட்டியெழுப்பப் போகிறார்கள்? இவர்களுக்காக தமது வாழ்வையே அர்ப்பணித்த தமது பெற்றோர்களுக்கோ அல்லது பாதுகாவலர்களுக்கோ எவ்வாறு கைம்மாறு செய்யப்போகிறார்கள்? தமது குடும்ப நிலைமை கருதி, நல்ல தொழில் கிடைத்தால்தான் திருமணம் செய்வேன் அல்லது தொழில் செய்துதான் எனது குடும்பத்தைக் காப்பாற்றுவேன் என்றிருக்கும் பலரின் நிலைமை என்ன? கல்விக் கடன்களை வாங்கியவர்கள் அவற்றை எப்போது மீள்செலுத்துவது? இவற்றுக்கு பதில்களை வழங்குவது யார்?

இலங்கையின் கடந்தகால வரலாறை எடுத்துக்கொண்டால் வடக்கிலும் கிழக்கிலும் தெற்கிலும் இளைஞர்கள் ஆயுதமேந்திய போராட்டத்துக்கும் புரட்சிக்கும் துணிந்தமைக்கு அவர்களின் இவ்வகையான பிரச்சினைகள் கவனத்திற்கொள்ளப்படாமைதான் என்பதை குறிப்பிட்டாக வேண்டும். தேர்தல் காலங்களில் தொழில்வாய்ப்புக்கான வாக்குறுதிகள் வழங்கப்பட்டாலும் தேர்தலின் பின்னர் அந்த தொழில்வாய்ப்பு வெற்றிடங்களை அரசியல்வாதிகளும், அவர்களின் கையாட்களும், வசதி படைத்தவர்களும் தங்களுக்குத் தேவையானவர்களை இட்டு நிரப்பிக்கொள்கின்றனர். இதனால் வறுமைக்கோட்டுக்கு கீழ் நிலையில் உள்ளவர்கள் மட்டுமல்ல, தகுதியான பலர் கூட வாய்ப்பு மறுக்கப்படும் பரிதாப நிலைமை உள்ளது.

வரலாறுகள் நமக்கு பல பாடங்களை கற்றுத் தந்திருக்கின்றன. அந்தவகையில் இளைஞர், யுவதிகளின் இந்த வேலைவாய்ப்புப் பிரச்சினை தொடர்பில் அரசு உரிய கவனத்தை செலுத்தவேண்டும். தேர்தல் முடிந்த கையோடு வேலைவாய்ப்பு விடயத்தை அறிவித்தமைக்காக அரசுக்கு மக்கள் நன்றி தெரிவிக்கும் அதேசமயம், அந்த நடைமுறையில் எதுவித அரசியல் தலையீடுகளோ அல்லது தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளோ இல்லாமல் அந்தப் பணி நடக்கவேண்டும். குறிப்பாக, இந்த வேலைவாய்ப்பு விடயத்தில் வடக்கு, கிழக்கு புறக்கணிக்கப்படுவதாகவும் அங்கிருந்து வந்த விண்ணப்பங்கள் மீளாய்வு செய்யப்படுவதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன. அவை தொடர்பிலும் அரசு கவனம் செலுத்தி அந்தப் பகுதியிலுள்ள தொழிலற்ற பட்டதாரிகளுக்கு அநீதி நடந்துவிடாமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அரசியல்வாதி என்பதற்கப்பால் சிறந்த நிர்வாகியாக பலராலும் பார்க்கப்படுவதால் தொழிலற்ற பட்டதாரிகள் மற்றும் தொழிலற்ற இதர சாதாரண தகைமைகள் கொண்டவர்கள் குறித்து தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்தி நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். அப்போதே நல்லதொரு நாட்டையும் ஆக்கபூர்வமான அடுத்த சந்ததியொன்றையும் கட்டியெழுப்பலாம். அப்போதுதான் 45 வருடங்கள் ஒன்றுமே செய்யாத அரசு என்று அடுத்த 45 வருடங்களின் பின்னர் எவரும் குறை சொல்ல முடியாத நிலை உருவாகும்.

**"தமிழன்" பத்திரிகை தொடர்பான உங்கள் கருத்துக்களை news@liberty.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.**




# காலநிலை மாற்றத்திற்கான தீர்வு யார் கையில்?

அந்த நாள் எப்போதும் போல் இருக்கவில்லை. 17 வயதுச் சிறுமி திடீரென ஸ்வீடன் நாடாளுமன்றத்தின் முன் காலநிலை மாற்றத்தின் பாதிப்புகளை உணர்த்தும் வாசகங்களை கைகளில் ஏந்தி அமர்ந்திருக்கிறார். வரவிருக்கும் காலநிலைப் பிரச்சினைகளுக்கு நீங்கள்தான் காரணம் என உலகத் தலைவர்களை சாடும் வாசகங்கள் அதில் பளிச்சிடுகின்றன.

"குழந்தைகளான எங்களுக்குத் தரவேண்டிய பூமியைத் திருப்பித் தாருங்கள்" என பின்னாளில் ஐக்கிய நாடுகள் அவையில் முழங்கிய கிரேட்டா தன்பெர்க்தான் அந்தச் சிறுமி. கிரேட்டா சொல்வது போல் நாம் அபாயத்தின் விளிம்பிலா நிற்கிறோம்? சந்தேகம் இல்லாமல் ஆம் என்பதுதான் பதில்.

திடீரென பெய்யும் மழை, அடிக்கடி நிகழும் புயல், சுட்டெரிக்கும் வெயில், கணிக்க முடியாத வானிலை மாற்றம், மூழ்கடிக்கும் வெள்ளம் எனத் தற்போது நாம் எளிதில் உணரும் வகையில் நம்மைச் சுற்றி மாற்றங்கள் நிகழ்ந்துவருகின்றன. ஏன் திடீரென நாம் இந்த கண்ணாமூச்சிக் கூண்டில் சிக்கினோம் என்று உங்களுக்குத் தோன்றியிருக்கிறதா? இல்லையென்றால், ஏன் இப்படி காலநிலையில் நாம் சந்திக்கும் அபாயங்கள் நடைபெறுகிறது என்பதை அறிய அடிப்படையான சில விடயங்களைத் தெரிந்துகொள்வது அவசியம்.

உலகளவில் காலநிலை மாற்றம் அல்லது பருவநிலை மாற்றம் என்ற சொல் தற்போது அதிகம் உச்சரிக்கப்படுகிறது. இந்தப் பருவநிலை மாற்றத்தால் நாம் வாழும் புவியில் பல்வேறு மாறுபாடுகள் நிகழ்கின்றன. அவற்றைக் கணிப்பதிலும், இந்த மாற்றங்களைப் புரிந்துகொள்ளவும் வேண்டிய அவசியம் உலக நாடுகளுக்கு இப்போது ஏற்பட்டிருக்கிறது. கடந்த நூற்றாண்டின் மத்தியில் கண்டுபிடிக்கப்பட்ட நீராவி இயந்திரங்கள் போன்றவற்றால் தொழில்துறையில் ஒரு பெரும் புரட்சி ஏற்பட்டது. ஐரோப்பிய நாடுகளில் தொழில்துறைகளின் வளர்ச்சி அதிகப்படியான மக்களைக் கிராமங்களிலிருந்து நகரங்களை நோக்கித் தள்ளியது. இதன் காரணமாக வேலைவாய்ப்புக்காக மக்கள் ஓர் இடத்தில் குவிக்கப்பட்டனர். இது பின்னாளில் மற்ற பகுதிகளுக்கும் பரவியது.

பெருகிவந்த தொழிற்சாலைகள் ஐரோப்பாவைத் தாண்டிப் பல்வேறு கண்டங்களிலும் மாற்றங்களை உண்டாக்கியது. கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டுக்கும் குறைவான காலத்தில் அறிவியல் கண்டுபிடிப்புகளும் வாழ்க்கை முறைகளும் மாற்றம் கண்டன. பெருகிய தொழிற்சாலையின் புகைபோக்கிகள் வளிமண்டலத்தில் தங்களது பங்குக்கு கரியமில வாயுக்களை கட்டுப்பாடில்லாமல் உமிழ்ந்தன.

வளர்ச்சி என்னும் பெயரில் தொழில் வளர்ச்சியில் ஓடிய நாடுகள் தங்களது நாட்டை முன்னேற்றுவதாகக் கூறி போட்டி போட்டுக்கொண்டு தொழிற்சாலைகளை நிறுவின. அதன் காரணமாக அதிகப்படியான கரியமிலவாயுகளின் வெளியேற்றம் வளிமண்டலத்தில் கார்பன்டை ஒட்சைடின் செறிவை அதிகப்படுத்தின. இதன் காரணமாக சூரியனிலிருந்து வரும் வெப்பம் புவியைவிட்டு வெளியேறாமல் புவியிலேயே தங்கி வெப்பநிலையை உயர்த்தின.

தற்போதைய நிலையில் காற்றில் கார்பன்டை ஒட்சைடின் செறிவு 2020ஆம் ஆண்டின் ஜூலை மாதத்தில் 414.38 ஆகவுள்ளது. 2017ஆம் ஆண்டு செப்டெம்பரில் இதன் அளவு 403.27 ஆகவும், 2018ஆம் ஆண்டின் செப்டெம்பரில் இதன் அளவு 405.59 ஆகவும் 2019ஆம் ஆண்டின் செப்டெம்பரில் இதன் அளவு 408.55 ஆகவும் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதிகரிக்கும் வெப்பநிலையால் கடல் நீர்மட்டம் உயர்தல், வறட்சி, பெருகும் புயல்கள், வெள்ளம் போன்ற இயற்கைப் பேரிடர்கள் ஏற்படும் என அறிவியலாளர்கள் எச்சரிக்கின்றனர். சர்வதேச அளவில் கவனம் பெற்ற இந்தப் பிரச்சினை 2015ஆம் ஆண்டு பாரிஸில் நடைபெற்ற பருவநிலை மாநாட்டில் விவாதிக்கப்பட்டது. 190இற்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்ற இந்த மாநாட்டில் அதிகரிக்கும் பசுமைக்குடில் வாயுகளின் அளவைக் குறைக்கும் வகையில் ஒவ்வொரு நாடுகளும் தாங்கள் வெளியேற்றும் கரியமிலவாயுக்களின் அளவைக் குறைக்கவேண்டும் என வலியுறுத்தப்பட்டது. 2030ஆம் ஆண்டுக்குள் உலக வெப்பநிலையில் 2 டிகிரி செல்சியஸ் அளவைக் குறைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. மாநாட்டில் பங்கேற்ற நாடுகளின் ஒப்புதலின் அடிப்படையில் பாரீஸ் மாநாடு வெற்றிபெற்றது. அதிகளவு கார்பன் வெளியேற்றும் நாடுகளாக உள்ள சீனா, அமெரிக்கா மற்றும் இந்தியா போன்ற நாடுகளின் கார்பன் வெளியேற்ற அளவைக் குறைப்பது முக்கியமானதாக பார்க்கப்பட்டது.

ஆனால், இந்த ஒப்பந்தத்தில் சதுரங்கம் விளையாடியது அமெரிக்கா. பருவநிலை மாற்றம் குறித்த விவாதத்தில் முக்கிய நிகழ்வாகப் பார்க்கப்பட்ட பாரீஸ் மாநாட்டின் இலக்கை குலைக்கும் வகையில் 2017ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், பாரீஸ் ஒப்பந்தத்திலிருந்து வெளியேறப்போவதாக அறிவித்தார். ஒப்பந்தத்தில் தொடர்ந்தால் சீனா, இந்தியா போன்ற நாடுகளுடன் தொழில் வளர்ச்சியில் போட்டி போட முடியாத நிலை ஏற்படும் என விளக்கமளித்தார். அதன்படியே 2019ஆம் ஆண்டு அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சராக இருந்த மைக்கேல் பாம்பேயோ அமெரிக்கா பாரீஸ் பருவநிலை ஒப்பந்தத்திலிருந்து வெளியேறுவதாக அறிவித்தார். இது உலக நாடுகளிடையே விமர்சனத்தை எழுப்பின.

அதிகப்படியான கார்பனை வெளியிடும் அமெரிக்கா தொழில் வளர்ச்சி என்னும் காரணத்தைக் குறிப்பிட்டு பொறுப்பற்ற முறையில் நடந்துகொள்வதாக குற்றஞ்சாட்டப்பட்டது. தனது முடிவை மறுபரிசீலனை செய்ய தயாராக இல்லாத டிரம்ப் அதற்கான எதிர்வினைகளைச் சந்தித்துவருகிறார்.

பருவநிலை மாற்றத்தில் தீவிரத்தை உணராத அமெரிக்க ஜனாதிபதியின் நடவடிக்கை நவம்பரில் நடைபெறவுள்ள தேர்தல் வரை எதிரொலிக்கிறது.

"இது ஒவ்வொரு அமெரிக்கரும் வரவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கும்போது சிந்திக்கவேண்டிய ஒன்று" என்ற மேற்கண்ட வாசகம் பருவநிலை மாற்றத்தின் தீவிரத்தைக் குறிப்பிட்டு 60இற்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த 520 விஞ்ஞானிகளால் வெளியிடப்பட்ட அமெரிக்க வானிலை ஆய்வு மையத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட ஒன்று.

"உலகின் வெப்பநிலை 1.5 செல்சியஸ் உயர்ந்தால், உணவுப் பற்றாக்குறை, உணவுப்பொருட்களின் விலை உயர்வு, வாழ்வாதாரம் பாதிப்பு, மோசமான சுகாதார தாக்கங்கள மற்றும் மக்கள் இடம்பெயர்தல் போன்ற பல விளைவுகளை பின்தங்கிய மக்கள் மிக அதிகமாக சந்திக்கக்கூடும். பருவநிலை மாற்றம் வளர்ந்த நாடுகளைக் காட்டிலும் ஏழை நாடுகளைத்தான் அதிகம் நாசம்செய்யும்" என்று அறிவியலாளர்கள் எச்சரிக்கின்றனர்.

அதன் காரணமாக 2030ஆம் ஆண்டுக்குள் 2 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையைக் குறைக்க கார்பன்டை ஒட்ஸைட் அளவை 12 முதல் 14 கிகா தொன் வெளியேற்றலாம் என நிர்ணயிக்கப்பட்ட நிலையில், அமெரிக்காவின் வெளியேற்றம் மேலும் பருவநிலை மாற்ற தடுப்பு நடவடிக்கையை பாதிக்கின்றன.

இதனால் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்களைப் பயன்படுத்துவது குறித்து பல்வேறு நாடுகளும் இலக்குகளை ஏற்படுத்துவது அவசியமாகிறது. அதற்கான திட்டங்களுக்கு முன்னுரிமை அளிப்பது, கூடுதல் நிதியை ஒதுக்குவது என அரசின் முன்னெடுப்பே பருவநிலை பாதிப்பைக் குறைக்க உதவும் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

இந்நிலையில், சமீப காலங்களில் உலகெங்கிலும் பதிவாகிவரும் தரவுகள் விஞ்ஞானிகளையும், சூழலியலாளர்களையும் அச்சத்தில் உறைய வைத்துள்ளன. பசுமைக்குடில் வாயுகளின் அளவுகள் 2019ஆம் ஆண்டில் இதுவரை இல்லாதளவுக்கு உயர்ந்துள்ளது. கார்பன்டை ஒட்ஸைட், மீத்தேன் மற்றும் நைட்ரஸ் ஒட்ஸைட் உள்ளிட்ட புவி வெப்பமயமாதலுக்குக் காரணமான வாயுகளின் செறிவுகள் 8 இலட்சம் ஆண்டுகளுக்கு முந்தைய கால அளவைக் காட்டிலும் அதிகமாக உள்ளன.

2019 ஆண்டானது ஆர்க்டிக் மற்றும் அண்டார்டிக்கின் துருவப்பகுதிகளில் இரண்டாவது வெப்பமான ஆண்டாகப் பதிவானது. இதனால் துருவப் பகுதிகளில் பனிப்பாறைகள் கரைந்து கடல் நீர்மட்டம் உயரும் அபாயம் ஏற்படுகிறது.

11ஆம் பக்கம் பார்க்க....

> **"உலகின் வெப்பநிலை 1.5 செல்சியஸ் உயர்ந்தால், உணவுப் பற்றாக்குறை, உணவுப்பொருட்களின் விலை உயர்வு, வாழ்வாதாரம் பாதிப்பு, மோசமான சுகாதார தாக்கங்கள் மற்றும் மக்கள் இடம்பெயர்தல் போன்ற பல விளைவுகளை பின்தங்கிய மக்கள் மிக அதிகமாக சந்திக்கக்கூடும். பருவநிலை மாற்றம் வளர்ந்த நாடுகளைக் காட்டிலும் ஏழை நாடுகளைத்தான் அதிகம் நாசம் செய்யும்"**



## கண்டதும்... கேட்டதும்... பார்த்ததும்...!



*நாடாளுமன்றத்தில் விக்னேஸ்வரன் சுமந்திரனுக்கு நடுவில் மனோ கணேசன் எம்.பி... குரு சிஷ்யருக்கிடையில் முரண்பாடு வந்தால் அண்ணன் மனோ சமரசம் செய்யவேண்டும்...*

*மைத்ரி அருகே அதாவுல்லாஹ் எம்.பி... மைத்ரி ஐயா முகம் அவ்வளவு செழிப்பாயில்லை...*

*முன்வரிசை என்றாலும் கொஞ்சம் தூரத்தில் வைத்துவிட்ட கவலையோ தெரியவில்லை... கட்சித் தலைவர் என்றாலும் ரிஷார்ட்டுக்கு, விமல் வீரவன்சவுக்கு முன்வரிசை ஆசனங்கள் இல்லை...*

*கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அநுரகுமாரவுக்கு பக்கத்தில்...*

*எனக்கென்னவோ சம்பந்தனையும் விக்கியையும் பக்கத்தில் அமரவைத்து அதற்கடுத்த பக்கம் கஜேந்திரகுமாரை வைத்திருக்கலாம்... நன்றாக இருந்திருக்கும்... மைத்ரிக்கு கூட பிரதமர் ஆசனம் அருகே சீட் கொடுத்திருக்கலாம்... ஆனால், அவர்தான் அமைச்சர் இல்லையே...!*

- சிவா -
siva@liberty.lk

அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.





# சுதேச கைத்தொழில்துறையை மேம்படுத்த திறன் வாய்ந்த வகையில் திட்டமிடுங்கள்!

## ஜனாதிபதி கோட்டாபய அதிகாரிகளுக்கு பணிப்பு

சட்டதிட்டங்களுக்குள் முடங்கி பாரம்பரிய கைத்தொழில்கள் வீழ்ச்சியடைவதற்கு இடமளிக்க முடியாதென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாரம்பரிய கைத்தொழில்கள் குறித்த கரிசனையற்ற சட்டங்களை ஆக்குவதன் மூலம் கைத்தொழில்துறையும் சுதேச கைத்தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையும் வீழ்ச்சிடைந்திருப்பதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

தவறுசெய்யும் சிறு பிரிவினர் காரணமாக சட்டரீதியாக கைத்தொழில்துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் பாதிப்படைவதற்கு இடமளிக்கக்கூடாதென்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். பிரம்பு, பித்தளை, மட்பாண்டம், மரப்பாண்டம் மற்றும் கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் எதிர்கால திட்டம் தொடர்பாக நேற்றுமுன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

சுதேச கைத்தொழில்துறையின் அபிவிருத்திக்கு அதிகாரிகள் ஆக்கத்திறன் வாய்ந்த வகையில் செயற்படுவது அவசியமாகும். அடிமட்டத்திலுள்ள பிரச்சினைகள் குறித்து முக்கிய கவனம் செலுத்தப்படவேண்டும். அரசாங்கம் மேற்கொள்ளும் தீர்மானங்கள் கீழ்மட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதுபற்றி ஆராய்ந்து பார்ப்பதும் அவசியமாகும். நீண்டகாலமாக உரிய கவனம் செலுத்தப்படாதிருக்கும் பாரம்பரிய கைத்தொழில்துறையை அபிவிருத்திசெய்வது திட்டமிட்ட வகையில் செய்யப்படவேண்டுமென்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஒவ்வொரு துறை தொடர்பாகவும் விசேட கவனம் செலுத்தி இராஜாங்க அமைச்சு கட்டமைப்பு ஒழுங்கமைக்கப்பட்டிருப்பது இதன் காரணத்தினாலேயே ஆகுமென்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். அரச அனுசரணை கிடைக்காத காரணத்தினால் பாரம்பரிய கைத்தொழிலாளர்கள் கஷ்டங்களுக்குள்ளாகி உள்ளனர். கடந்த தேர்தல் காலத்தில்தான் நாடுபூராகவும் சுற்றுப் பயணம் மேற்கொண்டதில் அதனை தெளிவாக கண்டுகொண்டதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

பிரம்பு, பித்தளை, மட்பாண்டம் மற்றும் மரப்பாண்டத்துறை உள்ளிட்ட கிராமிய கைத்தொழில்துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது. பிரச்சினைகளைத் தீர்த்து கைத்தொழிலை மேம்படுத்துவற்கு குறுகியகால மற்றும் நீண்டகால திட்டங்களை நடைமுறைப்படுத்தி அவற்றை தொடர்ச்சியாக மீளாய்வுசெய்ய வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி குறிப்பிட்டார். களிமண்ணை கொண்டுசெல்லுதல் மற்றும் களிமண்னை பெற்றுக்கொள்வதில் கைத்தொழிலாளர்கள் முகங்கொடுத்துள்ள பிரச்சினைகளை கண்டறியவும் தற்போது மூடப்பட்டுள்ள களிமண் சார்ந்த உற்பத்தி நிறுவனங்களை மீள திறக்கவும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

பாரம்பரிய கைத்தொழில்களின் முக்கியத்துவம் பற்றி பாடசாலை பருவத்திலிருந்து பிள்ளைகளுக்குத் தெளிவுகள் வழங்கப்பட வேண்டும். பல்கலைக்கழக மாணவர்களின் ஆராய்ச்சிகளுக்கும் பாரம்பரிய கைத்தொழில் பொருத்தமான தலைப்பாகும். அதனூடாக இக்கைத்தொழில்துறையின் முன்னேற்றத்திற்கு அதிக பங்களிப்பை வழங்கமுடியும் என்றும் ஜனாதிபதி விளக்கினார்.

சுதேச கைத்தொழில்துறையை மேம்படுத்துவதில் மாகாண அமைச்சுகள், நிரல் அமைச்சுகளுடன்







சிறந்த ஒருங்கிணைப்பு செயற்படவேண்டியதன் அவசியத்தையும் இத்துறைக்கு இளைஞர் தலைமுறையை ஈர்க்கவேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, பாரம்பரிய கைத்தொழிலாளர்களுக்கு தொழில்சார் பெறுமானத்தை வழங்குவது இத்துறைக்குப் பொறுப்பான அமைச்சுகளின் பொறுப்பாகுமென்றும் தெரிவித்தார்.

விவசாய பெறுமதியற்ற தரிசு நிலங்கள் பிரம்புகள் போன்ற கைத்தொழில்துறைக்கு தேவையானவற்றை பயிரிடுவதற்காக பயன்படுத்த முடியும். ஊதுபத்திகள் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் மூங்கில் குச்சிகளை இறக்குமதிசெய்வதற்கு வருடாந்தம் அதிக பணம் செலவிடப்படுகின்றது. அவற்றை எமது நாட்டிலேயே உற்பத்திசெய்வதன் மூலம் வெளிநாடுகளுக்குச் செல்லும் நிதியை மீதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி, கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கு பணிப்புரை விடுத்தார்.

கைத்தொழில்துறை அமைச்சர் விமல் வீரவன்ச, இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர, ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர, நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல, கைத்தொழில்துறை அமைச்சின் செயலாளர் டப்ளியு.ஏ.சூலானந்த பெரேரா, கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தலைவர் உபசேன திசாநாயக்க, தேசிய அருங்கலைகள் பேரவையின் தலைவர் சுதத் அபேசேகர ஆகியோர் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

# சட்டவிரோதமாக தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகளுடன் ஒருவர் கைது!

நீர்கொழும்பு, நால்ல பகுதியில் சட்டவிரோதமாக இயங்கிவந்த துப்பாக்கி தயாரிக்கும் நிலையமொன்றை சுற்றிவளைத்தபோது சட்டவிரோத துப்பாக்கிகள் உள்ளிட்ட மேலும் சில பொருட்களுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த பகுதியில் சட்டவிரோதமாக துப்பாக்கி தயாரிக்கப்படுவதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் பொலிஸார் சுற்றிவளைப்பை மேற்கொண்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போதே, குறித்த இடத்திலிருந்து துப்பாக்கிகள் மீட்கப்பட்டுள்ளதோடு, 68 கைகுண்டுகள், பொலிஸ் மற்றும் இராணுவ வீரர்களின் சீருடைகளும் மீட்கப்பட்டுள்ளன. இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை நீர்கொழும்பு பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# சகல பாடசாலைகளையும் முழுமையாக திறக்க நடவடிக்கை

## - கல்வி அமைச்சு அறிவிப்பு

'கொவிட் - 19' நோய்த் தொற்றின் காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த அனைத்து அரசாங்க மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகளை வழமைபோன்று மீள ஆரம்பிப்பதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. அதற்கமைய, பாடசாலையின் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 200இற்கு மேற்பட்டதாக இருந்தாலும் சுகாதார அமைச்சில் வழங்கப்பட்டுள்ள சுகாதார வழிமுறைகளை கடைப்பிடித்து, மாணவர்களின் எண்ணிக்கையில் வேறுபாடு, சமூக இடைவெளியை பின்பற்றி பாடசாலைகளின் கற்றல் நடவடிக்கைகளை முன்னெடுத்தல் ஆகியவற்றின் அடிப்படையிலேயே, இவ்வாறு பாடசாலைகளில் அனைத்து தரங்களுக்கான பாடசாலைகளை மீள ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் மாகாண செயலாளர்கள், மாகாண கல்விச் செயலாளர்கள், மாகாண கல்விப் பணிப்பாளர்கள், வலய கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்களுக்குத் தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டிருப்பதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

# ஜப்பானிய எரிபொருள் டேங்கர் விபத்து தொடர்பில் இலங்கையர் ஒருவர் கைது!

## 25ஆம் திகதி மொரிஷியஸ் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த தீர்மானம்


மொரிஷியஸ் தீவுக்கு அருகே பவளப்பாறை மீது மோதிய ஜப்பானிய எரிபொருள் டேங்கரின் தலைமை இயக்க அதிகாரியாக இருந்த இலங்கை மாலுமி சில வாரங்களுக்கு முன்னர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, அந்த கப்பலின் கெப்டனாக இருந்த இந்தியரையும் மொரிஷியஸ் பொலிஸார் கைதுசெய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மொரிஷியஸ் பொலிஸார், ஜப்பானிய நிறுவனத்தில் ஏற்பட்ட விபத்தைத் தொடர்ந்து திருட்டு மற்றும் கடல் வன்முறை குற்றச்சாட்டில் இலங்கை மற்றும் இரண்டு இந்திய மாலுமிகள் மீது வழக்குத் தொடர தீர்மானித்துள்ளனர்.

மேலும், இவ்வாறு கைதுசெய்யப்பட்ட இலங்கை மற்றும் இந்திய மாலுமிகள் எதிர்வரும் 25ஆம் திகதி மொரிஷியஸிலுள்ள நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதோடு, விபத்து நடந்த ஒரு வாரத்திற்குப் பிறகு, சுமார் ஆயிரம் தொன் எரிபொருள் கடலில் கலந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் மொரிஷிய தீவுகளில் ஏராளமான சுற்றுச்சூழல் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதோடு, மேலும் அதன் பவளப்பாறைகளுக்கு கடுமையான சேதம் ஏற்பட்டது என்று தூதரக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்தக் கப்பல் சிங்கப்பூரிலிருந்து பிரேசிலுக்கு செல்லும் வழியில் விபத்து நேர்ந்துள்ளது. இதுதொடர்பில் மொரிஷியஸ் பொலிஸார் விபத்துக்கான காரணத்தைக் கண்டறியும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

# கொலன்னாவ பிரதேசத்தில் ஹெரோயினுடன் ஒருவர் கைது!



கொலன்னாவ பிரதேசத்தில் 11 கிராம் 550 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஹங்வெல்ல பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய வெல்லம்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொலன்னாவ பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இந்த சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் 23 வயதுடைவர் என்றும் கொலன்னாவ பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். இவர் நேற்று புதுக்கடை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டார். இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை ஹங்வெல்ல பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# ஷானி அபேசேகரவுக்கு செப்டெம்பர் 3 வரை விளக்கமறியலில்



பொய்யான சாட்சிகளை உருவாக்கிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான ஷானி அபேசேகரவை செப்டெம்பர் மாதம் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கம்பஹா நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நேற்று கம்பஹா நீதிமன்றத்தில் அவரை ஆஜராக்கியபோதே நீதிமன்றம் இவ்வாறு உத்தரவிட்டுள்ளது.

அதேநேரம், உப பொலிஸ் பரிசோதகர் ரோஹன மெண்டிஸையும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## ஹக்மன வாகன விபத்து:

# பலத்த காயங்களுக்குள்ளான பொலிஸ் சார்ஜன்ட் உயிரிழப்பு!

மாத்தறை - ஹக்மன வீதியில் கோங்கல பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் பலத்த காயங்களுக்குள்ளாகிய நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவந்த பொலிஸ் சார்ஜன்ட் உயிரிழந்துள்ளார்.

கடந்த ஜூலை மாதம் 13ஆம் திகதி ஹக்மன பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாத்தறை அக்மன வீதியில் கோங்கல 13ஆவது கட்டையில் வைக்கப்பட்டிருந்த வீதி தடுப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரிகளை ரிப்பர் வாகனம் மோதிவிபத்துச் சம்பவமொன்று நிகழ்ந்திருந்தது.

இந்த விபத்தில், ஹக்மன பொலிஸ் நிலையத்தின் 36 வயதுடைய வலஸ்முல்ல பிரதேசத்தைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரி ஒருவர் உயிரிழந்திருந்தார். இதேவேளை, படுங்காயங்களுக்குள்ளான இரண்டு பொலிஸ் சார்ஜன்ட்கள் தொடர்ச்சியாக வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்தனர்.

இச் சம்பவத்தில் படுகாயங்களுடன் மாத்தறை வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவந்த பொலிஸ் சார்ஜான்ட் ஒருவரே இவ்வாறு நேற்று நள்ளிரவு 12.30 மணியளவில் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் 47 வயதுடையவர் என்பதோடு அவர் வதுகொலகந்த, கிரிந்த பிரதேசத்தைச் சேர்ந்தவராவார். இவர் ஹக்மன பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் சார்ஜன்ட்டாக கடமையாற்றி வந்துள்ளார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் மாத்தறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டதன் பின்னர் சிறையிலடைக்கப்பட்டார்.

இந்நிலையில், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டதோடு இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# பகுப்பாய்வு பொருட்களை விற்பனைசெய்ய வாய்ப்பில்லை விசாரிக்க குழுவொன்றை நியமிக்கவேண்டும்

## அரசாங்க இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களம் அறிவிப்பு

அரசாங்க இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களத்தின் போதைப்பொருள் பிரிவுக்குக் கிடைக்கும் பொருட்களை வியாபார நடவடிக்கைகளுக்கு எடுப்பதற்கு எந்த வாய்ப்பும் இல்லை என்று தெரிவித்துள்ள அந்தத் திணைக்களம், இதுதொடர்பில், முழுமையான விசாரணைகளை முன்னெடுப்பதற்காக விசேட பகுப்பாய்வு அதிகாரிகளைக்கொண்ட குழுவொன்றை நியமிக்குமாறு தொடர்புடைய அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

ஊடக அறிக்கையொன்றினூடாக அரசாங்க இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களம் இதனை தெரிவித்துள்ளது. அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது;

அரசாங்க இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களத்தின் போதைப்பொருள் பிரிவுக்கு வழக்குப் பொருட்களாக கிடைக்கும் பொதிகளுக்காக விசேட பாதுகாப்பு முறைகள் தொடர்பான வழிமுறைகள், திணைக்களத்தின் களஞ்சியப்படுத்தும் களஞ்சியசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. அந்த பாதுகாப்பு வழிமுறைகளுக்கமைய போதைப்பொருள், பொதி அல்லது வழக்குப்பொருட்களை கைமாற்றுவதற்கோ அல்லது பொருட்களை மாற்றவோ வாய்ப்பில்லை.

இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களம் வழக்குப் பொருளொன்றை பொறுப்பேற்றுக்கொண்டது முதல் பரிசோதனைகள் முடிவடைந்து மீண்டும் கையளிக்கும் வரை அந்த பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கும். ஆகவே, குறுகிய காலப்பகுதிக்குள் வியாபாரம் செய்வதற்கு எந்த வாய்ப்பும் இல்லை.

இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களத்தில் பணிபுரியும் இரண்டு அதிகாரிகள் போதைப் பொருளுடன் கைதுசெய்யப்பட்டதாக சம்பந்தப்பட்ட பிரிவினால் அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் இருவரும் இந்தத் திணைக்களத்தின் கனிஷ்ட பணியாளர்கள் என்பதோடு அவர்கள் போதைப்பொருள் பிரிவில் நிரந்தரமாக சேவையில் இணைத்துக்கொள்ளப்படவில்லை.

மேலும், இவர்கள் இருவர் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

அந்தப் பணியாளர்கள் இருவரும் குறித்த சம்பவம் தொடர்பாக முழுமையான விசாரணைகளை முன்னெடுப்பதற்காக விசேட பகுப்பாய்வு அதிகாரிகளைக்கொண்ட குழுவொன்றை நியமிக்குமாறு தொடர்புடைய அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டுள்ளது. அதற்கான முழு ஒத்தழைப்பையும் வழங்க தயாராவுள்ளதாக அறிவித்துள்ளது.

# இறக்குமதியின்றி உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைவதே இலக்கு

## - நாடாளுமன்றில் தெரிவித்தார் டக்ளஸ்

வடக்கு மாகாணத்தில் பல்வேறு திணைக்களங்களின் பிடியில் பயன்பாடின்றி சிக்கிக் கிடக்கும் நிலங்களை விடுவித்து நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய விவசாய செய்கையை மேம்படுத்துவதுடன், கடலுணவு மற்றும் நன்னீர் உள்ளிட்ட நீரியல் வளம் சார்ந்த உணவு வகைகளில் இந்த நாட்டை தன்னிறைவு காணச்செய்வதும் ஏற்றுமதிக்கு ஏற்பாடு செய்து அதிகளவில் அந்நிய செலாவணியை ஈட்டிக்கொள்வதும் தமது இலக்கு எனவும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையின்கீழ் அமைக்கப்பட்டுள்ள 9ஆவது நாடாளுமன்றத்தின் கன்னி அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் என்றவகையில் நாடாளுமன்றில் நேற்று உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவிக்கையில்,

"இந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் எம்மால் இயன்ற அனைத்து உதவிகளையும் வழங்குவதற்கு கடுமையாக உழைத்து,



ஒத்துழைப்பு வழங்குவதே எமது முக்கிய நோக்கமாக இருக்கின்றது.

அந்தவகையில், புலம்பெயர் உறவுகளுக்கு இலங்கையில் முதலீடு செய்வதற்கு ஓர் அழைப்பை விடுத்திருந்தேன். எமக்கு முந்திய ஆட்சிக்காலத்தில் முதலீடுகளை மேற்கொள்ள முன்வந்தவர்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்கள் போன்று எதிர்காலத்தில் இடம்பெறாது என்ற உத்தரவாதத்தையும் வழங்கியுள்ளேன்.

அடுத்ததாக, கடற்றொழில் அமைச்சின் மூலமாக குறிப்பாக, கரையோர மற்றும் ஆழ்கடல் கடற்றொழிலை நவீன தொழில்நுட்பங்களுடன் மேலும் விரிவாக்கம் செய்வதற்கான ஏற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

அதேநேரம், நன்னீர் உள்ளிட்ட அனைத்து நீரியல் வளச் செய்கைகளை மேலும் பரவலாக்கி மேம்படுத்தும் ஏற்பாடுகளும் இத்துறையை குடிசைக் கைத்தொழிலாக முன்னெடுக்கக்கூடிய ஏற்பாடுகளும் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நாட்டில் கடற்றொழில் மற்றும் நன்னீர் உள்ளிட்ட நீரியல் வளச் செய்கை கைத்தொழில்கள் மூலமாக நாட்டு மக்களிடையே போஷாக்கை வளர்க்கவும் இத்தொழிற்றுறைகளில் ஈடுபட்டுள்ள மக்களது வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேபோன்று, ஜனாதிபதியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டதன் அடிப்படையில், வடக்கில் காணப்படும் விவசாயத்துக்குப் பொருத்தமான காணிகள் அனைத்திலும் விவசாய நடவடிக்கையை மேற்கொண்டு நெல் உள்ளிட்ட உப உணவுப் பயிர்களை அதிகளவில் உற்பத்திசெய்வதனூடாக அவற்றின் இறக்குமதிகளை நிறுத்தி, உணவு உற்பத்தியில் எமது நாட்டை தன்னிறைவு காணச் செய்வதே எமது ஆரம்ப இலக்காகும்.

அடுத்தபடியாக ஏற்றுமதிக்கான வழியேற் படுத்தலாகும் என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்" – என்றார்.

# சபாநாயகருக்கு வாழ்த்துத் தெரிவித்த ஜீவன்



9ஆவது நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடர் நேற்றுக் காலை கூடியதில் சபாநாயருக்கு ஜீவன் தொண்டமான் வாழ்த்துத் தெரிவித்தார்.

கூட்டத்தொடரில் சபாநாயகராக மஹிந்த யாப்பா அபேவர்தன, பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாபிட்டியவுடன் குழுக்களின் தலைவர் தெரிவுசெய்யப்பட்டதுடன், எம்.பி.க்களின் சத்தியப்பிரமாண நிகழ்வும் இடம்பெற்றது.

சபாநாயகராக தெரிவுசெய்யப்பட்ட மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் அதன் பொதுச் செயலாளரும் தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

# கனகராயன்குளம் பகுதியில் வெடிக்காத 8 மோட்டார் செல்கள் மீட்பு



(வவுனியா)

வவுனியா, கனகராயன்குளம் குஞ்சுக்குளம் பகுதியில் நிலத்தில் புதையுண்ட நிலையில் காணப்பட்ட வெடிபொருட்கள் விசேட அதிரடிப்படையினரால் நேற்று மீட்கப்பட்டுள்ளன.

அப்பகுதியிலுள்ள காணியொன்றை புனரமைப்புச் செய்வதற்கான வேலைகள் இடம்பெற்றுவந்த நிலையில், நிலத்தில் சந்தேகத்திற்கிடமான பொருட்கள் இருப்பது அவதானிக்கப்பட்டு கனகராயன்குளம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் வெடிக்காத நிலையில் காணப்பட்ட 8 மோட்டார் செல்களை மீட்டுள்ளனர்.

நீதிமன்ற உத்தரவுடன் குறித்த வெடிபொருட்கள் செயலிழக்கச் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மஞ்சள் தூளின் சில்லறை விலை 3,500 ரூபா வரை அதிகரிப்பு

சந்தைகளில் மஞ்சள் தூளின் சில்லறை விலை 3,500 ரூபா வரை அதிகரித்துள்ளதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

மஞ்சள் தூளின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளமையினால், 100 கிராம் மஞ்சள் தூள் 275, 300, 325 மற்றும் 350 ரூபா என பல்வேறு விலைகளில் விற்பனை செய்யப்பட்டு வருவதாக அறியமுடிகின்றது.

அத்துடன், சந்தைகளிலுள்ள பெரும்பாலான மஞ்சள் தூள் தரம் குறைந்தது அல்லது போலியானவை என மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக, ஹோட்டல்களில் உணவுகளுக்கு மஞ்சள் பயன்படுத்துவது நிறுத்தப்பட்டுள்ளதாக ஹோட்டல் உரிமையாளர்கள் 'தமிழன்' செய்திப் பிரிவுக்கு தெரிவித்தனர்.

சந்தையில் மஞ்சள் தூளின் விலை அதிகரித்துள்ளமையால், தமக்கு உணவுகளுக்கு மஞ்சள் தூள்



சேர்ப்பது நட்டத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேவேளை, தாம் வழமையாக உட்கொள்ளும் ஹோட்டல்களில் கூட மஞ்சள் தூள் பயன்படுத்தாமையால் சுவை மாற்றமடைந்துள்ளதாக நுகர்வோரும் 'தமிழன்' செய்திப் பிரிவுக்கு தெரிவித்தமை குறிப்பிடத் தக்கது.

# கல்விப் புரட்சியே சமூக மாற்றத்தின் அடித்தளம்

## - அனுஷா சந்திரசேகரன்

கல்வி புரட்சியினால் ஏற்படும் இளைஞர்களின் எழுச்சியே உண்மையான சமூக மாற்றத்துக்கு அடித்தளமாக அமையும் - என மலையக மக்கள் முன்னணியின் பிரதி செயலாளர் நாயகமும் சட்டத்தரணியுமான அனுஷா சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

மலையகத்தைச் சேர்ந்த எம்மவர் யாழ். பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளர்களாக நியமனம் பெற்றுள்ளமை தொடர்பாக அவர் வாழ்த்துத் தெரிவிக்கும்போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மலையக கல்வி வளர்ச்சி சவால்கள் நிறைந்தது. ஒவ்வொரு மாணவரும் முகம்கொடுக்கும் சிரமங்களும் வளப்பற்றாக்குறையும் அதிகமானவை. இவர்களின் கல்வி வளர்ச்சிக்காக இம்மாணவர்களின் பெற்றோர்கள் முகங்கொடுக்கும் முயற்சிகள் அவர்களின் சக்தியையும் மீறியவை.

இவை அனைத்தையும் உடைத்தெறிந்து இன்று தம்மையும் தம் சமூகத்தையும் பெருமைக்குள்ளாக்கியுள்ள இவர்கள் அனைவரும் மலையகக் கல்வி வளர்ச்சிக்கு உண்மையான சாட்சியாகி நிற்கிறார்கள்.

எந்தத் தடைகளும் வறுமையும் எம் முயற்சியை வீழ்த்தாது என்பதை நிரூபித்து



அடுத்த தலைமுறைக்கு நம்பிக்கை விதைகளை விதைத்து நிற்கிறார்கள்.

அண்மையில் பெருந்தோட்டத்துறை சார்ந்த மூன்று பெண்கள் சட்டத்தரணிகளாகிய பெருமையோடு, இன்று எம் சமூகத்துக்கு மேலும் பெருமை சேர்த்துள்ள இம் மாணவர்களால் நாம் ஒவ்வொருவரும் இறுமாப்புக்கொள்ள வேண்டும்.

எமது எதிர்கால சந்ததியினர் அறிவுசார் சமூகமாக வாழ்வார்கள் என்ற நம்பிக்கையை இவர்கள் ஊடாக அறியமுடிகிறது.

பெருந்தோட்டத்துறை சார்ந்தவர்களை தொழிலாளர்களாக மாத்திரம் கணிக்கும் சமூகப் பார்வையையும், எம்மை உழைக்கப் பிறந்தவர்களாக மட்டுமே அடையாளப்படுத்தும் ஏனையவர்களின் குறைவான மதிப்பீட்டையும் தகர்த்து எமக்கான சமூக அடையாளத்தை அர்த்தத்துடன் பதித்துநிற்கும் இவர்களை இன்றைய மாணவ சமூகம் உதாரணமாக்கிக் கொண்டு தம்மையும் சாதனையாளர்களாக்கிக் கொள்ள வேண்டும். இவர்களின் உயர்ச்சியில் பங்கெடுத்த அனைவரையும் வாழ்த்துகிறேன்" - என குறிப்பிட்டார்.

# உயிர் வாழ்பவர்களை இறந்துவிட்டதாக பதிவுசெய்து அனுப்பப்பட்ட வாக்காளர் அட்டைகளால் சர்ச்சை

(கண்டி)

உயிருடன் இருப்பவர்களை இறந்துவிட்டதாக வாக்காளர் அட்டைகளில் குறிப்பிடப்பட்டுள்ளதால் சர்ச்சை எழுந்துள்ளது.

இரத்தினபுரி மாவட்ட தேர்தல் காரியாலயத்தால் வாக்காளர்களுக்கு அனுப்பிவைக்கப்படும் வாக்காளர் அட்டைகளிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இது விடயமாக கலவான பிரதேச சபையின் இணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது பிரதேச சபை உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

கலவான பிரதேசத்தில் மாத்திரம் இவ்வாறு மரணித்துள்ளதாக மூன்று வாக்காளர்களுக்கு அவர்களது வாக்காளர் அட்டைகளில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் இதனால் இவர்கள் பெரும் மனஅழுத்தத்துக்கு உட்படுவதாகவும் சபையில் சுட்டிக்காட்டப்பட்டது.

எனவே, இவ்வாறு மனதை பாதிப்படையச்செய்யும் செயற்பாடுகள் இனியும் நடைபெறக்கூடாது எனவும் அலட்சியத்தன்மையுடன் செயற்படும் ஊழியர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டுமெனவும் இங்கு உரையாற்றிய உறுப்பினர்கள் பலரும் வேண்டுகோள் விடுத்தனர்.

# தற்காலிகமாக மூடப்பட்ட ஆரம்ப பாடசாலைகளை மீண்டும் திறக்க நடவடிக்கை

(ஹட்டன்)

கொரோனா நோய்த்தொற்றின் காரணமாக தற்காலிகமாக மூடப்பட்டிருந்த ஹட்டன் டிக்கோயா நகரசபை அதிகார எல்லைக்குட்பட்ட ஆரம்பப் பாடசாலைகளை சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றி மீண்டும் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆரம்பப் பாடசாலைகளை ஒவ்வொரு நாளும் கிருமிதொற்றுநீக்கம் செய்தல், குழந்தைகளுக்கிடையில் சமூக இடைவெளியை பேணுதல் ஆகிய சுகாதார பரிசோதகர்களின் ஆலோசனைகளுக்கமைவாக திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக டிக்கோயா நகர சபையின் தலைவர் எஸ்.பாலச்சந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஆரம்பப் பாடசாலை மாணவர்கள் அதிகம் இருக்கும் முன்பள்ளிகளை பகுதியாக பிரிப்பதற்கு அந்தப் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும், இந்த ஆலோசனைகள் ஏற்புடையதா என்று ஆராய்ந்து பார்ப்பதற்கு சுகாதார பரிசோதகர்களுக்கு தேவையான ஆலோசனைகளை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொரோனா நோய்த்தொற்றிலிருந்து பிரதேச மக்களது சுகாதார பாதுகாப்புக்காக டிக்கோயா நகரசபை பல்வேறு வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளதாகவும் இடைக்கிடையே பாடசாலைகள், ஆரம்பப் பாடசாலைகள், முக்கிய இடங்களை கிருமித்தொற்றுநீக்கம் செய்வதற்கு நகர சபையின் பணியாளர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மேலும், ஹட்டன் - டிக்கோயா நகரசபை அதிகார பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களிலிருந்து வெளியாகும் கழிவுகளை பகுதிகளாக பிரித்து, குப்பைகளை ஒன்றுசேர்ப்பதற்கு நகரசபை சேவையாளர்களை பணியில் ஈடுபடுத்துவதற்கும் நகரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ்வாறு, வெளியாகும் கழிவுகளை உக்கலடையும் குப்பைகள், மீள்சுழற்சி செய்யக்கூடிய குப்பைகள் மற்றும் மீள்சுழற்சி செய்ய முடியாத குப்பைகள் என 3 பிரிவுகளாக பிரித்து நகரசபை பணியாளர்களுக்கு ஒப்படைக்க நடவடிக்கை எடுக்குமாறு அறிவித்து பிரதேச மக்களுக்கு துண்டுபிரசுரங்களையும் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், உக்கலடையும் கழிவுகள் திங்கட்கிழமை, புதன்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமை ஆகிய நாட்களிலும், மீள்சுழற்சி செய்யக்கூடிய குப்பைகள் மற்றும் மீள்சுழற்சி செய்யமுடியாத பொருட்களை வாரநாட்களில் சனிக்கிழமையும் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது" என அவர் மேலும் தெரிவித்தார்.

# கொட்டகலையில் வர்த்தக நிலையங்கள் கொள்ளை





(தலவாக்கலை)

திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டகலை வூட்டன் நகரில் அமைந்துள்ள சில்லறை கடை மற்றும் சமையல் எரிவாயு நிரப்பும் நிலையம் என்பன நேற்று அதிகாலை இனந்தெரியாதவர்களால் கொள்ளையிடப்பட்டுள்ளன.

இத்திருட்டுச் சம்பவத்தின்போது சில்லறை கடையில் 23 ஆயிரம் ரூபா பணத்துடன், மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களும், சமையல் எரிவாயு நிரப்பும் நிலையத்தில் 70,000 ரூபா பணமும் கொள்ளையிடப்பட்டுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

திருடன் கடைகளில் முன்புறத்தி லுள்ள இரும்புக் கதவை உடைத்து முன் வழியாக கடைக்கு நுழைந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பாக நுவரெலியா கைரேகை அடையாளப் பிரிவு, நுவரெலியா மோப்ப நாய் பிரிவு உட்பட விசேட பொலிஸ் குழுக்கள் இத்திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களை கைதுசெய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# 20 பெண்களிடம் தங்கச்சங்கிலிகளை அபகரித்தவர் எஹலியகொடையில் கைது

(கண்டி)

நாட்டின் பல்வேறு இடங்களிலும் தங்கச்சங்கிலிகளை அபகரித்த நபர் எஹலியகொடை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பெண்மணி ஒருவரின் கழுத்திலிருந்த தங்கச்சங்கிலியை எஹலியகொடை பிரதேசத்தில் வைத்து அபகரித்து ஓடிச்சென்ற சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை பொலிஸ் விசாரணை செய்தபோதே இத்தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கிணங்க இச்சந்தேகநபர் இதுவரை பாணந்துறை, ஹொரன, பிலியந்தலை, அலுத்கம, வாதுவ ஆகிய பிரதேசங்களிலும் தங்கச்சங்கிலி கொள்ளைகளில் ஈடுபட்டதாகவும் இவ்விடங்களில் 20இற்கும் மேற்பட்ட பெண்களிடம் கொள்ளையடித்து




அபகரிக்கப்பட்ட தங்கசங்கிலிகள் தொடர்பான தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவருடன் நெருங்கிச் செயற்பட்ட இவரது சகா தற்போது தலைமறைவாகியுள்ளதுடன், அவரை தேடிப்பிடிக்கும் பணியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனனர்.

# பல வருடங்களாக குடிநீரின்றி வாடும் இரத்தினபுரி ஓபாத மக்கள்

(பலாங்கொடை)

இரத்தினபுரி மாவட்டம் கொடகெவல பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஓபாத இரண்டாம் பிரிவு தோட்டத்திற்கும், அப்பிரதேசத்தின் இல. 02 தமிழ் வித்தியாலயத்திற்கும் பல வருடங்களாக குடிநீர் வசதி இன்மையால் அத்தோட்ட மக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

இது தொடர்பில் பிரதேச மக்கள் தெரிவிக்கையில்,

ஓபாத தோட்டத்தில் 150 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வாழ்ந்து வருகின்ற நிலையில், இவர்களின் அன்றாட பாவனைக்கு அங்குள்ள இறப்பர் தோட்ட வாய்க்கால் ஒன்றின் வழியாக வரும் ஊற்றுநீரையே பயன்படுத்துகின்றனர். வாய்க்காலை அணைக்கட்டி ஊற்றுநீரை சேமித்து வைத்தே அத்தோட்ட மக்கள் பாவனைக்கு குடிநீரை பெற்றுக்கொள்கின்றனர். அவ்வாறு அன்றாட பாவனைக்கு எடுக்கப்படும் நீர் அப்பிரதேசத்திலுள்ள 150 குடும்பங்களுக்கும் போதுமானதாக இல்லை. சுத்தமானதாகவும் இல்லை.

வீடுகளிலிருந்து ஒரு கிலோமீற்றர் தூரம் வரை நடந்து காலையும் மாலையும் வரிசையில் இருந்து குடிநீர் எடுத்துவருகின்றோம். பல அரசியல்வாதிகள் தேர்தல் காலங்களில் வந்து வாக்குறுதிகள் அளித்தார்கள். ஆனால், எந்த அரசியல்வாதியும் வந்து இதுவரை காலமும் எமது குடிநீர்ப் பிரச்சினையை தீர்த்து வைக்கவில்லை.

ஓபாத வித்தியாலயத்தின் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் இணைந்து சில வருடங்களுக்கு முன் பாடசாலை பாவனைக்கு குடிநீர் எடுப்பதற்காக கிணறொன்று தோண்டி நீர் விநியோகம் செய்ததாகவும் சில மாதங்களுக்கு பின் கிணற்று நீர் வற்றி பாடசாலையின் தேவைக்கும் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

கடந்த அரசாங்கத்தினால் ஐந்து இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடுசெய்து பாடசாலை மலசலகூடங்கள் புனரமைக்கப்பட்டதாகவும், பாடசாலையில் நீர் இல்லாததால் அரசாங்கத்தினால் நிதி ஒதுக்கீடு செய்து புனரமைக்கபட்ட மலசலகூடங்களை பயன்படுத்த முடியாமல் போகின்றது.

பாடசாலைக்கு வரும் மாணவ மாணவிகள், ஆசிரியர்கள் இடைவேளை நேரங்களில் குடிநீர் இல்லாமல் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்கின்றனர்.

பாடசாலைக்கு குடிநீர் விநியோகத்தை சீர்செய்து தருமாறு உரிய அதிகாரிகளிடம் பல தடவைகள் கோரிக்கை விடுத்தும் இதுவரை காலமும் பாடசாலைக்கு குடிநீர் வசதியை பெற்றுக்கொடுக்கவில்லை.

எனவே, உரிய அதிகாரிகள் இதுதொடர்பில் கவனம் செலுத்தி இத்தோட்டத்தின் குடிநீர்ப் பிரச்சினையை சீர்செய்து தரவேண்டும் என்று அத்தோட்ட மக்கள் கோரிக்கை விடுக்கின்றார்கள்.

அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.


# 9ஆவது நாடாளுமன்றத்தின் கன்னி அமர்வு...














படப்பிடிப்பு:-பிரதீப் தம்பரகே, லலித் பெரேரா

# புதிய அரசியலமைப்பு சகல சமூகங்களையும் திருப்திப்படுத்த வேண்டும்

## நாடாளுமன்ற கன்னி அமர்வில் ரிஷாட் பதியுதீன் தெரிவிப்பு

புதிய அரசியலமைப்பு மாற்றம் அனைத்து இனங்களையும் திருப்திப்படுத்தக்கூடிய வகையிலும், நாட்டின் நலனுக்கு ஏற்புடைய தாகவும் அமையவேண்டுமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

9ஆவது நாடாளுமன்றத்தின் கன்னி அமர்வு நேற்று இடம்பெற்றது. அந்த அமர்வில் உரையாற்றியபோது இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது:

அமைச்சரவையின் கன்னி அமர்வில், தற்போதைய அரசியலமைப்பில் மாற்றத்தைக் கொண்டுவர முடிவெடுத்து, அதற்கான குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. காலத்துக்குக்காலம் அதிகாரத்துக்கு வருகின்ற அரசாங்கங்கள், அரசியலமைப்பில் மாற்றங்களை செய்துள்ளன. அதேபோன்று, இனிவரும் காலங்களிலும் பதவிக்கு வரும் அரசாங்கங்களும் இன்னொரு மாற்றத்தை மேற்கொள்ளாத வகையில், இந்த அரசியலமைப்பில் சீர்திருத்தம் செய்ய வேண்டும்.

உத்தேச அரசியலமைப்பு வெறுமனே ஒரு சாராரையோ, ஒரு கட்சியையோ, ஒருசில இனவாதிகளையோ திருப்திப்படுத்துவதற்கு என்றில்லாமல், நாட்டில் வாழும் அனைத்து சமூகங்களையும் குறிப்பாக, பெரும்பான்மை, சிறுபான்மை என்ற பேதமின்றி, எல்லோருக்கும் நன்மையளிக்கக்கூடிய வகையில் அமையவேண்டும். அத்துடன், அவர்களது உரிமைகளை மதிக்கக்கூடிய வகையிலும் அது இருக்கவேண்டும். அவ்வாறு இருந்தால் மட்டுமே, இந்நாட்டில் ஒரு நிலையான சமாதானத்தை எதிர்பார்க்க முடியும்.

சுதந்திரத்தைப் பெற்றுக்கொண்டபோது, பொருளாதாரத்தில் பலமடைந்திருந்த நமது நாடு பின்னர், காலப்போக்கில் இங்கு வாழ்ந்த ஓர் இனம் தமக்கு தனிநாடு வேண்டும் என்று போராடிய வரலாறு இருந்தது. அதன்மூலம், நாட்டின் பொருளாதாரம் அழிந்ததுடன் இலட்சக்கணக்கான உயிர்கள் காவுகொள்ளப்பட்டன என்பதையும் மனதில்கொள்ள வேண்டும்.

அரசியலுக்காக, தேர்தல் காலங்களில் மட்டும் மக்களை உசுப்பேற்றும் அரசியல் கலாசாரத்தைக்கொண்ட கட்சிகளாக நாம் இருக்கின்றோம். எனவே, அரசியலமைப்பு மாற்றம் நிரந்தரமான ஒன்றாக இருக்க வேண்டும்.

இன்றைய நாடாளுமன்ற அமர்வில், புதிய சபாநாயகராகத் தெரிவுசெய்யப்பட்ட மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு, எமது கட்சியின் சார்பில் எமது வாழ்த்துகளை தெரிவிக்கின்றோம்.

நாடாளுமன்ற வரலாற்றில் தங்களுக்கு நீண்ட அனுபவம் உண்டு. நீங்கள் பல உயர் பதவிகளை வகித்துள்ளீர்கள். கொழும்பு பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற நீங்கள், பல சர்வதேச கருத்தரங்குகளில் பங்குபற்றிய அனுபவம் கொண்டிருக்கின்றீர்கள். முதலமைச்சராகவும், அமைச்சராகவும், நாடாளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றி, அரசியல் அனுபவத்தைப் பெற்றிருக்கின்றீர்கள்.

எனவே, நீங்கள் பதவி வகிக்கும் உங்கள் காலத்தில் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்ற பேதமின்றி, ஒரு காவலனாகவும், உறுப்பினர்களது வரப்பிரசாதங்களை பாதுகாக்கின்ற ஒருவராகவும் செயற்படுவீர்கள் என்ற பூரண நம்பிக்கை எமக்குண்டு - என்று தெரிவித்தார்.

## 902 பொதுமன்னிப்பு கைதிகளின் பெயர் பட்டியல் ஜனாதிபதியிடம் கையளிப்பு



கைதிகள் மற்றும் அவர்களின் விடுதலை குறித்து ஆராய்ந்து பார்ப்பதற்காக நியமிக் கப்பட்டிருந்த குழு, பொதுமன்னிப்பு கைதிகளின் பெயர்ப்பட்டியலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் நேற்று கையளித்தது.

பொதுமன்னிப்பு வழங்குவதற்கு தகுதியுடைய 902 பேரின் பெயர்கள் இந்தப் பட்டியலில் உள்வாங்கப்பட்டுள்ளன. சிறு குற்றங்களை இழைத்தோருக்கே இவ்வாறு மன்னிப்பு வழங்குவதற்கு ஜனாதிபதியின் அனுமதியை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை,

கைதிகள் மற்றும் அவர்களின் விடுதலை குறித்து ஆராய்ந்து பார்ப்பதற்காக அண்மையில் ஜனாதிபதியால் குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது.

கொரோனா தொற்றை கட்டுப் படுத்தல் மற்றும் சிறைச்சாலைகளில் நிலவும் நெருக்கடியை குறைக்கும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

ஜனாதிபதி சட்டத்தரணி காலிங்க இந்திரதிஸ்ஸ தலைமையில் குழு நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கு - கிழக்கில் ஒரு இலட்சம் வேலைவாய்ப்பு பட்டியலை மீளாய்வு செய்ய உத்தரவிட்டது அரசு!



குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சம் பேருக்கு அரச வேலை வாய்ப்பு வழங்கும் திட்டத்தில் வடக்கு, கிழக்கில் இருந்து தெரிவுசெய்யப்பட்டவர்களின் பட்டியலை அவசரமாக மீளாய்வு செய்யும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டலுவல்கள் அமைச்சிலிருந்து வடக்கு கிழக்கில் உள்ள சகல அரச அதிபர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களிற்கு நேற்று முன்தினம் மாலை இந்த அவசர அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி பட்டியலை மீளாய்வு செய்து, நேற்று மாலைக்குள் புதிய பட்டியலை அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வருமானம் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த க.பொ.த சாதாரண தரப் பரீட்சை தகைமை கொண்ட ஒரு இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கும் திட்டத்தை ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தில் கோட்டாபய ராஜபக்ஷ வெளியிட்டிருந்தார்.

இதன்படி ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் பல்நோக்கு அபிவிருத்திக்கான செயலணி ஊடாக இதற்கான நடவடிக்கையெடுக்கப்பட்டது.

ஒவ்வொரு பிரதேச செயலகத்திலுமுள்ள வறுமைக்கோட்டின் கீழுள்ள, க.பொ.த. சாதாரணதரம் வரை கற்றவர்களை பிரதேச செயலங்களின் மூலம் தெரிவுசெய்தனர். இந்த தெரிவில் இராணுவமும், பிக்குகளும் அங்கம் வகித்தனர்.

வடக்கு கிழக்கிலிருந்து சுமார் 20,000 இளைஞர், யுவதிகள் இதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். கொரோனா நிலைவரம் காரணமாக அந்த செயற்றிட்டம் தாமதமாகி தற்போது மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், நேற்று முன்தினம் மாலை உள்நாட்டலுவல்கள் அமைச்சிலிருந்து வடக்கு கிழக்கிலுள்ள சகல மாவட்ட செயலாளர்களிற்கும், பிரதேச செயலாளர்களிற்கும் அவசர உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட செயலகங்கள் ஊடாக அனுப்பப்பட்ட பட்டியலில் திருப்தியில்லையென்பதால், மீளாய்வு செய்யப்பட்ட பட்டியலை அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தப்பட்டது.

அரசியல் செல்வாக்கின் அடிப்படையிலோ அல்லது வேறு செல்வாக்கின் அடிப்படையிலோ தெரிவுகள் இடம்பெற்றிருக்கலாம் என்று கருதப்படுவதால் இவ்வாறு மீளாய்வு செய்யுமாறு கோரப்பட்டதாக அரசதரப்பு தகவல்கள் தெரிவித்தன.

### கோடீஸ்வரன் விவகாரத்திற்கு பதிலடியா?

## தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாநகர சபை உறுப்பினரை உருவியெடுத்தது ரெலோ!





தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் (ரெலோ) கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றியடைந்த 3 உறுப்பினர்களுக்கும் யாழ்ப்பாணத்தில் வரவேற்பு நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ரெலோவின் யாழ். மாவட்ட குழுக் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் நடந்தது. கட்சியின் தேசிய அமைப்பாளர் சுரேன் குருசுவாமி தலைமையில் அவரது தேர்தல் அலுவலகத்தில் இந்தக்கூட்டம் நடந்தது.

யாழ். மாவட்ட குழுக் கூட்டம் என குறிப்பிடப்பட்டபோதும், இதில் 15 பேர் மாத்திரமே அழைக்கப்பட்டிருந்தனர். இதன்போது, இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாநகரசபை உறுப்பினர் எம்.எம்.நிபாஹிரும் கலந்துகொண்டார்.

தமது தரப்பிலிருந்து ஆட்களை தமிழ் அரசுக் கட்சி உருவி எடுக்கிறது என ரெலோ உள்ளிட்ட பங்காளிக்கட்சிகள் அடிக்கடி நியாயமான கோபத்தை வெளிப்படுத்திவந்தன. இம்முறை தமிழ் அரசுக் கட்சியின் பாணியிலேயே அந்தக் கட்சியின் உறுப்பினரை ரெலோவின் யாழ். மாவட்ட கிளை உருவியெடுத்துள்ளது.

அத்துடன், கட்சியில் அதிருப்தியடைந்து ஒதுங்கிய பழைய உறுப்பினர்கள் யாரையும் மீள இணைப்பதில்லையென்றும், பழையவர்களுக்கு மாகாண சபைத் தேர்தலில் வாய்ப்பு வழங்கக்கூடாது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

ரெலோவின் உறுப்புரிமையைக் கொண்டவர்களும் யாழ்ப்பாணத்தில் மீள உறுப்புரிமைப் படிவத்தை பதிவுசெய்ய வேண்டும் என்றும், ஒவ்வொருவரும் குறைந்தது 4 பேரையாவது அங்கத்தவர்களாக இணைக்கவேண்டுமெனவும் குருசாமி சுரேந்திரன் கட்டளையிட்டார்.

புதுத் தும்புத்தடி கூட்டும் என்ற சொல்லின்படி, எம்.எம்.நிபாஹிர் 25 உறுப்பினர்களை இணைப்பதாகக் கூறி, விண்ணப்பப்படிவங்களை பெற்றுக்கொண்டார்.

## மன்னார் விசேட அதிரடிப்படை முகாமின் புலனாய்வு பொறுப்பதிகாரி கைது



(மன்னார் நகர்)

மன்னார் விசேட அதிரடிப்படை முகாமின் புலனாய்வு மற்றும் விசேட நடவடிக்கை பிரிவு பொறுப்பதிகாரியான உப பொலிஸ் இன்ஸ்பெக்டர் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பாரியளவான போதைப்பொருள் கடத்தற்காரர்கள் மற்றும் திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குழுவுடன் இணைந்து போதைப்பொருளைக் கடத்தி விற்பனைசெய்து ஆயுதங்களை சேகரித்தமை தொடர்பிலேயே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த விசாரணை தொடர்பில் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்தில் கடமையாற்றிய உத்தியோகத்தர்கள் குழுவொன்று குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கும் உத்தரவின்பேரில் விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

குறித்த சந்தேகநபர்களிடமிருந்து பெறப்பட்ட தகவல்களுக்கமைய, பொலிஸ் விசேட அதிரடிப்படையின் உப பொலிஸ் இன்ஸ்பெக்டர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட 49 வயதான குறித்த சந்தேகநபர் புவக்பிட்டிய வெஹேரகொல்ல பகுதியைச் சேர்ந்தவராவார்

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு, வாக்குமூலம் பதிவு செய்ததையடுத்து அவர் நேற்றிரவு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் கட்டளைகளுக்கமைய சந்தேகநபரை தடுத்துவைத்து அடுத்தகட்ட விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனிடையே, போதைப்பொருள் கடத்தல் தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்தின் உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்பட்ட தகவல்களுக்கமைய பத்திரிகை செய்தியாளர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மெதமுலன – அம்பகொலவெவ பகுதியைச் சேர்ந்த 30 வயதான ஊடகவியலாளரே கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

COVID-19 தொற்று காலப்பகுதியில் ஊடகவியலாளர் என்ற ரீதியில் செயற்பட்டு பாதுகாப்புப் பிரிவினரை தவறாக வழிநடத்தி ஹோமாகம பிட்டிபன பகுதிக்கு சட்டவிரோத துப்பாக்கிகளை கொண்டுசெல்ல உதவிய சந்தேகத்தில் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த துப்பாக்கிகளை திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குழு மற்றும் பல்வேறு தரப்பினருக்கு வழங்குவதற்கு உடந்தையாக இருந்தமை தொடர்பில் குறித்த ஊடகவியலாளர் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவர் தற்போது தடுத்துவைக்கப்பட்டுள்ள சந்தேகநபர் ஒருவருக்கு சொந்தமான வானில் ஊடகவியலாளர்களுக்கான பதாகையைக் காட்சிப்படுத்தி, அடையாள அட்டையைத் தவறாகப் பயன்படுத்தி இந்த சட்டவிரோத துப்பாக்கிகளை பிட்டிபன பகுதிக்கு கொண்டுசெல்ல உதவியுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

### வீடு புகுந்து தாக்குதல் மேற்கொண்ட நபருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க

## பொலிஸார் தயக்கம்

பாதிக்கப்பட்டவர்கள் குற்றச்சாட்டு



தென்மராட்சி - வரணி பகுதியில் வீடு புகுந்து தாக்குதல் மேற்கொண்ட நபரொருவருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு கொடிகாமம் பொலிஸார் தயக்கம் காட்டிவருவதாக பாதிக்கப்பட்டவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது;

கடந்த மாதம் 19ஆம் திகதி இரவு நபரொருவர் பொல்லு மற்றும் கோடரியோடு வீடு புகுந்து வீட்டிலிருந்த பெண்ணொருவரையும் வயோதிபர்கள் இருவரையும் தாக்கியுள்ளதுடன், வீட்டுப்பொருட்களையும் கோடாரியால் தாக்கி சேதப்படுத்தியுள்ளார்.

இத்தாக்குதலுக்குள்ளானவர்கள் காயமடைந்த நிலையில், சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு நான்கு நாட்கள் சிகிச்சைபெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டது. பின்னர் வைத்தியசாலை சென்ற பொலிஸார் தாக்குதலுக்கு இலக்கான மூவரிடமும் முறைப்பாட்டை பதிவுசெய்திருந்தனர்.

இந்நிலையில், முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டு 10 நாட்கள் கடந்த பின்பும் தாக்குதல் நடத்திய சந்தேகநபரை கொடிகாமம் பொலிஸார் கைதுசெய்யாத நிலையில், பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் பாதிக்கப்பட்டவர்கள் முறையிட்ட பின்னர் இம்மாதம் 2ஆம் திகதி சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டு அடுத்தநாள் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இந்த நபரை விடுவிப்பதற்கு முன்னர் இரு தரப்பிடமும் வாக்குமூலம் பெறப்பட்டு 12ஆம் திகதி நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்கிறோம், நீதிமன்றம் வாருங்கள் என பொலிஸ் தரப்பால் தெரிவிக்கப்பட்டது என்றும், 12ஆம் திகதி பொலிஸாரோடு பாதிக்கப்பட்ட தரப்பினர் தொடர்புகொண்டு நீதிமன்றம் செல்கிறோம் என சொன்னபோது "இன்று செல்லவேண்டாம் 19ஆம் திகதி கட்டாயம் செல்லுங்கள்" என பொலிஸ் தரப்பால் கூறப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், நேற்று முன்தினம் பாதிக்கப்பட்ட மூவரும் நீதிமன்றம் சென்று சுமார் 5 மணித்தியாலம் காத்திருந்தும், குறித்த சம்பவம் தொடர்பாக நீதிமன்றுக்கு வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை எனவும் தெரியவந்தது என பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர். அத்துடன், குறித்த சம்பவத்தில் அநீதி இழைக்கப்பட்ட தமக்கு நீதியை பெற்றுத்தருமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.







*9ஆவது நாடாளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கன்னி அமர்வுக்கு செல்வதற்கு முன்னர், கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீமின் தலைமையில் நேற்று காலை கொழும்பு ஜாவத்தை பள்ளிவாசலில் கட்சியின் ஸ்தாபக தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரபின் அடக்கஸ்தலத்திற்கு சென்று அன்னாருக்காக விசேட துஆ பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.*
◄◄◄◄◄◄◄

## பொதுமக்கள் - முன்னணி கூட்டு நடவடிக்கை: காணி சுவீகரிப்பு முயற்சி முறியடிப்பு!



யாழ்ப்பாணம், மாதகலில் கடற்படையினருக்கு காணி சுவீகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட அளவீட்டு முயற்சி நேற்றுக் காலை தடுத்துநிறுத்தப்பட்டுள்ளது. பொதுமக்களும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சட்டத்தரணி சுகாஸும் இணைந்து அந்த முயற்சியை தடுத்துநிறுத்தினர்.

மாதகல் துறையில் கடற்படையினரின் கண்காணிப்பு நிலை அமைந்துள்ள தனியார் காணிகளை நிரந்தரமாக சுவீகரிக்க ஏதுவாக நேற்று அளவீட்டுக்கு திட்டமிடப்பட்டிருந்தது. காணி உரிமையாளர்களுக்கு அது குறித்து அறிவிக்கப்பட்டிருந்தது.

நேற்றுக் காலை அங்கு பொதுமக்கள், சட்டத்தரணி சுகாஷ் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் காணி அளவீட்டு முயற்சிக்கு எதிராக போராட்டம் நடத்தினர்.

காணி உரிமையாளர்களை கடற்படையினர், பொலிஸார், நில அளவை திணைக்களத்தினர் சந்தித்து சமரச முயற்சிக்கு முயன்றனர். எனினும், காணியை வழங்கமுடியாதென்பதில் காணி உரிமையாளர்கள் விடாப்பிடியாக நின்றனர்.

இதையடுத்து அளவீட்டு முயற்சி தோல்வியடைந்தது. காணியை வழங்கமாட்டோமென காணி உரிமையாளர்கள் கையொப்பமிட்ட கடிதத்தை நில அளவைத் திணைக்களத்திடம் வழங்கினர். அதை பெற்றுக்கொண்டு, அளவீட்டு முயற்சியை கைவிட்டு நிலஅளவை திணைக்களத்தினர் அங்கிருந்து சென்றனர். இந்த நடவடிக்கையில் காணி உரிமையாளர்களுக்கான சட்ட வழிகாட்டல்களை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சட்டத்தரணி வழங்கினார்.

அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.



# ஓட்டமாவடி மீன் சந்தைத் தொகுதி தொடர்பாக தவிசாளர் நௌபரிடம் கோரிக்கை முன்வைப்பு





ஓட்டமாவடி பிரதான வீதியில் அமைந்திருக்கும் மீன் சந்தைத் தொகுதியிலுள்ள மீன் கடை நடத்துனர்களின் அமைப்பான அஸ்-ஸபா மீனவர் சங்கப் பிரதிநிதிகள் கேட்டுக்கொண்டதற்கமைய விசேட கலந்துரையாடலொன்று கடந்த புதனன்று தவிசாளர் ஏ.எம்.நௌபர் தலைமையில் இடம்பெற்றது.

இதில் பிரதேச சபை உறுப்பினர் ஏ.ஜி.அமீர், சபையின் செயலாளர் எஸ்.எம்.சிஹாப்தீன், பிரதம முகாமைத்துவ உதவியாளர் ஏ.அக்பர் மற்றும் மீன் சந்தைத் தொகுதியிலுள்ள கடை நடத்துனர்களும் கலந்துகொண்டனர்.

மீன் சந்தைக் கடைகளுக்கான ஒப்பந்தக் காலம் எதிர்வரும் செப்டெம்பர் 30ஆம் திகதியுடன் முடிவடைவதனால், இவற்றுக்கான குத்தகை கேள்வி கோரப்பட்டுள்ளது. மீன் சந்தைக் கடைத்தொகுதி தொடர்பாக கடந்த ஓகஸ்ட் 15ஆம் திகதியன்று நடைபெற்ற மக்கள் பிரதிநிதிகளின் விசேட அமர்வில் கீழ்வரும் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

1. புதிய கேள்வி கோரல் ஒரு வருட காலத்தையும் 10வீத அதிகரிப்பையும் கொண்டதாக அமைதல் வேண்டும்.

2. பிரதேச சபையுடன் செய்துகொள்ளப்பட்ட குத்தகை ஒப்பந்தத்தை முறையாக பின்பற்றிய குத்தகைதாரர்களின் வியாபார நடவடிக்கைகளுக்கு பிரதேச சபையின் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதெனவும், ஒப்பந்த விதிகளை மீறியோருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

எனினும், இத்தீர்மானங்கள் தமக்கு பாதகமாக அமைந்திருப்பதாக சங்கப் பிரதிநிதிகள் வலியுறுத்தியதுடன், கீழ்வரும் ஒத்துழைப்பை சபைக்கு வழங்குவதாகவும் அதனை பரிசீலிக்குமாறும் கோரிக்கை விடுத்தனர்.

1. அனைத்து நிலுவைத் தொகையையும் சங்கம் பொறுப்பேற்று முழுமையாக செலுத்துதல்.

2. ஏலவே செய்யப்பட்ட குத்தகை உடன்படிக்கையை சிலர் மீறியதால் சபைக்கு ஏற்பட்ட நிர்வாக ரீதியான சிக்கலை தாம் தீர்த்துவைக்க முழுமையான ஒத்துழைப்பை வழங்குதல்.

3. எதிர்காலத்தில் ஒப்பந்த மீறலோ, நிலுவையோ இல்லாமல் குத்தகை விதிகள் பேணப்பட தாம் முழுமையாக பொறுப்பேற்றல்.

4. பல கோடிக்கணக்கான ரூபாவை முதலீடு செய்து, பலநூறு குடும்பங்களின் வாழ்வாதாரத்தின் மையமாகவும் இருக்கும் இத்தொழிலை பாதுகாப்போடு நடத்திச் செல்ல பிரதேச சபையும், உள்ளூராட்சி திணைக்களமும் மூன்று வருட காலத்துக்குக் குறையாததாக குத்தகை காலத்தை நீடித்துத் தருதல்.

05. 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாத குண்டுத் தாக்குதல் மற்றும் இவ்வருடத்தில் ஏற்பட்டுள்ள கொரோனா நோய்த் தாக்கங்களினாலும் தங்களது வியாபார நடவடிக்கைகள் மிக மோசமாக பாதிக்கப்பட்டு தம்மால் மீன்பிடி நடவடிக்கைகளில் முதலீடுசெய்த தொகைகளை மீளப்பெற்றுக்கொள்ள முடியாத நிலையும், நாடு முழுதும் ஏற்றுமதிசெய்யும் மீன் வியாபார நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளதால் பாரிய நிதி இழப்பீட்டுக்கும், மீள முடியாத கடன் தொகையிலும் தாம் சிக்கியிருப்பதாகவும். இவ்விடயங்களை பிரதேச சபையும், உள்ளூராட்சி திணைக்களமும் மனிதாபிமானத்துடன் பரிசீலனை செய்தல் .

மேற்குறித்த கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு பிரதிநிதிகள் வலியுறுத்தி கேட்டுக்கொண்டனர்.

இது விடயமாக தவிசாளர் பதிலளிக்கையில், இக் கோரிக்கைகள் மனிதாபிமான அடிப்படையில் அமைந்திருந்தபோதிலும் குத்தகைக்கான சட்டதிட்டங்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளின் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணைந்தே இக் கோரிக்கைகளை பரிசீலிக்க முடியும் எனவும், முன்வைக்கப்பட்டுள்ள இந்தக் கோரிக்கைகளையும், ஒத்துழைப்புகளையும் தனக்கு எழுத்துமூலம் சமர்ப்பிக்குமாறும் அதற்கான உரிய நடவடிக்கைகளை தான் மேற்கொள்வதாகவும் குறிப்பிட்டார்.

# பட்டதாரி நியமனத்தில் வெளிநாட்டில் பட்டம் பெற்றவர்கள் புறக்கணிக்கப்படுவது நியாயமல்ல

## மீள் பரிசீலனை செய்ய கோருகிறார் இம்ரான் மஹ்ரூப் எம்.பி.

பட்டதாரி நியமனத்தில் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பட்டம் முடித்தவர்கள் புறக்கணிப்படுவது எந்த வகையிலும் நியாயமானதல்ல.

அரசு இந்த விடயத்தை உடனடியாக மீள் பரிசீலனை செய்து தகுதியான சகல பட்டதாரிகளுக்கும் நியமனம் வழங்க வேண்டும். நமது இளைஞர், யுவதிகள் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பட்டம் முடித்தது அவர்களது தவறல்ல. எனவே, பட்டதாரி நியமனத்தில் அவர்களும் உள்வாங்கப்பட வேண்டும் - என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் பட்டக் கற்கைநெறிகளை உள்வாரியாகவோ அல்லது வெளிவாரியாகவோ கற்க வாய்ப்புக் கிடைக்காதவர்கள்தான் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பட்டம் முடித்துள்ளார்கள். இந்தப் பட்டம் இலங்கையில் அங்கீகாரம் கொண்டதென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு சான்றுபடுத்துகின்றது.

இதற்கு முன்னைய காலங்களில் வழங்கப்பட்ட பட்டதாரி நியமனங்களின் போது வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களில் பட்டம் முடித்தவர்களும் உள்வாங்கப்பட்டிருந்தனர். இதனால்தான் அதிகமானோர் வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களில் படித்துப் பட்டப்படிப்பு பெறும் நிலை வந்தது. இப்படியான நிலையில் தற்போது பட்டதாரி நியமனத்திற்கு விண்ணப்பம் கோரப்பட்டபோது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகப் பட்டம் என்றே குறிப்பிடப்பட்டிருந்தது. வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்றவர்கள் விண்ணப்பிக்க முடியாது என்று குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. இதனால்தான் அனைத்துப் பட்டதாரிகளும் விண்ணப்பித்தார்கள்.

தேர்தலுக்கு முன்னர் பட்டதாரிகளுக்கு நியமனக் கடிதம் வழங்கப்பட்டபோது வெளிநாட்டுப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர்களுக்கும் நியமனம் வழங்கப்பட்டது.

நிலைமை இப்படியிருக்க, ஆட்சிக்கு வந்த பின்னர் பட்டதாரி நியமனத்தில் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பட்டம் முடித்தவர்கள் புறக்கணிப்படுவது எந்தவகையிலும் நியாயமானதல்ல.

அரசு இந்த விடயத்தை உடனடியாக மீள் பரிசீலனை செய்து தகுதியான சகல பட்டதாரிகளுக்கும் நியமனம் வழங்க வேண்டும்.

அத்துடன், இந்த நியமனத்துக்கு விண்ணப்பித்த பலர் கொரோனாவால் ஏற்பட்ட அசாதாரண நிலை காரணமாக நாடு திரும்பமுடியாமல் வெளிநாடுகளில் தங்கியுள்ளனர். எனவே, அவர்கள் நாடு திரும்பி இந்நியமனத்தைப் பெற கால அவகாசம் வழங்கப்படவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# 33 கசிப்பு போத்தல்களை தம் வசம் வைத்திருந்தவருக்கு அபராதம் விதிப்பு

திருகோணமலை நிலாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோதமான முறையில் 33 கசிப்பு போத்தல்களை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின்பேரில் கைது செய்யப்பட்ட சந்தேகநபருக்கு 45,000 ரூபா அபராதம் செலுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திருகோணமலை நீதிமன்ற மேலதிக நீதிவான் ரந்திக லக்மால் ஜெயலத் முன்னிலையில் நேற்று சந்தேகநபரை ஆஜர்படுத்தியபோதே நீதவான் மேற்படி உத்தரவை பிறப்பித்தார்.

சாம்பல் தீவு இலுப்பைக்குளம் பகுதியைச் சேர்ந்த சிவலிங்கம் மனோகரன் (வயது 44) என்பவரே இச்சம்பவத்தின்போது கைது செய்யப்பட்டவராவார்.

சட்டவிரோதமான முறையில் கசிப்பு தயாரிக்க பயன்படுத்தும் கோடா 25 ஆயிரம் மில்லிலீற்றரை தம் வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின்பேரில் கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது குறித்த நபர் தன்னை குற்றவாளி என ஒப்புக்கொண்டதையடுத்தே அவருக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

அபராத பணத்தை கட்டத் தவறும் பட்சத்தில் இரண்டு மாத கால கடூழிய சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டிவரும் எனவும் மேலதிக நீதவான் ரந்திக லக்மால் ஜெயலத் உத்தரவிட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, எதிர்வரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் செய்யும் பட்சத்தில் அபராதத்தொகை இதைவிட அதிகமாக அறவிடப்படும் எனவும் நீதவான் எச்சரிக்கை செய்தார்.

# பற்றைக்காடாகியுள்ள திக்கோடை வைத்தியசாலையை திறந்துவைக்குமாறு அரசிடம் மக்கள் வேண்டுகோள்





மட்டக்களப்பு போரதீவுப்பற்று பிரதேசத்திலுள்ள திக்கோடை கிராமத்தில் கட்டப்பட்டுள்ள ஆரம்பப்பிரிவு வைத்தியசாலை கடந்த மூன்று வருடங்களாக திறக்கப்படாது பற்றைக்காடாகவும் கால்நடைகளின் இருப்பிடமாகவும் காட்சியளிக்கின்றது. இதனால் இப்பிரதேசத்தில் வசிக்கும் பத்துக்கும் மேற்பட்ட கிராம மக்கள் வைத்தியசேவையை பெற்றுக்கொள்வதில் மிகுந்த சிரமங்களுக்குள்ளாகின்றனர்.

- இவ்வாறு மட்டக்களப்பு போரதீவுப்பற்று பிரதேச திக்கோடை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொருளாளர் வி.சசிகரன் கூறினார்.

மேலும் அவர் இது தொடர்பாக தெரிவிக்கையில்,

ஒரு வைத்தியசாலையை கட்டிவிட்டு ஆடு, மாடுகள் தங்குகின்ற இருப்பிடமாக அதனை மாற்றிவிட்டுள்ளனர். எங்கள் கிராம மக்கள் மட்டுமல்லாமல், சுற்றியிருக்கின்ற பத்துக்கும் மேற்பட்ட கிராம மக்கள் நோய் நொடி வந்தால் இங்கிருந்து பதினைந்து கிலோ மீற்றர் தூரத்திலுள்ள களுவாஞ்சிக்குடி வைத்தியசாலைக்குத்தான் செல்ல வேண்டும்.

இங்கிருந்து இரவில் நோயாளிகளைக் கொண்டுசெல்வதற்கு அவசரத்திற்கு வாகனம் கிடைக்காது. அப்படிக் கிடைத்தாலும் கடுமையான நோயாளி களின் உயிர் இடைநடுவிலேயும் பிரிந்து விடும். இப்படித்தான் அதிகமானோர் உரியநேரத்துக்கு சிகிச்சை கிடைக்காது உயிரிழந்துள்ளனர். கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் ஒரு கோடி ரூபாவுக்கு மேல் செலவில் கட்டப்பட்ட இந்த வைத்தியசாலையை இந்த புதிய அரசாங்கமாவது திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். அனைத்து வசதிகளும் இருந்தும் பாழடைந்து போகின்ற நிலமையில்தான் இந்த வைத்தியசாலை உள்ளது.

எனவே, இதை திறந்து மக்களுக்கு சிறந்த வைத்திய சேவையை வழங்குவதற்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான புதிய அரசாங்கமும், மட்டக்களப்பு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனும், அதிகாரிகளும் விரைவில் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார்.

# இன்றைய ராசி பலன்கள்

21.08.2020 (வெள்ளிக்கிழமை)

வித்வ கலாபூஷணம் ஜோதிட திலகம்
சிவஸ்ரீ வெங்கட சுப்ரமணிய குருக்கள்

| | | |
|---|---|---|
| மேஷம் | - | துணிவு |
| ரிஷபம் | - | பரிவு |
| மிதுனம் | - | உறுதி |
| கடகம் | - | செலவு |
| சிம்மம் | - | பாசம் |
| கன்னி | - | யோகம் |
| துலாம் | - | அன்பு |
| விருச்சிகம் | - | சினம் |
| தனுசு | - | பயம் |
| மகரம் | - | ஆக்கம் |
| கும்பம் | - | வாழ்வு |
| மீனம் | - | ஆசை |

**சுப நேரம்**
காலை: 06.05 -07.35
காலை: 04.15 - 07.00

**இராகு காலம்**
10.35
12.05

**எம கண்டம்**
03.00
04.30

# ரயர் இறக்குமதி நிறுத்தப்பட்டுள்ளமையால் வர்த்தகர்கள் பாதிப்பு

வாகனங்களுக்கான ரயர் இறக்குமதி நிறுத்தப்பட்டுள்ளமையினால் சில மோட்டார் சைக்கிள் பயன்பாட்டாளர்கள், தமது மோட்டார் சைக்கிளுக்கான ரயர் இல்லாமையினால் தாம் பாரிய சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாக வர்த்தகர்கள் மற்றும் ரயர் இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கையில் ரயர் தேவையில் 70 வீதமானவை உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் அதேவேளை, எஞ்சிய 30 வீதம் மாத்திரமே இறக்குமதி செய்யப்படுகின்றன.

இந்த நாட்டில் 35 இலட்சத்திற்கும் அதிகமானோர் மோட்டார் சைக்கிள்களை பயன்படுத்துகின்ற நிலையில், அவற்றில் பெரும்பாலான மோட்டார் சைக்கிள்களுக்கான ரயர்கள் உள்நாட்டில் தயாரிக்கப்படுவதில்லை என மோட்டார் சைக்கிள் இறக்குமதி செய்யும் நிறுவனமொன்றின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். இந்த விடயம் தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் கவனத்திற்கு கொண்டு வந்து நிவாரணமொன்றை பெற்றுத் தருமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையில் தயாரிக்கப்படாத ரயர்கள், இலங்கையில் தயாரிக்கப்படும் வரை அவற்றை இறக்குமதி செய்வதற்கான அனுமதியை பெற்றுத் தருமாறும் அவர் கோரிக்கை விடுக்கின்றார்.

# பல்கலைக்கழகங்கள் மீள திறந்தபோதும் மாணவர்களின் வரவு வீழ்ச்சி நிலையில்

கொரோனா அனர்த்தத்தின் பின்னர் அனைத்து பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகளும் ஓகஸ்ட் மாதம் 17ஆம் திகதிமுதல் வழமைபோல் ஆரம்பமாகிய நிலையில், மாணவர்களின் வரவு மந்தகதியிலேயே காணப்பட்டன.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக நாடு முழுவதிலுமுள்ள பல்கலைக் கழகங்கள் சுமார் 3 மாத காலங்களுக்கு மேலாக மூடப்பட்டிருந்த நிலையில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு மேற்கொண்ட நடவடிக்கையின் பலனாக அவை கடந்த 17ஆம் திகதி மீண்டும் திறக்கப்பட்டது.

எனினும், பல்கலைக்கழக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு 3 நாட்கள் கடந்துள்ளபோதிலும் கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்திலுள்ள ஒலுவில் தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களின் வரவு வீதம் குறைவடைந்துள்ளது.

மேலும், கடந்த காலங்களில் மாணவர்கள் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் இணையதளங்கள் ஊடாக கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டமை சுட்டிக்காட்டத்தக்கது. அத்துடன், சுகாதார வழிகாட்டி ஆலோசனைகளுக்கு முக்கியத்துவம் வழங்கி செயற்படுமாறு அனைத்து பல்கலைக்கழக உபவேந்தர்களுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டதற்கமைய பல்கலைக்கழகங்களின் கல்வி நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவில் கல்விகற்று பட்டம்பெற்ற 113 பேரின் விண்ணப்பங்கள் நிராகரிப்பு

(வவுனியா)

அரசின் வேலைவாய்ப்புத் திட்டத்தில் இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்று கல்விகற்று பட்டம்பெற்ற 113 பேரது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட பட்டதாரிகள் சங்கத்தின் பிரதிநிதிகள் தெரிவித்தனர். அண்மையில் அரச வேலைவாய்ப்புக்காக தெரிசெய்யப்பட்ட 50 ஆயிரம் பட்டதாரிகளுக்கான பெயர்ப்பட்டியல் அரசால் வெளியிடப்பட்டிருந்ததுடன், நிராகரிக்கப்பட்ட பட்டதாரிகளின் விபரங்களும் அதற்கான காரணங்களும் வெளியிடப்பட்டிருந்தன.

அந்தவகையில், இலங்கை போரின்போது இடம்பெயர்ந்து இந்தியாவுக்குச் சென்று அங்குள்ள பல்கலைக்கழகங்களில் படித்து பட்டம் பெற்று மீண்டும் நாடு திரும்பியவர்களின் விண்ணப்பங்களும் குறித்த பட்டியலில் நிராகரிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக, மன்னார் மாவட்டத்தில் 27, வவுனியா 18, யாழ்ப்பாணம் 66, முல்லைத்தீவில் 2 பேருமாக மொத்தம் 113 பேரது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டு பட்டம் என்ற காரணத்தை முன்வைத்தே அவர்களுக்கான தொழில்வாய்ப்பு நிராகரிக்கப்பட்டுள்ளதுடன், பல்வேறு பாதிப்புகளைச் சந்தித்து அகதிகளாக சென்று கஷ்டத்தின் மத்தியில் படித்து பட்டம் முடித்து தாய்நாடு திரும்பிய நிலையிலும் தமது தொழில்வாய்ப்பு தட்டிக்கழிக்கப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.







அமெரிக்காவிலிருந்து வந்த ஒருதொகை பொருட்களுடன் மறைத்து எடுத்துவரப்பட்ட 22 லட்சம் ரூபா பெறுமதியான 22 கிராம் எடை கொண்ட குஷ் கஞ்சா இலங்கை சுங்கப் பிரிவினரால் நேற்று கைப்பற்றப்பட்டது.

(படப்பிடிப்பு எஷான் தசநாயக்க)

அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.



## அம்பாறை மாவட்ட

# வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்கக் காரியாலய பெயர்ப்பலகை உடைத்து எச்சரிக்கை நோட்டீஸ்

### போராட்டத்தை எவராலும் தடுக்கமுடியாது என்கிறார் சங்கத்தின் தலைவி செல்வராணி








அம்பாறை திருக்கோவில் பிரதேசத்தில் அமைந்துள்ள அம்பாறை மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் சங்கக் காரியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த பெயர்ப்பலகை இனந்தெரியாதோரால் உடைக்கப்பட்டு அதில் எச்சரிக்கை நோட்டீஸ் ஒட்டப்பட்டுள்ள சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றுள்ளதாக வலிந்து காணாமலாக்கப் பட்டோர் சங்கத் தலைவி செல்வராணி தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

தம்பிலுவில் மத்திய சந்தை கட்டிடத்தில் அமைக்கப்பட்டு இயங்கிவருகின்ற வலிந்து காணாமலாக்கப்பட்ட சங்கக் காரியாலயத்தில் பொருத்தப்பட்டிருந்த பதாகையை இனந்தெரியாதவர்கள் சிலர் அடித்து உடைத்து கீழ் வீழ்த்தி அதனை குத்திக் கிழித்து அதில் ஒரு துண்டுப் பிரசுரத்தையும் ஒட்டிவைத்துவிட்டு சென்றுள்ளனர் .

"இதேபோலத்தான்டி உனக்கும் செய்வோம் - கருணா நலன்விரும்பிகள்'' என அத்துண்டுப் பிரசுரத்தில் எழுதப்பட்டுள்ளது. இது ஒரு அடாவடித்தனம். நாம் தொலைத்துவிட்டு தேடுவது எங்களது உறவுகளை. நாங்கள் எவருக்கும் எதுவும் செய்யவுமில்லை. யாருடனும் எதுவித பிரச்சினைக்கும் நாங்கள் செல்லவுமில்லை.

நாங்கள் எங்களது உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற உண்மைநிலை தெரிய வேண்டும் என்பதற்காகத்தான் இந்த வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்கத்தை வைத்து போராடி வருகின்றோம் .

இதனை செய்தவர்கள் யார் என எங்களுக்கு தெரியாது, இதனைச் செய்தவர்கள் யார் என விரைவில் கண்டுபிடிப்போம். இதேவேளை, இது தொடர்பாக ஐ .நா. சபைக்கும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், மனித உரிமை ஆணையகம், திருக்கோவில் பொலிஸ் அதிகாரிகளுக்கும் இது தொடர்பாக அறிவித்திருக்கின்றோம்

இவர்களின் இந்தச் செயற்பாட்டையிட்டு நாங்கள் கவலையடைகின்றோம். இம் மாதம் 30ஆம் திகதி சர்வதேச காணாமலாக்கப் பட்டோர் தினத்தில் போராட்டம் நடக்கவிருக்கும் தறுவாயில் இந்த வேலையை ஏன் இவர்கள் இப்படிச் செய்தார்கள் என்று தெரியவில்லை. இதனை யார் செய்தாலும் எங்களது காணாமலாக்கப்பட்டோர் உறவுகளின் உண்மை நிலை தெரியும் வரை போராட்டம் தொடரும். இப்போது எங்களது உயிருக்கு யார் உத்தரவாதம்? இச்செயல் எங்களுக்கு அச்சத்தையும் பயத்தையும் ஏற்படுத்தியுள்ளது - என்றார்.

# போதைப்பொருள் தடுப்பு—சிகிச்சை மற்றும் கட்டுப்பாடு தொடர்பான பயிற்சிகள் நிறைவு

(மட்டக்களப்பு)

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை மற்றும் பாதுகாப்பு அமைச்சின் ஏற்பாட்டில் "போதைப்பொருள் அற்ற சமூகம் சௌபாக்கிய தேசம்'' எனும் தொனிப்பொருளில் அரச உத்தியோகத்தர்களை பயிற்றுவிக்கும் தேசிய வேலைத்திட்டம் நாடுபூராகவும் இடம்பெற்று வருகின்றது.



இதனடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் கடமைபுரியும் சமுதாய சீர்திருத்த அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் அதனோடு தொடர்புடைய உத்தியோகத்தர்களையும் இணைத்து போதைப்பொருள் தடுப்பு, சிகிச்சை மற்றும் கட்டுப்பாடு நடவடிக்கைகள் தொடர்பான மூன்று நாள் பயிற்சிகள் வழங்கப்பட்டுவந்தன. இப்பயிற்சிநெறியை பூர்த்திசெய்த உத்தியோகத்தர்களுக்கான சான்றிதழ்கள் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா தலைமையில் பயிற்சியின் இறுதித் தினமாகிய நேற்று முன்தினம் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் வைத்து வழங்கப் பட்டன.

இதன்போது அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜா கருத்துத் தெரிவிக்கையில் "போதைப்பொருள் பாவனையிலிருந்து சமூகத்தை மீட்டெடுப்பது ஒவ்வொருவரினதும் கடமையாகும். போதைப்பொருள் பாவனையிலிருந்து சமூகத்தைப் பாதுகாப்பது எவ்வாறு என திட்டமிடவேண்டும். போதைப்பொருள் பாவனை மற்றும் பரிமாற்றங்கள் தொடர்பாக வெளிவராமலிருக்கும் தகவல்களை கண்டுபிடிக்க வேண்டும். அதனைக் கட்டுப்படுத்த குழுக்களாக இணைந்து செயற்பட வேண்டும்'' - எனக் கேட்டுக்கொண்டார்.

மேலும், இப்பயிற்சிநெறியில் மேற்படி உத்தியோகத்தர்களுக்கு போதைப்பொருள் பாவனையைத் தடுத்தல், சிகிச்சையளித்தல் மற்றும் கட்டுப்பாடு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் தொடர்பான திறன்சார்ந்த பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வின்போது மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி ஸ்ரீகாந்த், உதவி மாவட்ட செயலாளர் ஏ.நவீஸ்வரன், தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் புனர்வாழ்வு சிகிச்சை நிலைய உதவிக் கல்வி உத்தியோகத்தர் பீ.எம்.றஸீட், உதவி வெளிக்கள உத்தியோகத்தர் ஏ.எட்வின் றொஜர், உதவி உளவள ஆலோசகர் ஜீ.விஜயதர்சன் மற்றும் பயிற்சியைப் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர்கள் ஆகியோர் பிரசன்னமாகியிருந்தனர்.




# கல்முனை பிரதேசத்தில் மனித பாவனைக்கு ஒவ்வாத உணவுப்பொருட்கள் விற்பனை

### - நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

(பாண்டிருப்பு)

கல்முனை பிரதேசத்திலுள்ள பலசரக்குக் கடைகளில் மனித நுகர்வுக்குப் பொருத்தமில்லாத உணவுப்பொருட்கள் விற்பனைசெய்யப்பட்டு வருவதாக நுகர்வோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் பிரதேச சுகாதாரப் பரிசோதகர்களின் கவனத்திற்கும் கொண்டு சென்றுள்ளனர். தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள மின்விநியோகத் தடை காரணமாக பொதுமக்கள் அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்து சேமித்துவைப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்

இந்நிலையில், இங்குள்ள பலசரக்கு விற்பனைக் கடைகளில் காலாவதியான பொருட்களை நல்ல பொருட்களுடன் கலந்து விற்பனைசெய்யும் நடவடிக்கையில் சில வியாபாரிகள் ஈடுபட்டுள்ளனர். இதனால் தூர இடங்களிலிருந்து வந்து பொருட்களை கொள்வனவு செய்யும் பொதுமக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இங்குள்ள சில கடைகளில் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தப்படாமை, விலை கட்டுப்பாட்டைவிட அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்தல், முத்திரை பொறிக்கப்படாத தராசுகளினால் பொருட்களை நிறுத்தல் போன்ற மோசடியான வேலைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதேபோன்று, சிற்றுண்டிச் சாலைகளிலும் பழுதடைந்த உணவுப்பொருட்களும் பழுதடைந்த பழங்களும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இவ்வாறு மக்களை ஏமாற்றி தரமற்ற பொருட்களை விற்பனை செய்பவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப் படவேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இதேவேளை, அம்பாறை மாவட்ட நுகர்வோர் அதிகாரசபையினால் வியாபார நிலையங்கள் கண்காணிக்கப்பட்டு சட்டவிரோத வியாபாரிகளுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# நாவற்குடா வீடெரிப்பு சம்பவத்தின் தொடர்ச்சியாக மற்றுமொரு தாக்குதல்

### ஐவர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நாவற்குடாவில் வீடொன்று எரிக்கப்பட்டும் மற்றொரு வீடு அடித்து சேதமாக்கப்பட்ட சம்பவம் தொடர்பிலும் இரண்டு பேரை கடந்த செவ்வாய்க்கிழமை கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது;

நாவற்குடா இசை நடனக் கல்லூரி வீதியில் இரு குழுக்களுக்கிடையே நீண்டகாலமாக இடம்பெற்றுவந்த மோதலின் எதிரொலியாக கடந்த திங்கட்கிழமை இரவு சுதாகர் என்ற நபர் இன்னொரு குழுவைச் சேர்ந்த ஒருவரது வீட்டிற்குச்சென்று தகராறில் ஈடுபட்டுள்ளார்.

இதனையடுத்து அங்கு கைகலப்பு ஏற்பட்டதையடுத்து வீட்டுக்குச் சென்று தகராற்றில் ஈடுபட்ட சுதாகர் மீது அங்கிருந்தவர்கள் தாக்கியதில் அவரது கழுத்தில் போத்தலால் குத்தப்பட்டு அவர் படுகாயமடைந்த நிலையில், மட்டு. போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இதனையடுத்து போத்தல் குத்துக்கு இலக்காகிய சுதாகரின் குழுவைச் சேர்ந்தவர்கள் கடந்த செவ்வாய்கிழமை இரவு சுமார் 11.30 மணியளவில் போத்தலால் குத்திய குழவினரின் அருகருகே உள்ள அவரது உறவினர்களின் இரு வீடுகளுக்குச் சென்று வீட்டிற்கு தீவைத்ததுடன், ஒரு வீட்டை அடித்துச் சேதமாக்கிவிட்டு அங்கிருந்து தப்பி ஓடியுள்ளனர். இதனால் இரு வீடுகள் தீயில் எரிந்து முற்றாக சேதமடைந்துள்ளதுடன், வீட்டில் இருந்தவர்கள் எவ்விதமான காயங்களுமின்றி உயிர்பிழைத்தனர். இதனையடுத்து தீயணைப்புப் படையினர் மற்றும் பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து தீயை அணைத்து கட்டுப்பாட்டுக்கு கொண்டுவந்தனர்.



இருப்பினும், நேற்று முன்தினம் புதனன்று குறித்த சேதமாக்கப்பட்டும் எரிக்கப்பட்டதுமான வீட்டுரிமையாளர்கள் அவர்களது வீட்டின் முன் பகுதியில் இருந்தபோது வீடுகளுக்கு தீவைத்த குழுவினர் மீண்டும் அங்கு வந்து அவர்கள் மீது தாக்குதலை மேற்கொண்டதில் பெண் ஒருவர் உட்பட 5 பேர் படுகாயமடைந்த நிலையில் மட்டு. போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தனையடுத்து போத்தல் குத்து சம்பவம் தொடர்பாக ஒருவரையும் புதனன்று நிகழ்ந்த சம்பவம் தொடர்பில் இன்னொருவரையும் என மொத்தம் இருவரை கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். சம்பவத்துடன் தொடர்புபட்ட பிரதான நபர்கள் தலைமறைவாகியுள்ளதாகவும் அவர்களை கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணை களை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

# கேணிநகர் மதீனா வித்தியாலயத்திற்கு கைகழுவும் உபகரணத் தொகுதி அன்பளிப்பு



(ஓட்டமாவடி )

ஓட்டமாவடி கல்விக் கோட்டத்திற்குட்பட்ட கஷ்டப் பிரதேச பாடசாலையான கேணிநகர் மதீனா வித்தியாலயத்தின் தேவை கருதி எஸ்கோ அமைப்பினரால் கைகழுவும் தொகுதியொன்று அண்மையில் அன்பளிப்பு செய்யப்பட்டது.

பாடசாலை அதிபர் மீராமொஹிதீன் விடுத்த வேண்டுகோளுக்கிணங்கவே மேற்படி தன்னார்வ தொண்டு நிறுவனமான எஸ்கோ அமைப்பின் பிரதிநிதிகள் பாடசாலைக்கு விஜயம்செய்து அதிபரிடம் மேற்படி கைகழுவும் தொகுதியை கையளித்தனர்..

பாடசாலையில் கொவிட்-19 அச்சுறுத்தல் நி லைமையை கருத்திற்கொண்டு இவ்வாறு இலவசமாக கைகழுவும் தொகுதியை வழங்கியமை குறித்து பாடசாலையின் அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் எஸ்கோ அமைப்பினருக்கு தமது பாராட்டுகளை தெரிவித்துள்ளனர்.

# 12 வயது சிறுமிக்கு பாலியல் தொந்தரவு; வயோதிபர்கள் இருவர் கைதாகினர்

(திருகோணமலை)

திருகோணமலை-மொரவெவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் 12 வயது சிறுமிக்கு பாலியல் தொந்தரவு கொடுத்த இரண்டு வயோதிபர்களை கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.

குறித்த 12 வயது சிறுமி கடைக்குச் சென்றபோது பாலியல் தொந்தரவு கொடுத்ததாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து விசாரணைகளை மேற்கொண்ட மொரவெவ பொலிஸார் 69 வயதுடைய கடை உரிமையாளரையும் 50 வயதுடைய மற்றுமொரு நபரையும் கைதுசெய்துள்ளதாக தெரியவருகின்றது.

குறித்த இருவரும் மஹதிவுல்வெவ - தெவனிபியவர பகுதியைச் சேர்ந்த கே. எம்.ஜினதாஷ (வயது 69) மற்றும் ஏ.எச்.ஏ. நிமால் ஜயவர்தன (வயது 50) எனவும் தெரியவருகின்றது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களை திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பாதிக்கப்பட்ட சிறுமி தற்பொழுது திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் மொரவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

# மின்வெட்டு நேரங்களில் திருடர்களின் அட்டகாசம்

(பாண்டிருப்பு)

தற்போது நாட்டில் நடைமுறையிலுள்ள மின்வெட்டு நேரங்களில் திருட்டுச்சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக பொதுமக்கள விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த மூன்று தினங்களாக மின்வெட்டு அமுலில் இருந்த நேரத்தில் திருடர்கள் தங்கள் கைவரிசையைக் காட்டிவருகின்றனர். குறிப்பாக, கல்முனை பிரதேசத்தில் மின்வெட்டு அமுலிலுள்ள நேரத்தில் திருட்டுச்சம்பவங்கள் அதிகரித்துள்ளதால் பொதுமக்கள் அச்சத்திலுள்ளனர். இங்குள்ள கிராமங்களில் வீடுகளுக்குள் நுழையும் திருடர்கள் தங்கள் கைவரிசையைக் காட்டிவருகின்றனர்.

வீடுகளிலும் வீதிகளிலும் நிறுத்தப்பட்டுள்ள வாகனங்களின் உதிரிப்பாகங்களான பெற்றரி, டயர் உட்பட முக்கிய பாகங்களை இவர்கள் திருடிச் செல்கின்றனர். அத்துடன், வீட்டு உபகரணங்களையும் கொள்ளையிட்டுச் செல்கின்றனர்.

மின்வெட்டு வேளைகளில் வியாபார நிலையங்களிலும் சிலர் பொருட்களை திருடிச் செல்கின்றனர். கடைகளிலுள்ள சீ.சீ.ரி.வி. கமெராக்களும் மின்சாரமின்றி தொழிற்படாமையால், திருடர்களை இனம் காண்பதில் வர்த்தகர்களும் சிரமங்களுக்குள்ளாகி வருகின்றனர்.

கல்முனை பிராந்தியத்தில் கல்முனை, பாண்டிருப்பு, பெரியநீலாவணை, சேனைக்குடியிருப்பு, நற்பிட்டிமுனை ஆகிய இடங்களில் நடைபெறும் இவ்வாறான திருட்டுச்சம்பவங்களை கட்டுப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுக்கவேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# சம்பளம் தர மறுத்தமையால் எரிவாயு சிலிண்டரை திருடிய சமையற்காரர்

### திருகோணமலை ஹோட்டலொன்றில் சம்பவம்

(கந்தளாய்)

திருகோணமலை மாவட்டத்தின் துறைமுக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஹோட்டலொன்றில் மூன்று சிலிண்டர்களை திருடிய சந்தேக நபர் ஒருவரை இம்மாதம் 31ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற நீதிவான் சமிலா குமாரி ரத்நாயக்க நேற்று உத்தரவிட்டார்.

வைத்தியசாலை வீதி, புதிய காத்தான்குடி பகுதியைச் சேர்ந்த 53 வயதுடைய ஒருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் திருகோணமலை நகரிலுள்ள ஹோட்டலொன்றில் சமையல்காரராக வேலை பார்த்துவந்த நிலையில் ஹோட்டல் உரிமையாளர் சம்பளம் வழங்க மறுத்ததால் மூன்று சிலிண்டர்களை திருடி நான்காயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்துள்ளதாகவும் துறைமுக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபரை பொலிஸார் திருகோணமலை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோதே விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# நீர்ப்பம்பி அன்பளிப்பு

(ஓட்டமாவடி )

ஓட்டமாவடி கோட்டத்திற்குட்பட்ட மீராவோடை அல்-ஹிதாயா மகாவித்தியாலயத்தின் நன்மை கருதி ஓட்டமாவடி பிரதேச சபையினால் நீர்ப்பம்பி ஒன்று அண்மையில் அன்பளிப்பு செய்யப்பட்டது.

வித்தியாலயத்தின் பெண்கள் பிரிவுக்கு குடிநீரைப் பெற்றுக்கொடுப்பதில் நீண்டகாலமாக இருந்துவந்த பிரச்சினைகளுக்குரிய தீர்வை எதிர்பார்த்து பாடசாலையின் அதிபரினால் ஓட்டமாவடி பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட கோரிக்கைக்கமைவாக ஓட்டமாவடி பிரதேச தவிசாளர் ஏ.எம்.நௌபர் நேரடியாக பாடசாலைக்கு விஜயம் மேற்கொண்டு குறித்த நீர்ப்பம்பியை பாடசாலை நிர்வாகத்தைச் சேர்ந்த சிரேஷ்ட ஆசிரியர்களான அமானுல்லாஹ் மற்றும் எம்.பீ.எம்.சனூஸ் ஆகியோரிடம் கையளித்தார்.





காரைக்கவி
கந்தையா பத்மானந்தன்

# சீத்துவக்கேடு 53

ஓவசியரின்ரை வேலியை அப்பு கள்ளு வெறியில கொளுத்திப் போட்டு வந்த அண்டு அப்புவுக்கும் ஆச்சியுக்கும் பெரிய சண்டை வந்தது. "கட்டின நாளையில இருந்து உன்னால எப்பவும் எனக்குக் கரைச்சல். என்னை ஒரு நாளும் நிம்மதியா இருக்க விட்டதில்லை.

எப்ப பாத்தாலும் கள்ளைக் குடிச்சுப் போட்டு வந்து ஒண்டில் என்னோடையும் பெடி பெட்டையோடையும் சண்டை பிடி. இல்லாட்டில் அயலட்டையில உள்ளவையோடை சண்டை பிடி. எல்லாம் என்ரை தலைவிதி. நீ சுருட்டுக் கொட்டிலில சுருட்டிக் கொண்டு வாற காசை இப்பிடியே குடிச்சு குடிச்சு நாசமாக்கிறியே. என்ரை வயிறு எரிய எரிய நீ நல்லா இருக்க மாட்டாய். நாசமாத்தான் போவாய்" எண்டு சத்தம் போடுவா.

உடன அப்பு, "எடியே கள்ளு ஒண்டும் கெட்ட சாமான் கிடையாது. நீ எப்ப பார்த்தாலும் எங்கட பழைய இலக்கியங்களில அது கிடக்கு, இது கிடக்கு. எங்கட பழைய ஆக்கள் அப்பிடி இருந்திச்சினம், இப்பிடி இருந்திச்சினம். எண்டு பெருமையா சொல்லுவியே. அந்த பழைய ஆக்கள் கள்ளும் காவியமுமாத் தான்ரி இருந்திருக்கினம்.பழைய எல்லா இலக்கியங்களிலையும் உந்தக் கள்ளைப் பற்றி இருக்கு கண்டியோ" எண்டுவார்.

"ஆ... உன்னைப்போல கொஞ்சப் பேர் உங்க இருக்கினம்தான். தாங்கள் செய்யிற கெட்ட வேலையளுக்கும் உப்பிடி இலக்கிய ஆதாரம் கொண்டு வந்து போடுவினம்" எண்டுவா ஆச்சி.

"அடியே வாழ்க்கையில நல்லது கெட்டது எண்டு ரெண்டும் இருக்கவேணும் அப்பதான்ரி வாழ்க்கையில ஒரு திரில் இருக்கும். சும்மா நல்லது நல்லது எண்டு பூச்சாண்டி காட்டிக்கொண்டிருந்தா இஞ்சை ஊரில இருக்காம இமயமலைப் பக்கம்தான் போய் குடியிருக்க வேணும்" எண்டுவார் அப்பு.

"எங்கட பழைய சங்க காலத் தமிழர் கள்ளை ஒண்டும் குறையாச் சொல்லேல்லை கண்டியோ. அதை ஒரு சாப்பாடா, அதை ஒரு மருந்தா, அதை ஒருநாள் முழுக்க வேலை செய்து களைச்சுப் போய் வாறவைக்கு அவையின்ரை களைப்பை மறக்கச் செய்து ஆடி பாடி உற்சாகமா உசாரா இருக்கச் செய்யிற ஒரு உற்சாக பானமாத்தான் பார்த்தவை. உன்னை மாதிரி உங்க இருக்கிற சில மொக்குப் பெண்டுகள் காசுக்குப் பிரசங்கம் செய்யிறவைதான் கள்ளைக் கூடாதெண்டு சொல்லுகினம் விளங்கிச்சா உனக்கு" எண்டுவார்.

"உனக்குத் தெரியுமே பெரும்பாணாற்றுப் படை (141), நற்றிணை (59), புறநானூறு (120, 289,381, 328, 396, 397), அகநானூறு (35,216,265,348) எல்லாம் எங்கட பழைய ஆக்கள் எப்பிடி கள்ளு குடிச்சு களிப்பா இருந்தவை எண்டு சொல்லுது. அதுமட்டுமே உன்னை மாதிரி பெண்டுகள் எல்லாம் ஆம்பிளையளோட சேர்ந்து கள்ளுக் குடிச்சவை எண்டு அகநானூறு (221) சொல்லுது. எங்கட அவ்வையார் தகடூர் அரசன் அதியமானோட சேர்ந்து இருந்து கள்ளுக் குடிச்சவ எண்டு புறநானூறில சொல்லிக் கிடக்கு (235, 376) தெரியுமே . அதிலும் மன்னன் அதியமான் ஔவையாரின் புலால் நாத்தம் அடிக்கிற அவவின்ரை தலை மயிரை நரந்தம்புல்லின்ரை மணம் வீசுற தன்ரை கையால தடவிக் கொடுத்தான் எண்டெல்லாம் ஒரு செய்தி கிடக்கு கண்டியோ" எண்டுவார் அப்பு.

"அதுகும் கொஞ்ச கள்ளு இருந்தால் அதை முழுக்க அவ்வையாருக்கு குடுப்பானாம். கனக்க இருந்தா ரெண்டு பேரும் பங்கிட்டுக் குடிப்பினமாம். எண்டெல்லாம் உந்த பழைய பாட்டில சொல்லிக் கிடக்கு தெரியுமோ" எண்டுவார்.

உனக்குத் தெரியுமே இப்ப இஞ்சை ஊரில கள்ளு விக்கத் தவறணை இருக்கிற மாதிரி முந்தி அந்தக் காலத்தில கள்ளு விக்கிறதுக்கெண்டே தனிக் கடைத்தெருவே இருந்ததெண்டு பதிற்றுப்பத்து (60) எண்ட பழைய புத்தகத்தில கிடக்கு. அதுமட்டுமே இப்ப நாங்கள் பிளாவிலை குடிக்கிறமாதிரி அப்ப உள்ள ஆக்கள் மண்டை எண்ட ஒருபாத்திரத்தில ஊத்திக் குடிச்சவை எண்டு புறநானூறு (177) சொல்லுது.

அது மட்டுமில்ல, இப்ப நாங்க குடிக் கேக்கை மீன் பொரியல் இல்லாட்டில் இறைச்சிப் பொரியல் தின்னிறது மாதிரி அவங்களும் கள்ளோட இறைச்சி சாப் பிட்டவங்கள் எண்டு உதே பாட்டில கிடக் குது கண்டியோ. உப்ப உங்க சில ஆக்கள் வீடுவழியை கசிப்பு காச்சிற மாதிரி முந்தி எங்கட சங்க கால ஆக்கள் கள்ளு வீடுவழியை வைச்சு செய்தவங்கள் எண்டு புறநானூறு (329) சொல்லுது உதுகள் ஒண்டும் தெரியாது. கனக்க கதைக்க வந்திட்டாய் எண்டுவார்.

உப்ப எங்கட ஊரில இருக்கிற சில புதுப் பணக்காரர் வெளிநாட்டு சாராயம்தான் நல்லம் எண்டு குடிக்கிற மாதிரி எங்கட பழைய சங்க கால மன்னர்களுக்கு யவன நாடு எண்ட கிரேக்க தேசத்தில இருந்து வாற கள்ளுத்தான் நல்ல விருப்பம் எண்டு புறநானூறு (298) சொல்லுது. அதுமட்டுமே முந்தி இருந்த உந்த பாணர்கள் எண்ட பாட்டுக்காரர் அபின் செய்ய பாவிக்கிற செடியை எல்லாம் நான் சுருட்டுப் பத்திற மாதிரி பாவிச்சவங்கள் எண்டு சிறுபாணாற்றுப்படை (28) சொல் லுது கண்டியோ. நான் உந்த சங்கத் தமிழர் மாதிரி கள்ளுக் குடிக்கிறன் எண்டு பெருமைப் படாம நீ விளக்கம் இல்லாம சும்மா சும்மா கத்துறாயடி கிழடி என்னை பற்றி பெருமைப்பட வேணும் கண்டியோ எண்டுவார்.

உனக்குத் தெரியுமோ சங்க காலத்தில அரியல், தேறல், நறவு, மட்டு, மது, பிழி, வெப்பர் எண்டு கள்ளுக்குப் பெயர். அதேமாதிரி தொடரிக்கள், தினைக்கள், பனைக்கள், தோப்பிக்கள் எண்டு விதம் விதமான கள்ளுகள் அவங்கள் குடிச்சிருக்கிறாங்கள். தோப்பிக்கள் எண்டது நெல்லாற் செய்யுங்கள் எண்டும் தொடரிக்கள் எண்டது பாலுடன், தொடரி என்ற பழத்தையும் களாப் பழத்தையும் ஒண்டாக கலந்து பதப்படுத்தி செய்த கள் எண்டும் பழைய பாட்டுகளிலை சொல்லுறாங்கள். அதமாதிரி குறிஞ்சி நிலத்தில உந்தத் தினைக்கள் கிடைக்கும் எண்டும் சொல்லுறாங்கள் கண்டியோ எண்டுவார் அப்பு.

உனக்கு ஒரு விசயம் தெரியுமே. உங்க வெளிநாட்டில பெரிய பெரிய கொம்பனியள் மரப் பீப்பாவில வருசக் கணக்கா அடைச்சு வைச்சு குடிவகை செய்யிற மாதிரி எங்கட ஆக்கள் உந்த தோப்பிக் கள்ளை மூங்கில் குழாயில் அடைச்சு நாள் கணக்கா விட்டுத்தான் பாவிச்சிருக்கிறாங்கள் எண்ட விசயமும் உந்த பழைய பாட்டுகளில கிடக்கு. அதிலும் உந்த சண்டையளில செத்த ஆக்களுக்கு நடுகல் வைச்சு அதுக்கு கள்ளு வைச்சு கும்பிட்டு பிறகு அந்தக் கள்ளைக் குடிச்சு ஆடி இருக்கிறாங்கள் அதை உண்டாட்டு எண்டு இலக்கியங்களில சொல்லுப்பட்டிருக்கு. உதாலதான் இண்டைக்கும் சில கிராமங்களில கிராமியத் தெய்வங்களுக்கு சாராயம் படைச்சு கும்பிடுறாங்கள் போல எண்டுவார். **(தொடரும்)**

## காலநிலை மாற்றத்திற்கான...

**04ஆம் பக்கத் தொடர்ச்சி....**

காலநிலை நெருக்கடியின் விளைவுகள் உலகெங்கிலும் உணரப்படுகின்றன. அண்மையில் கிழக்கு ஆபிரிக்கா முழுவதும் பரவலாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. அவுஸ்திரேலியா, அமேசான் மற்றும் சைபீரியாவில் ஏற்பட்ட காட்டுத்தீயால் அதிகப்படியான வனப்பகுதிகள், பல்லுயிர்கள் உயிரிழந்து சூழல் சமநிலையில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன.

பருவநிலை மாற்ற பாதிப்பால் புதுப்புது நோய்களும், தொற்று பாதிப்புகளும் ஏற்படுவதாக விஞ்ஞானிகள் எச்சரிக்கின்றனர். உயரும் வெப்பநிலையால் கடலிலுள்ள பனிப்பாறைகள் கரைவது முன்னெப்போதும் இல்லாதளவிற்கு அதிகரித்துள்ளது. மேலும் புவி தோன்றிய காலத்திலிருந்து அண்டார்டிகாவின் கடலுக்கு அடியிலுள்ள வைரஸ் போன்ற நுண்ணுயிர்களும் வெளிவருவதாக எச்சரிக்கப்படுகிறது.

இந்நிலையில், கொரோனா பாதிப்பால் உலகின் வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளும் பாதிக்கப்படுகின்றன. கணிக்கமுடியாத பரவல் மற்றும் அதிகரித்த தொற்று பாதிப்புகளின் எண்ணிக்கை காரணமாக பொதுமுடக்கத்தை அமுல்படுத்தவேண்டிய கட்டாயம் உலக நாடுகளுக்கு ஏற்பட்டது. இதன் காரணமாக பாடசாலைகள் கல்லூரிகள் தொடங்கி தொழிற்சாலைகளும் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

கரியமிலவாயுக்களின் வெளியேற்றம் குறைந்ததால் உலக வெப்பநிலையில் மாற்றம் ஏற்படும் என பலரும் கருதிவந்தனர். பலரும் இந்தப் பொதுமுடக்கம் சூழலியலுக்கு சாதகமானது எனக் கருத்துத் தெரிவித்திருந்த நிலையில், சமீபத்திய ஆய்வு முடிவு கவலையைத் தருகிறது. சமீபத்திய லீட்ஸ் பல்கலைக்கழகத்தின் ஆய்வில் வெளியான தகவலின்படி பொதுமுடக்கத்தால் தடுக்கப்பட்ட கரியமிலவாயுகளின் வெளியேற்றம் காலநிலை மாற்றத்தால் ஏற்படவிருக்கும் அபாயத்தில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தாது எனத் தெரியவந்துள்ளது.

ஏப்ரல் 2020இல் உலகளாவிய கார்பன்டை ஒட்ஸைட் உமிழ்வு 25 வீதத்திற்கும், நைட்ரஜன் ஒட்ஸைட்கள் உமிழ்வு 30 வீதத்திற்கும் குறைந்துவிட்டதாகத் தரவுகள் தெரிவிக்கின்றன. எனினும், இவை எந்தளவு பருவநிலை மாற்றத் தவிர்ப்பு நடவடிக்கையில் தாக்கத்தை ஏற்படுத்தும் எனும் கேள்வியும் எழுந்துள்ளது.

மேலும், தற்போது பொதுமுடக்க நடவடிக்கைகள், கணிக்கப்பட்ட 2030ஆம் ஆண்டின் உலக வெப்பநிலையில் 0.01 சதவிகிதம் மட்டுமே குறைக்க உதவும் என்னும் அதிர்ச்சித் தகவல் வெளிவந்துள்ளது. எனினும், தற்போதைய மாற்றத்தை தொடர்ச்சியாக கடைப்பிடிக்க முடியாது என்பதால் அரசுகள் ஆற்றல் மூல வளங்களில் மாற்றத்தை நோக்கி நகர்வதும், அவற்றுக்குக் கூடுதல் நிதியாதாரங்களை வழங்குவதுமே சரியான தீர்வாக இருக்கும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

பருவநிலை மாற்றத்தைத் தடுக்கப் புதைபடிம எரிபொருட்களின் பயன்பாட்டைக் குறைப்பதும், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்களைப் பயன்படுத்துவமே தற்போதைய சிக்கலிலிருந்து மீள உதவும் எனவும் இந்த ஆய்வு தெரிவித்துள்ளது.

சந்தேகம் இல்லாமல் நாம் வளர்ச்சியின் உச்சியில் நின்றுகொண்டிருக்கிறோம். அந்த வளர்ச்சியால் பயன் பெற்றவர்கள் ஏற்படுத்திய பெரும் பள்ளம், பயன்பெறாதவர்களை விழுங்கக் காத்திருக்கிறது. நாம் விரும்பாவிட்டாலும் நம் எதிர்காலத் தலைமுறை பருவநிலை பேரிடரை எதிர்நோக்கித்தான் தங்களது பயணத்தைத் தொடர்கின்றனர்.

புதிய மாற்றங்கள் சமூகத்தில் எப்போதும் நிகழ்பவை. நாம் விரும்பும் சூழலுக்கு சாதகமான மாற்றங்களை அடைய தன்னிச்சையான நடவடிக்கைகளைத் தாண்டி ஒன்றுபட்ட நடவடிக்கைகளும், ஒத்திசைவான பார்வையும் அவசியம். அரசின் சரியான திட்டமிடலுடன் கூடிய செயற்பாடே வரவிருக்கும் அபாயத்திலிருந்து மக்களையும், இனிவரும் தலைமுறையையும் காக்க உதவும். பழைய பழக்கப்பட்ட வாசகமானாலும் "இந்த பூமி அடுத்த தலைமுறைக்கு பத்திரமாகத் திருப்பிக் கொடுக்கவேண்டிய சொத்து" என்பது பொருள் பொதிந்தது.



# 7 'தல'யிடம் கற்கவேண்டிய தலைமைப் பண்புகள்

தோல்வியை ஏற்றுக்கொள்ள முடியாமல் தவிப்பவர்கள், எப்போதும் கெப்டனாக இருக்கமுடியாது. ஏனெனில், வெற்றியைவிட தோல்வி யிலிருந்து கற்றுக்கொள்ள நிறைய விடயங்கள் இருக்கின்றன.

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்து, கிரிக்கெட் ரசிகர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கிறார் மகேந்திர சிங் டோனி. ஆனால், நல்ல தலைமைப் பண்புகொண்ட எந்தத் தலைவனுக்கும் ஓய்வு என்பதே கிடையாது. டோனிக்கும் அப்படித்தான். சர்வதேச கிரிக்கெட் விளையாட்டுப் போட்டிகளில் அவர் இனி விளையாடமாட்டார் என்றாலும், இன்னும் சில தலைமுறைகளுக்கு அவரின் தாக்கம் நிச்சயம் இருக்கும். அப்படி அவரிடமிருந்து நாம் அனைவரும் கற்றுக்கொள்ள வேண்டிய ஏழு தலைமைத்துவப் பண்புகள் இங்கே...

### 1. தெளிவான திட்டமிடல்!

"டோனியின் முடிவுகள் குறித்து எப்போதும் கேள்வி எழுந்ததில்லை. ஏனெனில், அவர் ஒவ்வொரு முறையும் தெளிவான திட்டத்துடன்தான் களத்தில் இறங்குவார்" என்று சொல்கிறார் சி.எஸ். கே–வின் தலைமைப் பயிற்சியாளர் ஸ்டீபன் ஃபிளமிங்.

தலைமைப் பண்புகளில் மிகவும் முக்கியமானது தெளிவான திட்டமிடல். கெப்டனாக சரியாகத் திட்டமிடுவதில் டோனி கில்லிதான். திட்டமிட்டு விளையாடினால்தான் வெற்றி காணமுடியும் என்பதை டோனி பலமுறை நிரூபித்தும் காட்டியிருக்கிறார். திட்டமிடலில் தெளிவு என்பது கிரிக்கெட் விளையாட்டில் மட்டுமல்ல, ஒரு நிறுவனத்தின் கெப்டனாக இருக்கும் அனைவருக்குமே முக்கியம். திட்டமிட்டுச் செய்யும்போது 1,000 கோடி ரூபா மதிப்புள்ள புராஜெக்ட்டைகூட எந்தத் தவறும் இல்லாமல் சரியாகச் செய்துமுடிக்க முடியும். தோல்வியைச் சந்திக்கும்போதுகூட, ஒரு கெப்டனாக அவர் செய்யும் அனைத்து விடயங்களும் காரண காரியங்களுடன் அமைவதை நம்மால் பார்க்க முடிகிறது. ஏனெனில், அவருடைய தலைமைத்துவம் அப்படி.

ஒரு நல்ல அணியில் இருக்கிறோம் என்பதைவிட, அந்த அணியின் வெற்றிக்கு எப்படி உதவுகிறோம் என்பதில்தான் நம் திறமை அடங்கியிருக்கிறது. ஒரு டீம் ப்ளேயரை, ஒரு டீம் லீடராக உயர்த்தும் இடம் இதுதான். இப்படிப்பட்ட விடாமுயற்சியும், தெளிவான திட்டமிடலும்தான் உங்களை எங்கெங்கும் உயர்த்தும்.

### 2. குழு உறுப்பினர்களுக்கு வாய்ப்பு வழங்குவது!

டோனியைப் பொறுத்தவரை, தலைமை தாங்கும் அணி உறுப்பினர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவர்களை முன்னிறுத்துவதை வாடிக்கையாக வைத்திருப்பார். இதற்குக் காரணம், தனது குழு உறுப்பினர்கள் மீது அவர் வைத்திருக்கும் நம்பிக்கை. ஒரு நிறுவனத்தின் கெப்டன் அல்லது குழுவின் தலைவர் என யாராக இருந்தாலும், தனக்குக் கீழ் பணியாற்றும் உறுப்பினர்களுக்கு வாய்ப்பை வழங்குவதில் தயக்கம் காட்டவே கூடாது. 'பட்டை தீட்டத் தீட்டத்தான் வைரம் மிளிரும்' என்பதுபோல, வாய்ப்புகளை வழங்க வழங்கத்தான் செய்யும் பணிகளில் பணியாளர்களுக்கு அனுபவம் கூடும்.

'விடா முயற்சி... விஸ்வரூப வெற்றி' என்பார்கள். இது தோனிக்கு கச்சிதமாகப் பொருந்தும். ஆட்டத்தின் போக்கைப் பார்த்து, இனி இந்த மெட்ச்சில் இந்திய அணியால் ஜெயிக்க முடியாது என்ற மனநிலைக்கு எல்லோரும் வந்துவிடுவார்கள். ஆனால், தனது விடாமுயற்சியால் ஆட்டத்தின் போக்கையே பலமுறை மாற்றிக் காட்டியிருக்கிறார் டோனி. முடியாது எனத் தெரிந்தும் முயற்சி செய்யாமல் இருப்பதைவிட, கடைசி வரை அந்த முயற்சியைக் கைவிடாமல் இருப்பது டோனி ஸ்டைல். தலைமைப் பொறுப்பில் இருக்கும் யாராக இருந்தாலும், ஒரு செயலில் இறங்கிவிட்டால் அதில் கடைசி வரை விடாமுயற்சியுடன் போராடி வெற்றி காண்பதில் குறியாக இருக்கவேண்டும். முடியாது என நினைத்து, இடையில் கைவிடுவது குழு உறுப்பினர்களின் நம்பிக்கையைச் சிதைத்துவிடும்.

### 4. வெற்றி தோல்வியை சரிசமமாகப் பார்ப்பது!

தோல்வியை ஏற்றுக்கொள்ள முடியாமல் தவிப்பவர்கள், எப்போதும் கெப்டனாக இருக்கமுடியாது. ஏனெனில், வெற்றியைவிட தோல்வியிலிருந்து கற்றுக்கொள்ள நிறைய விடயங்கள் இருக்கின்றன. இதை ஒவ்வொரு மெட்சிலும் புரிந்து செயற்படுகிறார் தோனி. அன்றைய ஆட்டத்தில் வெற்றிபெற்றாலும் சரி, தோல்வியைச் சந்தித்தாலும் சரி ஆடிய ஆட்டத்தை மனநிறைவுடன்தான் முடிப்பார். அதேபோல, தோல்விக்குரிய காரணத்தைக் கண்டுபிடித்து, அதை அடுத்தடுத்த ஆட்டங்களில் சரிசெய்வதிலும் டோனி கெட்டிக்காரர். இந்தப் பண்பு, கெப்டனாக இருக்கும் அனைவருக்கும் அவசியம் இருக்கவேண்டும்.

### 5. நிதானத்தைக் கடைப்பிடித்தல்!

'நிதானமே பிரதானம்' என்பார்கள். டோனியின் ஆட்டம் எப்போதும் அதிரடியாகவே இருக்கும். அதேசமயம், நிதானத்தைக் கடைப்பிடிப்பதிலும் அவர் கவனமாக இருப்பார். நின்று நிதானமாக விளையாடும்போது, ஆடுகளத்தின் அனைத்து திசைகளிலும் தெளிவு கிடைக்கும். அப்போதுதான் எதிர்நோக்கி வீசப்படும் பந்துகளையும் எளிதாகக் கையாள முடியும். அதேபோல, பணியிடத்தில் 'பொஸ்' என்பவர் நிதானமாகச் செயல்படுவது முக்கியம். அவசரப்படுவதால் ஆகிவிடப்போவது ஒன்றுமில்லை என்பதை மனதில் நிறுத்தவேண்டும். வேலைகளை நிதானப்படுத்தும்போது, அதைக் கையாள்வது எளிதாக இருக்கும். அப்போதுதான் பணியாளர்களால், தவறுகள் ஏதுமில்லாத வேலையைக் குறித்த நேரத்துக்கு முன்பாகவே முடிக்க முடியும்.

### 6. விவேகத்துடன்கூடிய வேகம்!

எந்த நேரத்தில் நின்று நிதானமாக விளையாடவேண்டும், எந்த நேரத்தில் ஆட்டத்தை வேகப்படுத்த வேண்டும் என்ற சூட்சுமத்தை டோனி எப்போதும் அறிந்திருப்பார். அவருடைய வேகத்திலும் ஒரு விவேகம் இருக்கும். பல மேட்சுகளில் ஆரம்பத்தில் அவருடைய ஆட்டம் சைலென்ட்டாக இருந்தாலும், இறுதிக்கட்ட ஓவர்களில் ஒவ்வொரு பந்தும் சிக்ஸருக்கும் பவுண்டரிக்கும்தான் பறந்துகொண்டிருக்கும். நிலை அறிந்து சரியாக முடிவெடுக்கும் தன்மை, தலைமையிடத்தில் இருப்பவர்களுக்கு மிகவும் முக்கியம். அப்போதுதான், நடக்கவிருக்கும் அசம்பாவிதங்களை முன்னதாகவே தடுக்க முடியும்.

### 7. கலந்தாலோசித்து முடிவெடுப்பது!

ஆட்டத்தில் கடைப்பிடிக்கவேண்டிய முடிவுகளை குழுவில் இருக்கும் எல்லோருடனும் கலந்தாலோசிக்க தோனி என்றைக்குமே தவறியதில்லை. அப்படி கலந்தாலோசிப்பதால் ஏற்படும் நன்மைகளை அறிந்தவராகவே அவர் செயற்பட்டிருக்கிறார். அதேபோலத்தான் தலைமையிடத்தில் இருப்பவர்களும், பணிசார்ந்த எந்தவொரு விடயமாக இருந்தாலும் தனது குழு உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்து முடிவெடுக்க வேண்டும். அப்போதுதான் அதில் இருக்கும் நிறை–குறைகள் விவாதிக்கப்பட்டு, சரியான முடிவை எடுக்க முடியும்.

அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.



# டோனிக்கு பிரியாவிடை போட்டி

## — பி.சி.சி.ஐ. ஆர்வம்



முன்னாள் இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் மஹேந்திர சிங் டோனி கடந்த சனியன்று சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து திடீர் ஓய்வை அறிவித்த நிலையில், எம்.எஸ். டோனிக்கு பிரியாவிடை போட்டியை நடத்த ஆர்வமுடன் இருப்பதாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

எம்.எஸ்.டோனிக்கு பிரியாவிடை போட்டியொன்றை சொந்த ஊரான ஜார்கண்ட் மாநிலம் ராஞ்சியில் நடத்தவேண்டும் என ஜார்கண்ட் மாநில முதலமைச்சர் ஹேமந்த் சோரன், இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்நிலையில், இது குறித்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் நிர்வாகி ஒருவர் தெரிவிக்கையில், "டோனிக்கு பிரியாவிடை போட்டி நடத்தப்பட வேண்டும் என்பதே எங்களது விருப்பம். தற்காலத்தில் இந்திய அணிக்கு எந்த சர்வதேச போட்டிகளும் இல்லை. இந்தியன் பிரிமியர் லீக் தொடர் முடிந்த பின்னர் என்ன செய்யலாம் என்று பார்ப்போம்'' - என்றார்.

மேலும் தெரிவித்த அவர், "இந்திய கிரிக்கெட்டுக்காக டோனி அளப்பரிய பங்களிப்பு செய்துள்ளார். எல்லாவிதமான மரியாதைகளுக்கும் அவர் தகுதியானவர். ஆனால், டோனி வித்தியாசமான ஒரு வீரர். யாரும் நினைக்காத நேரத்தில் ஓய்வு அறிவிப்பை வெளியிட்டுவிட்டார். ஐ.பி.எல். தொடரின்போது அவரிடம் இதுபற்றி பேசுவோம். ஒரு ஆட்டத்திலோ அல்லது ஒரு தொடரிலோ பங்கேற்பது குறித்து அவரது கருத்தை அறிய சரியான இடம் அதுதான். அவர் ஒப்புக்கொள்கிறாரோ இல்லையோ, நிச்சயம் அவருக்கு முறைப்படி ஒரு பாராட்டு விழா நடத்தப்படும். அவரை நாங்கள் கௌரவப்படுத்துவோம்'' என தெரிவித்தார்.

# எக்காரணம் கொண்டும் செய்யக்கூடாது!

## — அஷ்வினுக்கு பொண்டிங் எச்சரிக்கை

'மன்கட்' (பந்துவீச்சாளர் பந்துவீசுவதற்கு முன்னர் எதிர் திசையிலுள்ள துடுப்பாட்ட வீரர் எல்லை கோட்டைவிட்டு வெளியேறுதல்) முறையில் எந்தக் காரணத்தைக்கொண்டும் ரன்-அவுட் ஆட்டமிழப்பு செய்யக்கூடாது என டெல்லி கெப்பிடல்ஸ் அணியின் தலைமை பயிற்சியாளர் ரிக்கி பொண்டிங் அணி வீரர் ஆர்.அஷ்வினுக்கு எச்சரித்துள்ளார்.

2019ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தியன் பிரிமியர் லீக் தொடரின்போது ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி வீரர் ஜோஸ் பட்லரை அப்போது கிங்ஸ் இலவன் பஞ்சாப் அணிக்காக விளையாடிய இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஆர்.அஷ்வின், மன்கட் முறையில் ரன்-அவுட் ஆட்டமிழப்பு செய்தமை பெரும் சர்ச்சையை கிளப்பியது.

"பந்து வீசும் முன்னர் துடுப்பாட்ட வீரர் எல்லை கோட்டைவிட்டு நகர்ந்தால் மீண்டும் இது போன்று ரன்-அவுட் ஆட்டமிழப்புச் செய்வேன். விதிமுறைப்படி இந்த ஆட்டமிழப்பு சரியே'' என்றவாறு அஷ்வின் கூறியிருந்தார்.

செப்டெம்பர் மாதம் 19ஆம் திகதி ஆரம்பமாகும் 13ஆவது இந்தியன் பிரிமியர் லீக் தொடரில் சுழற்பந்துவீச்சாளர் ஆர்.அஷ்வின் டெல்லி கெப்பிடல்ஸ் அணிக்காக களமிறங்குகிறார். இந்நிலையில், 'மன்கட்' முறையில் எந்தக் காரணத்தைக் கொண்டும் ரன்-அவுட் செய்யக்கூடாது என அணியின் தலைமை பயிற்சியாளர் ரிக்கி பொண்டிங் எச்சரித்துள்ளார்.

இது தொடர்பில் ரிக்கி பொண்டிங் கூறுகையில், "எங்களது கிரிக்கெட் அணுகுமுறையில் இது போன்ற ஆட்டமிழப்பு செய்வதற்கு இடமில்லை. அதை நாங்கள் செய்யமாட்டோம். அஷ்வின் அணியுடன் இணைந்ததும் முதல் விடயமாக இதுபற்றிதான் பேசப்போகிறேன். அது கடினமான விவாதமாக அமைந்திருக்கும். 'மன்கட்' முறைப்படி ஆட்டமிழப்பு நிகழ்த்துவது விதிமுறைக்குட்பட்டது என்று அவர் வாதிடலாம். ஆனால், அது விளையாட்டின் உண்மையான உத்வேகத்துக்கு அழகல்ல. குறைந்தது டெல்லி அணியினர் இந்த வழியை கடைபிடிக்கக்கூடாது என்று விரும்புகிறேன்''- என்றார்.








# டெல்லி அணியூடாக ஐ.பி.எல். அறிமுகம் பெறும் அன்ரிச் நோர்ட்ஜே

ஐக்கிய அரபு இராச்சியத்தில் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள 13ஆவது இந்தியன் பிரிமியர் லீக் தொடரில் டெல்லி கெப்பிடல்ஸ் அணியில் தென்னாபிரிக்க அணியின் இளம் வேகப்பந்துவீச்சாளர் அன்ரிச் நோர்ட்ஜே இணைக்கப்பட்டுள்ளார்.

டெல்லி கெப்பிடல்ஸ் அணியில் இணைக்கப்பட்டிருந்த இங்கிலாந்து அணியின் வேகப் பந்துவீச்சாளர் கிறிஸ்வோக்ஸ் இங்கிலாந்து அணியில் விளையாடவுள்ளதன் காரணமாக இந்தியன் பிரிமியர் லீக் தொடரிலிருந்து விலகினார். இதன் காரணமாக ஏற்பட்ட வெற்றிடத்திற்கு அன்ரிச் நோர்ட்ஜே இவ்வாறு இணைக்கப்பட்டுள்ளார்.

அன்ரிச் நோர்ட்ஜே முதல் முறையாக கடந்த ஆண்டு இந்தியன் பிரிமியர் லீக் தொடரில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியில் இணைக்கப்பட்டிருந்த போதும், தோற்பட்டை உபாதை காரணமாக தன்னுடைய கன்னி ஐ.பி.எல். போட்டியில் விளையாடும் வாய்ப்பை இழந்திருந்தார். இந்நிலையில், இந்த வருடம் ஐ.பி.எல். அறிமுகத்தை பெறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# 14 பேர் கொண்ட தேசிய விளையாட்டுச் சபை நியமனம்

## தலைவரானார் மஹேல !



இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவரும், கிரிக்கெட் ஜாம்பவான்களில் ஒருவருமான மஹேல ஜயவர்தன தேசிய விளையாட்டுச் சபையின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

குமார் சங்கக்கார மற்றும் மஹேல ஜயவர்தன ஆகியோருடன் அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடலின்போது புதிய விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தேசிய விளையாட்டுச் சபையில் இணையுமாறும் அழைப்பு விடுத்திருந்தார்.

இந்நிலையில் நேற்று விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவால் குறித்த சபையின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் தொடர்பில் அறிவிக்கப்பட்டது. அதன்படி தேசிய விளையாட்டுச் சபையின் தலைவராக மஹேல ஜயவர்தன நியமிக்கப்பட்டுள்ளார். குறித்த சபையில் மொத்தமாக 14 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சபையின் செயலாளராக மகளிர் டென்னிஸ் சம்பியன் தியுனி அபேசிங்க நியமிக்கப்பட்டுள்ளதுடன், உறுப்பினர்களாக இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவரும், கிரிக்கெட் ஜாம்பவான்களில் ஒருவருமான குமார் சங்கக்கார, ஜூலியன் போலிங் (நீச்சல் வீரர்), டிலன்த மலகமுவ (கார் ஜெனரல் சவேந்திர சில்வா (இராணுவத் தளபதி), யஸ்வந்த் முத்தித்துவேகம (கூடைப்பந்து வீரர்), மேஜர் ஜெனரல் ராஜித அம்பேமொஹட்டி (பரா ஒலிம்பிக்), கஸ்தூரி வில்சன் (ஹேமாஸ்), சஞ்ஜீவ விக்ரமநாயக்க (ஏவிஸ்), எதிரிசூரிய (பொது முகாமையாளர் - விளையாட்டுப் பிரிவு), ருவான் கெரகல (மாஸ்), ரொஹான் பெர்னாண்டோ (எஸ்.எல்.டி.), ரொவீனா சமரசிங்க (விளையாட்டு சட்டத்தரணி) ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

1973ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க விளையாட்டுச் சட்டத்தின்கீழ் இரண்டு ஆண்டுகளுக்கு இவர்கள் தேசிய விளையாட்டுச் சபை உறுப்பினர்களாக பணியாற்றவுள்ளனர்.

# சென்னை சுப்பர் கிங்ஸ் அணி இன்று டுபாய் பயணம்

## ஹர்பஜன் ஒரு வாரத்தின் பின்னரே பயணம்

இந்தியன் பிரிமியர் லீக் தொடரில் பங்கேற்கும் மஹேந்திர சிங் டோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணி இன்று டுபாய் நோக்கி பயணமாகவுள்ளது.

கடந்த மார்ச் மாதம் இந்தியாவில் பல்வேறு மைதானங்களில் ஆரம்பமாகவிருந்த இந்தியன் பிரிமியர் லீக் தொடரானது கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக பிற்போடப்பட்ட நிலையில், அடுத்த மாதம் ஐக்கிய அரபு இராச்சியத்தில் ஆரம்பமாகவுள்ளது. செப்டெம்பர் 19 முதல் நவம்பர் 10 வரை டுபாய், அபுதாபி மற்றும் ஷார்ஜாவிலுள்ள மைதானங்களில் போட்டிகள் நடைபெறுகின்றன.



இந்நிலையில், தொடரில் பங்கேற்பதற்காக சென்னை சுப்பர் கிங்ஸ் அணி இன்று டுபாய் நோக்கி பயணிக்கவுள்ளதாக தமிழ்நாடு கிரிக்கெட் சங்கச் செயலாளர் ராமசாமி தெரிவித்தார். 180 பேர் பயணிக்கும் விமானத்தில் 60 பேர் பயணம் செய்யவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதில் சென்னை அணியின் முன்னணி வீரரான ஹர்பஜன் சிங் இன்று டுபாய் பயணிக்கமாட்டார் என தகவல்கள் தெரிவிக்கின்றன. அவரது தாயாருக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டிருப்பதால் ஒரு வாரத்தின் பின்னரே டுபாய் செல்வார் எனத் தெரிகிறது.



# டோனிக்கு மஹேல புகழாரம்

இந்தியன் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும், விக்கெட் காப்பாளருமான மஹேந்திர சிங் டோனி சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வுபெற்றுள்ள நிலையில், இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவர் மஹேல ஜயவர்தன டோனிக்கு டுவிட்டர் மூலமாக வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் வரலாற்றில் தலைசிறந்த அணித்தலைவராக செயற்பட்டமை மாத்திரமல்லாமல் ஒரு சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் திகழ்ந்த எம்.எஸ்.டோனி கடந்த சனியன்று யாரும் எதிர்பாராத நிலையில் வித்தியாசமான முறையில் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்தார்.

இதனைத் தொடர்ந்து சாதனையாளரான டோனிக்கு இரசிகர்களினால் சமூக வலைத்தளம் மூலமாக வாழ்த்து மழை பொழியத் தொடங்கியது. பல்வேறு கிரிக்கெட் வீரர்களும் வாழ்த்துத் தெரிவித்தனர். இந்நிலையில், இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவர் மஹேல ஜயவர்தன டுவிட்டரில் டோனி குறித்து பதிவிட்டுள்ளார்.

அதில், "ஓர் அற்புதமான சர்வதேச கிரிக்கெட் உங்களுக்கு அமைந்ததற்கு வாழ்த்துகள் டோனி. உங்கள் எதிர்காலத்துக்கு வாழ்த்துகள். டோனி ஒரு சிறப்பான வீரர் மற்றும் அற்புதமான நபர்'' என புகழாரம் சூட்டியுள்ளார்.

# இலங்கை தோட்ட சேவையாளர் சங்க நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு

## கரப்பந்தாட்ட, வலைப்பந்தாட்ட போட்டிகள்

(கண்டி)

இலங்கை தோட்ட சேவையாளர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு நூற்றாண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு கடந்த திங்கட்கிழமை சங்க அங்கத்தினர்களுக்கிடையில் பெண்களுக்கு வலைப்பந்தாட்டப் சுற்றுப் போட்டியும், ஆண்களுக்கு கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.







பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியானது இராகலை தமிழ் மகா வித்தியாலய மைதானத்திலும் ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியானது ஹட்டன் தரவலை மைதானத்திலும் இடம்பெற்றன.

இதன் ஆரம்ப நிகழ்வு மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பிக்கப்பட்டது.

பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் அவிசாவளை கிளையின் பெண்கள் அணி வெற்றிபெற்றதுடன், ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் தலவாக்கலை கிளையின் ஆண்கள் அணி வெற்றிபெற்றது. வெற்றிபெற்ற இரு அணிகளுக்கும் அதிதிகளாகக் கலந்துகொண்ட சங்கத்தின் தலைவர் சத்துர சமரசிங்க, பொதுச் செயலாளர் நாத் அமரசிங்க ஆகியோர் கேடயங்களை வழங்கினர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7